www.onlineuthayan.com

பக்கங்கள் : 26

# உதயன்

சுடர் 27
கதிர் 233


வள்ளுவர் ஆண்டு 2043 ஆடி 01 திங்கட்கிழமை (16/07/2012) UTHAYAN - A Lively National Tamil Daily

## நல்லிணக்க ஆணைக்குழுவின்

# பரிந்துரைகளை இலங்கை அலட்சியம் செய்கின்றது

### மேற்குலக இராஜதந்திரி குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 16
கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளை நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கை அரசு இன்னமும் காத்திரமான நடவடிக்கைகளை முன்னெடுக்கவில்லை என பெயர் குறிப்பிட விரும்பாத மேற்குலக இராஜதந்திரியொருவர் குற்றச்சாட்டு தெரிவித்துள்ளார்.



நல்லிணக்க ஆணைக் குழுவின்விதப்புரைகளை நடைமுறைப்படுத்துவது குறித்து ஆலோசனைகளைப் பெறும் எல்லைக்குள்ளேயே அரசு நின்றுகொண்டிருக்கிறது என்றும், அதற்கும் அப்பால் சென்று பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தும் விடயத்தில் அது அசமந்தப் போக்கைக் கடைப் பிடித்துவருகின்றது என்றும் அவர் குற்றச்சாட்டு தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதியான அணுவிஞ்ஞானி அப்துல் கலாமை அழைத்து வந்து இலங்கை அரசு தடல்புடலான ஏற்பாடுகளைச்செய்து,மும்மொழிக் கொள் 04

## ஓய்வு பெறும் வயதை 60 ஆக உயர்த்த முடிவு

கொழும்பு, ஜூலை 16
அரச பணியாளர்களின் ஓய்வுபெறும்வயதெல்லையை 60 ஆக அதிகரிப்பதற்கு அரசு முடிவு செய்துள்ளது.

தற்போது இலங்கையில் அரச பணியாளர்களின் ஓய்வு பெறும் வயதெல்லை 55 ஆக உள்ளது. எனினும் 60 வயது வரை சேவை நீடிப்புப் பெறமுடியும்.எனினும், 57 வயதுக்குப் பின்னர் ஆண்டுதோறும் சேவை நீடிப்புக்குக் கோர வேண்டும்.

புதியதிட்டத்தின்படி,அரச பணியாளர்கள் 60 வயது வரை சேவை நீடிப்புக் கோராமலேயே பணியாற்ற முடியும்.

## ஆஸி. செல்ல முற்பட்ட 131 பேர் மடக்கிப் பிடிப்பு

கொழும்பு, ஜூலை 16
சட்டவிரோதமாக படகு மூலம் ஆஸ்திரேலியாவுக்குச் செல்ல முயன்ற 131 பேர் சிலாபத்தில் வைத்து பொலிஸாரால் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று அதிகாலை சிலாபம் - முன்னேஸ்வரம் பகுதியில் வைத்து 22 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் இரு முகவர்களும் ஓட்டோச் சாரதி ஒருவரும் அடங்குகின்றார்.

இரு முகவர்களும் ரிதிவெல்ல மற்றும் உடப்பு ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனவும் முகவர் ஒருவரிடம் இருந்து 04

## "தமிழீழம் மலர அனுமதியோம்"

கொழும்பு, ஜூலை 16
''இலங்கையில் தனி ஈழம் மலர்வதற்கு ஒரு போதும் இடமளிக்கமாட்டோம் என்பதை ஜெயலலிதா, கருணாநிதி, வைகோ ஆகிய தமிழகத் தலைவர்கள் புரிந்து கொள்ளவேண்டும். இரத்தம் சிந்தி மண்ணை மீட்டது கூறுபோடுவதற்காகவல்ல என்பதையும் சொல்லி வைக்க விரும்புகின்றோம்.''

- இவ்வாறு தமிழகத் தலைவர்களுக்கு எச்சரிக்கை விடுத்து 04

## சென்.ஜோன்ஸ் ஹென்றிஸ் முதலிடம்

யாழ்ப்பாணம், ஜூலை 16
அகில இலங்கை ரீதியான தமிழ்த் தினப் போட்டியில் சென்.ஜோன்ஸ் கல்லூரியும், இளவாலை ஹென்றிஸ் கல்லூரியும் முதலிடம் பெற்று சாதனை படைத்துள்ளன.

நேற்றும் நேற்றுமுன்தினமும் கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியில் நடைபெற்ற தேசிய மட்டப் போட்டிக 04

## இலங்கை அகதிகளை விரைவில் சுவீடனும் திருப்பி அனுப்பும்?

கொழும்பு, ஜூலை 16
சுவீடனிலுள்ள இலங்கை அகதிகளை விரைவில் திருப்பியனுப்ப அந்த நாட்டு அரசு தீர்மானித்துள்ளது என தகவல்கள் வெளியாகியுள்ளன.

தற்போது இலங்கையில் போர் நிறைவடைந்துள்ள நிலையில், போரைக் காரணம் காட்டி சுவீடனில் அகதி அந்தஸ்துக் கோரிய இலங்கையர்களை அங்கிருந்து வெளியேற்றத் தீர்மானித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

இது தொடர்பில் சுவீடனில் உள்ள இலங்கை அகதிகளுக்கு எழுத்து மூலமாக அறிவிக்கவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனினும், இலங்கையின் பாதுகாப்பு நிலவரங்கள் குறித்து சுவீடன் அரசு திருப்தி கொண்ட தன் பின்னர், இது குறித்து உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ங-சி)

## அல்வாயில் மூதாட்டி வெட்டிக் கொலை

யாழ்ப்பாணம், ஜூலை 16
பருத்துறை, அல்வாய்ப் பகுதியில் கூரிய ஆயுதத்தால் தலை வெட்டிப் பிளக்கப்பட்ட நிலையில் 83 வயது மதிக்கத்தக்க மூதாட்டி ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டது.

அதேஇடத்தைச் சேர்ந்த வேலாயு 04

## கட்சிக்குள் எழுந்துள்ள எதிர்ப்பால் மு.காவின் முடிவு மீள் பரிசீலனையில்

### இன்று அவசரமாகக் கூடுகிறது கட்சி உயர்பீடம்

கொழும்பு, ஜூலை 16
கிழக்கு மாகாணசபைத் தேர்தலில்அரசுடன்இணைந்து போட்டியிடுவதென்று ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஏற்கனவே தீர்மானித்திருந்த போதிலும் அத்தீர்மானம் இன்று மீள்பரிசீலனை செய்யப்படவுள்ளது.

அரசுடன் இணைந்து போட்டியிடுவதென்ற மு.காவின் தீர்மானத்தால் கட்சிக்குள்ளும் கட்சிக்கு வெளியே மக்கள் மத்தியிலும் எழுந்துள்ள எதிர்ப்பைத் தொடர்ந்தே மேற்படி தீர்மானம் மீள்பரிசீலனை செய்யப்படவுள்ளது என மு.கா. வட்டாரம் நேற்றுத் தெரிவித்தது.

இதற்காக கட்சியின் உயர்பீடம் இன்று காலை 10 மணிக்கு மீண்டும் அதன் தலைமையகமான தாருஸ்ஸலாமில் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீமின் தலைமையில் கூடுகின்றது. 04

## குன்னூர் மாநாட்டில் இலங்கை இராணுவமா?

### போர்க்கொடி தூக்கும் தமிழகக் கட்சிகள்

சென்னை, ஜூலை 16
குன்னூரில் உள்ள இராணுவ அதிகாரிகள் பயிற்சி மையத்தில் இன்று நடைபெறும் கருத்தரங்கில் இலங்கையைச் சேர்ந்த இராணுவ அதிகாரிகள் கலந்து கொள்வது குறித்து இந்தியாவில் தமிழ் ஆதரவுக் கட்சிகள் தமது எதிர்ப்பை வெளியிட்டுள்ளன.

குன்னூர் மெட்ராஸ் ரெஜிமெண்ட் மையத்தில் (எம்.ஆர்.சி.) கருத்தரங்கு நடைபெற உள்ளது. இந்தக் கருத்தரங்கில் பிரிட்டன், இலங்கை உள்ளிட்ட .10 நாடுகளைச் சேர்ந்த இராணுவ அதிகாரிகள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இலங்கை இராணுவத்தினருக்கு இந்தியாவில் பயிற்சி அளிக்கக் கூடாது என வலியுறுத்தி தமிழக முதல்வர் ஜெயலலிதா, தி.மு.க. தலைவர் மு.கருணாநிதி உள்ளிட்டோர் தமது எதிர்ப்பை தெரிவித்து வந்தனர்.

இந்தநிலையில் குன்னூரில் நடைபெறவுள்ள கருத்தரங்கில் இலங்கையைச் சேர்ந்த இராணுவ அதிகாரிகளை கலந்து கொள்ள அனுமதித்திருப்பது பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. (10)

## ஆளுநர் சந்திரசிறிக்கு மாரடைப்பு ஆபத்து என்று ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், ஜூலை 16
வடமாகாண ஆளுநரும், யாழ். மாவட்ட முன்னாள் கட்டளைத் தளபதியுமான மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி திடீரென ஏற்பட்ட மாரடைப்புக் காரணமாக யாழ். போதனா வைத்தியசாலையின் இருதய சத்திர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு பின் மேலதிக சிகிச்சைக்காக அவசர அவசரமாக கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டார்.



நேற்றுக் காலை கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன கலந்துகொண்ட பாடசாலைகளின் கட்டடத் திறப்பு விழா நிகழ்வுகளில் கலந்து கொண்ட ஆளுநர் திடீரென ஏற்பட்ட சுகயீனம் காரணமாக நண் 04

## இராமேஸ்வரம் மீனவர்களை விரட்டியடித்தது இலங்கை கடற்படை

கொழும்பு, ஜூலை 16
கச்சதீவுப் பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த இராமேஸ்வரம் மீனவர்களிடம் இருந்து இறால், மீன் வகைகள் உள்ளிட்டவற்றைப் பறித்துக் கொண்ட இலங்கைக் கடற்படையினர், அவர்களை விரட்டியடித்துள்ளனர் எனத் தமிழக நாளேடுகள் தெரிவித்துள்ளன.

கடந்த மாதம் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற இராமேஸ்வரம் பகுதி விசைப் படகு ஒன்று இயந்திரக் கோளாறு காரணமாக இலங்கைக் கடல்பகுதியில் ஒரு பகுதி நீரில் மூழ்கிவிட்டது. நேற்றுமுன்தினம் அந்தப் படகை மீட்பதற்காக இந்திய மீனவர்கள் இலங்கைக் கடல் பகுதிக் 04

## கோமா நிலை கைதியைப் பார்க்கத் தடை தமிழ்க் கூட்டமைப்பு சட்ட நடவடிக்கை

### நாடாளுமன்றிலும் பிரச்சினை கிளப்புவோம் என்கிறது கூட்டமைப்பு

கொழும்பு, ஜூலை 16
கோமா நிலையில் ராகம வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் சிகிச்சைபெற்றுவரும் தமிழ் அரசியல் கைதி டில்றுக்ஷனைப் பார்வையிடுவதற்கு வெளிநாட்டு இராஜதந்திரிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டத்தரணிகள் ஆகியோருக்கு அனுமதி மறுக்கப்படுகிறது என்றும், அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்று தெரிவித்துள்ளது.

தமிழ் அரசியல் கைதி டில்றுக்ஷன் சிகிச்சைபெற்று வரும் அறையைச் சூழ காவலாளிகள் 04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# அரசின் கபடச் சதுரங்க ஆட்டமே கிழக்கு மாகாண சபைத் தேர்தல்

## சாடுகிறார் சுமந்திரன் எம்.பி

அம்பாறை, ஜூலை 16

''அரசு அதன் அரசியல் சதுரங்கத்தில் ஓர் கபட நோக்கமாக கிழக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்தி சர்வதேசத்தை ஏமாற்ற முனைந்துள்ளது'' இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான எம்.ஏ. சுமந்திரன் கூறினார்.

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுதல் மற்றும் வேட்பாளர் தெரிவு தொடர்பான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மக்கள் கருத்தறியும் கூட்டமொன்று நேற்று (ஞாயிறு) கல்முனை மெதடிஸ்த மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயலாளரும் யாழ். மாவட்டப் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் கூட்டமைப்பு முக்கியஸ்தர்கள், ஆதரவாளர்கள் பெருமளவில் கலந்துகொண்டனர்.

கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த பலர் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் முடிவால் முஸ்லிம் மக்கள் மத்தியில் கொந்தளிப்பு ஏற்பட்டுள்ள நிலைமையை எடுத்துக்கூறி அவர்களது விருப்பின் படி முஸ்லிம்களையும், கூட்டமைப்பு வேட்பாளர் பட்டியலில் இணைத்துக் கொள்ள வேண்டுமென்ற அபிப்பிராயங்களை வெளிப்படுத்தினர்.

நாடாளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான சுமந்திரன் தொடர்ந்து உரையாற்றுகையில் பின்வருமாறு கூறினார்;

கிழக்கு மாகாண சபைக்கு முதுகெலும்புள்ள ஒரு முதலமைச்சர் இருந்திருந்தால் மாகாணசபையைக் கலைப்பதற்கு இணங்கியிருக்க மாட்டார்.

ஆனால் அரசு அதன் அரசியல் சதுரங்கத்தில் ஓர் கபட நாடகமாக இன்று மாகாண சபையைக் கலைத்து தேர்தலை நடத்துகின்றது.

சர்வதேச தரப்பிலிருந்து வடமாகாணசபைத் தேர்தலை நடத்துமாறு வரும் அழுத்தங்களைத் தணிக்கவும் சிறுபான்மை இனங்களுக்கு இங்கு எந்தப் பிரச்சினையுமில்லை என்பதை உணர்த்தவும், அரசு வெற்றி பெறுவதாகக் காட்டவுமே வஞ்சக நோக்குடனான இந்தத் தேர்தலை அரசு நடத்துகின்றது.

அதேபோல், மூன்று மாகாண சபைகளும் மூன்று ஆளுநர்கள், மூன்று முதலமைச்சர்களின் ஒரே சிந்தனையில் ஒரே நாளில் கலைக்கப்பட்ட விந்தையும் நடைபெற்றுள்ளது. சட்டவிரோதமாகக் கலைக்கப்பட்டுள்ளது.

**முஸ்லிம் மக்கள்**

முஸ்லிம் மக்களுக்கு மத்தியிலும் இன்று அரசின் மீதான வெறுப்பும் சந்தேகமும் இந்த நிலையில் எழுந்துள்ளது.

சிறுபான்மை எண்ணிக்கையான மக்களை, சிறுபான்மை தேசங்களை என்ன விதமாக அரசு ஆளுகை செய்கிறது என்பது முஸ்லிம் மக்களுக்குத் தெளிவாகத் தெரிகின்றது.

**மு.கா. தீர்மானம்**

இதன் காரணமாகத் தான் கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எடுத்துள்ள தீர்மானத்துக்கு எதிராக முஸ்லிம் மக்கள் மட்டுமன்றி, அவர்களது கட்சிக்குள்ளேயே எதிர்புக்குரல் எழும்பியுள்ளதுடன், வாதப் பிரதிவாதங்களும் உக்கிரமடைந்துள்ளன.

இதனால் இன்று ஒரு பத்திரிகையில் முஸ்லிம் காங்கிரஸ் உடைவதற்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உடைவதற்கும் சாத்தியக்கூறு உண்டென எழுதியுள்ளனர்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஒருபோதும் உடையப் போவதில்லை. அதே வேளை முஸ்லிம் காங்கிரஸ் உடைவதும் எமக்கு விருப்பமில்லை. இதனைப் பகிரங்கமாகவே சொல்ல விரும்புகின்றோம்.

ஆனால் முஸ்லிம் மக்களுடைய விருப்பத்திற்கு, அவர்களது ஆதங்கத்திற்கு எதிரான ஒரு தீர்மானத்தையே, மாகாணசபைத் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் தலைமைத்துவம் இப்பொழுது எடுத்துள்ளதென்பது முஸ்லிம் காங்கிரஸ் தலைமைத்துவத்திற்கே தெரியும்.

எனவே முஸ்லிம் மக்களோடு எமக்கிருக்கும் உறவில், அதனைக் கவனமாகப் பாதுகாக்க வேண்டிய உறவு என்ற வகையில் அவர்களுடைய சுய சிந்தனைப்படி அவர்கள் செயற்பட வேண்டும், அதேவேளை அவர்களுக்குப் பாதகமாகவும் எமக்குப் பாதகமாகவும் செயற்படாமலிருப்பதுடன், அதற்கான விதிமுறைகளைக் காண்பதும் முக்கியமாகும்.

இந்த வகையில் இங்கு தெரிவிக்கப்பட்ட முஸ்லிம்கள் தொடர்பிலான கருத்துக்கள் ஆக்கபூர்வமாகவும், சந்தோஷமாகவும் அமைந்திருந்தன.

**தனித்துப்போட்டி**

முஸ்லிம் காங்கிரஸ் தனித்துப் போட்டியிட்டிருந்தால் தேர்தல் முடிவு வருகின்ற போது கிழக்கில் அரசுக்குரிய வாக்கு எவ்வளவென்று உலகிற்கு நாம் காட்டியிருக்கலாம். நாம் கேட்டுக்கொண்டதெல்லாம் அதுவேதான்.

ஆனாலும் இப்பவும் அரசின் நிலையை நாம் உலகுக்குக் காட்டலாம். எவ்வளவு தான் இதுவொரு பின்னடைவாக இருந்தாலும் நாம் இதனால் சலித்துப் போய்விடவேண்டிய அவசியமில்லை.

**நிதானமாக, பக்குவமாக**

இன்று தமிழ் மக்களுடைய தேசிய நலனும் முஸ்லிம் மக்களுடைய தேசிய நலனும் பிரதானமாகவுள்ளது. இந்த இரண்டையும் ஒன்றாகச் சேர்த்து முன்னகர்த்த வேண்டிய பாரிய பொறுப்பு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிடம் கொடுக்கப்பட்டுள்ளது.


நாம் நிதானமாகப், பக்குவமாக, கவனமாக முஸ்லிம் மக்களோடு சேர்ந்து நடக்கக் கூடாத- ஆனால் நடத்தப்படுகின்ற இந்தத் தேர்தலைச் சந்தித்து, இதில் நாம் வெற்றி பெறுவோமானால் இதுதான் இந்த அரசாங்கத்தினது வீழ்ச்சியின் முதற்படியாகவிருக்கும்.

அப்படியானதொரு சரித்திர நிகழ்வை செய்து காட்டும் சந்தர்ப்பம் கிழக்குமாகாண மக்களுக்குக் கிடைத்துள்ளது. இந்த அரசு மாற்றப்படுவதற்கு நடைபெறவிருக்கும் கிழக்கு மாகாண சபைத் தேர்தல் அமைய வேண்டும்.

அந்த விதத்தில் நிதானமாகவும் பக்குவமாகவும் கவனமாகவும் முஸ்லிம் சகோதரர்களோடு இணைந்து செயற்பட்டு, அப்படியானதொரு வெற்றியை ஈட்ட வேண்டுமென மீண்டும் கூறுகின்றேன். இதில் முழுமூச்சாக நாம் அனைவரும் ஈடுபடுவோம்.

இன்றைய காலகட்டத்தில் ஜனநாயகத்திற்கு அரசு செய்துள்ள குந்தகங்களை இந்தத் தேர்தல் மூலம் வெளியுலகிற்கு எடுத்துக்காட்டுவோம் - என்றார். (30)

# சந்திரகுமார் எம்.பியின் பஜிரோவுடன் மோதிய ஓட்டோ சாரதி படுகாயம்




யாழ்ப்பாணம், ஜூலை 16

நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமாரின் பஜிரோ வாகனம் வைத்திய சாலைக்குள் திடீரென நுழைய முயன்றதால் வீதியால் வந்த ஓட்டோ கட்டுப்பாட்டை இழந்து மோதியதில் ஓட்டோவின் முன்பக்கம் முழுமையாக சப்பளிந்து அதிலிருந்த சாரதி படுகாயமடைந்தார்.

நேற்றுப் பிற்பகல் மூன்று மணிக்கு யாழ். போதனா வைத்தியசாலைக்கு முன்பாக இடம்பெற்ற இந்த விபத்தில் சாவகச்சேரியை சேர்ந்த சபேசன் (வயது- 31) என்பவரே படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இது குறித்து மேலும் தெரியவருவதாவது-

வடமாகாண ஆளுநர் சந்திரசிறி மாரடைப்பால் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருப்பதை அறிந்த நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் நேற்றுப் பிற்பகல் வைத்தியசாலைக்கு ஒடோடி வந்தார். அவர் இறங்கிச் சென்றவுடன் அவர் பயணம் செய்த பஜிரோ வாகனம் வேம்படிச் சந்தியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிவந்து கொண்டிருந்த ஓட்டோ சாரதி எதிர் பார்க்காததால், வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் பஜிரோவுடன் பக்கவாட்டில் மோதியது.

சம்பவம் இடம்பெற்ற போது நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் வாகனத்தில் இருக்கவில்லை.

சம்பவத்தை தொடர்ந்து அங்கு கூடிய பொதுமக்கள் வாகன சாரதியைத் தாக்க முற்பட்டதாகவும் எனினும் அங்கு வந்த பொலிஸார் நிலைமையைக் கட்டுக்குள் கொண்டுவந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. சம்பவம் நடைபெற்று முடிந்த பின்னர் அந்த இடத்துக்கு வந்த நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் பாதிக்கப்பட்ட ஓட்டோ சாரதிக்கு நிவாரணம் வழங்கும் வகையில் நடந்து கொள்ளவில்லை என சம்பவ இடத்தில் நின்றவர்கள் தெரிவித்தனர். (ங-10-4)

## புலமைச்சுடர்

வழமையாக திங்கட்கிழமைகளில் வெளிவரும் தரம் 5 மாணவர்களுக்கான விசேட கையேடான 'புலமைச்சுடர்' (42 ஆவது வெளியீடு) தவிர்க்க முடியாத காரணத்தினால் இந்த வாரம் மேலதிக விசேட ஆக்கங்களுடன் புதன்கிழமை வெளிவரும் என்பதை தெரிவித்துக்கொள்கின்றோம்

- புலமைச்சுடர் ஆசிரியர்-

(F/1302) (15.7)

# வேலைவாய்ப்பு, உயர்கல்விக்காக பிறநாட்டு மொழிகளும் அவசியம்

## கட்டடத் திறப்பு விழாவில் கல்வி அமைச்சர் உரை

யாழ்ப்பாணம், ஜூலை 16

வேலை வாய்ப்பு, மேற்கல்வி என பல காரணங்களுக்கென தற்போது பிறநாட்டு மொழிகளையும் மாணவர்களுக்கு கற்கவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. 2014 ஆம் ஆண்டில் ஜீ.சி.ஈ சாதாரண தர மாணவர்களுக்கு கொரிய மொழிப்பரீட்சை நடத்தப்படவுள்ளது. அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் நிர்மாணிக்கப்பட்ட மாடிக்கட்டடங்களை திறந்து வைக்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்-

பன்னாட்டு மொழிகளையும் தொழில் நுட்பங்களையும் கற்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. 50 ஆயிரம் பேர் வரை கொரிய மொழி பயின்று வேலைகளுக்கு சென்றுள்ளனர்.

2014 ஆம் ஆண்டு ஜீ.சி.ஈ சாதாரண தரம் கற்கும் மாணவர்களுக்கு கொரிய மொழிப் பயிற்சி வழங்கப்படும். பரீட்சையும் நடக்கும். அதற்குரிய நாட்டிலிருந்து 5 ஆசிரியர்களை அழைத்து மொழியியல் கல்லூரிகளில் கற்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும். அடுத்த வருடம் மொழியியல் கற்கை நெறிகளை ஆரம்பிப்பது தொடர்பில் ஆராயப்படும்.

சற்றலைட் மூலமாக வெளிநாட்டுக் கல்வியை எமது மாணவர்களுக்கு வழங்க வேண்டிய நிலையில் உள்ளோம். எமது உறவினர்கள், நண்பர்கள் என 30 லட்சத்துக்கு மேற்பட்டோர் கல்வி, வேலைவாய்ப்பு என்பவற்றுக்காக வெளிநாடுகளில் உள்ளனர்.

நாட்டில் 10 ஆயிரத்துக்கு மேற்பட்ட பாடசாலைகள் உள்ளன. அவற்றில் கல்வித்துறையை மேம்படுத்துவதற்கு சிறந்ததாக 56 பாடசாலைகளே உள்ளன. இவற்றில் 25 பாடசாலைகள் மேல் மாகாணத்திலேயே உள்ளன. வடமாகாணத்தில் 3 பாடசாலைகள் உள்ளன. அந்த மூன்று பாடசாலைகளுக்கு பதிலாக 125 பாடசாலைகளே உருவாக்க வேண்டும். நவீன தொழில் நுட்பம் கூடியதாக ஒரு பாடசாலை கூட வடக்கில் இல்லை. கொழும்பில் மாத்திரமே ஒரு பாடசாலை உள்ளது.

தொழில்நுட்ப, கணிதவியல், மனையியல், விஞ்ஞானவியல் சார்ந்த அனைத்து விடயங்களையும் கற்கவேண்டும். அதற்கான வசதிகள் படிப்படியாக மேற்கொள்ளப் படுகிறது. என்று அவர் மேலும் தெரிவித்தார்.

ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் நிர்வாக அலகு, விஞ்ஞான பீடம், விவசாய பீடம், மனைப்பொருளியல் பிரிவு, வகுப்பறைகள் மற்றும் இதர வசதிகளைக் கொண்டதாக 3 மாடி மற்றும் இரண்டு மாடிக் கட்டமாக நேற்று திறந்து வைக்கப்பட்டன. கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன முன்னிலையில் இரண்ட கட்டடத்தொகுதிகளும் பாடசாலை சிறுவர்களால் திறந்து வைக்கப்பட்டன.

கல்லூரி அதிபர் ஆறு திருமுகன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறி, சந்திரகுமார் எம்.பி, கல்வி அதிகாரிகள், ஆசிரியர்கள், மாணவர்கள், நலன்விரும்பிகள் , பலரும் கலந்து கொண்டனர்.

தவிர கல்லூரியில் தொழில் நுட்பம் உட்பட சில பிரிவுகளுக்கான 60 அடி உயரக் கட்டடமொன்று நிர்மாணிப்பதற்காக கல்வி அமைச்சர் அடிக்கல்லும் நாட்டி வைத்தார்.

இதேபோன்று சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரியிலும் நிர்மாணிக்கப்பட்ட மாடிக்கட்டடங்கள் மூன்றினையும் கல்வி அமைச்சர் திறந்து வைத்தார். தொழில் நுட்ப ஆய்வு கூடத்திற்கென புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ள கட்டடத்துக்கென அமைச்சர் அடிக்கல்லும் நாட்டி வைத்தார். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திறந்த வாகனங்களில் கழிவகற்றல் துர்நாற்றத்தால் மக்கள் அவதி

கொழும்புத்துறைஜூலை16

யாழ்.மாநகர சபையின் கழிவகற்றும் வாகனங்கள் திறந்த நிலையில் துர்நாற்றம் வீசும் கழிவுகளை எடுத்துச் செல்வதால் மக்கள் சுகாதார பிரச்சினைகளையும் அசௌகரியங்களையும் எதிர்நோக்குவதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

மக்கள் செறிந்து வாழும் யாழ்.நகரப் பகுதிகளின் வீதிகளூடாகத் திறந்த நிலையில் உள்ள கழிவகற்றும் உழவு இயந்திரங்களில் சில நாள்களாக அகற்றப்படாத மாமிசக் கழிவுகளை எடுத்துச் செல்லும்போது துர்நாற்றம் வீசுவதால் மக்கள் மூக்கைப் பொத்தியபடி பயணிக்கின்றனர்.

இவ்வாறான மாமிசக் கழிவுகளை எடுத்துச் செல்வதற்கு என்றாலும் மூடிய கழிவகற்றும் வாகனங்களைப் பயன்படுத்துமாறு மக்கள் கூறுகின்றனர். (ம-135)

## விமோசனம் எப்போது...?



கடந்த கால போர் இடர்களால் முற்றுமுழுதாக சேதமடைந்த நிலையில் காணப்படும் கைதடி முதியோர் இல்லத்தின் ஏழாம் இலக்க ஆண்கள் விடுதி. (ம-17)

### வாகன சுத்திகரிப்பு நிலையம்

## விதிமுறைக்கு மாறாக இயங்கியதால் அவகாசம்

மானிப்பாய் நகரில் சுற்றுச்சூழலுக்குப் பங்கம் ஏற்படுத்தும் வகையிலும் சுகாதார விதிமுறைகளுக்கு முரணாகவும் இயங்கி வரும் வாகன சுத்திகரிப்பு நிலையத்தை மாற்றி அமைப்பதற்கு ஒரு மாத காலம் அவகாசம் வழங்கியுள்ளது வலி. தென்மேற்குப் பிரதேச சபை.

தவறும் பட்சத்தில் சபையின் சட்டதிட்டத்துக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் மானிப்பாய் பட்டினத்தில் யாழ்ப்பாணம், காரைநகர் செல்லும் பிரதான வீதியில் அமைக்கப்பட்டுள்ள வாகன சுத்திகரிப்பு நிலையத்தால் சுற்றுச் சூழலுக்குப் பங்கும் ஏற்படுவதுமட்டுமல்லாமல் சுகாதாரத்துக்கும் ஆபத்து ஏற்படுகிறது.

வாகனத்தைச் சுத்திகரிக்கும் கழிவுநீர் ஓரிடத்தில் தேங்கி நிற்பதால் நுளம்புகள் உற்பத்தியாவதற்கு வாய்ப்பு ஏற்படுகின்றது. அதுமட்டுமன்றி வீதியால் செல்பவர்களுக்கும் இடையூறு ஏற்படுகின்றது.

இந்த நிலை குறித்து பிரதேச சபையிடம் பொது மக்கள் முறைப்பாடு செய்ததைத் தொடர்ந்து சுத்திகரிப்பு நிலையத்தை நேரில் சென்று பார்வையிட்ட உறுப்பினர்கள், சுகாதார விதிமுறைகளுக்கு ஏற்றவாறு மாற்றியமைப்பதற்கு ஒரு மாத காலம் அவகாசம் வழங்கினர். (ம-115)

## பளைப் பிரதேச மக்களுக்கு மின்சாரம் பெற கட்டணம் இல்லை

பளை, ஜூலை 16

பளைப் பிரதேச மக்கள் மின்விநியோகம் பெறுவதற்கு பணம் செலுத்த வேண்டாம் என்று யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் தெரிவித்தார்.

கடந்த வாரம் நடைபெற்ற மக்களுடனான சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

பளைப் பிரதேசத்துக்கு லக்ஸபான மின்விநியோகம் வழங்கப்பட்டபோதிலும் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் தமக்கு மின் இணைப்பு பெற்றுத் தருமாறும் மின்விநியோகம் பெறுவதற்குப் பணம் செலுத்துமாறு இலங்கை மின்சார சபையினர் கேட்பதாகவும் மக்கள் தெரிவித்தனர்.

அப்போது உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு இலவசமாக மின்சாரம் வழங்குவது தற்காலிகமாக நிறுத்தப்பட்டுத் தற்போது அது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதால் மின்சாரத்துக்கு யாரும் பணம் செலுத்த வேண்டாம். விரைவில் அனைவருக்கும் இலவசமாக மின்சாரம் வழங்கப்படும் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை, கெற்பேலி தரவைப் பகுதியில் வசிக்கும் மக்களும் தமக்கு வடக்கின் வசந்தம் திட்டத்தின்கீழ்இலவசமின்இணைப்பு வழங்குமாறு பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ விடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தப் பகுதிக்கு மின் விநியோகம் வழங்குவதற்கான கம்பங்கள் நடப்பட்டு கம்பிகளும் பொருத்தப்பட்டுள்ளன. அங்கு வாழும் மக்கள் மின் இணைப்பு வழங்குமாறு இலங்கை மின்சார சபையுடன் தொடர்பு கொண்டபோது மின் இணைப்புக்குரிய பணம் செலுத்துமாறு கோருகின்றனர்.

கஷ்ட நிலையில் வாழும் விவசாயிகளான இந்தப் பகுதி மக்களுக்கு வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் இலவச மின் இணைப்பு வழங்குமாறு பொருளாதார அபிவிருத்தி அமைச்சருக்கு அறிவித்து அதன் பிரதிகளை யாழ்.மாவட்ட அரச அதிபர், தென்மராட்சி பிரதேச செயலர் ஆகியோருக்கும் அனுப்பியுள்ளனர். (ம-9)

# சீரற்ற மின் விநியோகத்தால் சிரமத்தில் பாவனையாளர்

### மீண்டும் விளக்குகளை நாடும் நிலை

*யாழ்ப்பாணம், ஜூலை 16*

*யாழ். குடாநாட்டில் தொடரும் சீரற்ற மின்சாரத்தால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். இந்த நிலையில் மீண்டும் மண்ணெண்ணெய் விளக்குகளுக்கு நாட்டம் காட்டியுள்ளனர்.*

வீதி அகலிப்பு பணிப்பாக வீதியோரம் உள்ள மின்கம்பங்கள் பின்தள்ளி நடப்பட்டு வருவதாலும் திருத்தப் பணிகளுக்காகவும் மின்சாரம் அடிக்கடி துண்டிக்கப்படுகிறது. இதனால் குடாநாட்டு மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

குறிப்பாக இரவு நேரங்களில் இடம்பெறும் சீரற்ற மின்சாரத்தால் மக்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. இந்த நிலையில் மாணவர்கள் கற்றல் செயற்பாட்டுக்காகக் குப்பி விளக்குகளை நாட வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, ஓகஸ்ட் மாதத்தில் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை மற்றும் உயர்தரப் பரீட்சைகள் என்பன ஆரம்பமாகவுள்ள நிலையில் இந்தச் செயற்பாட்டால் மணவர்களே பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் மாணவர்கள் இரவில் தமது பரீட்சைக்குத் தயாராவதற்கான கற்றல் செயற்பாடுகளை இந்த சீரற்ற மின்சார விநியோகத்தால் மேற்கொள்ள முடியாது சிரமப்பட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் குடாநாட்டு மாணவர்கள் மீண்டும் மண்ணெண்ணெய் விளக்குகளைப் பயன்படுத்தி வருகின்றனர்.

இந்த சீரற்ற மின்சாரத்தாலும் இரவு வேளையில் திடீரென துண்டிக்கப்படுவதாலும் பரீட்சைக்கான கற்றல் நடவடிக்கை பாதிக்கப்பட்டிருப்பதாக மாணவர்கள் கவலையுடன் தெரிவித்தனர். (ம-17)

## சிறுபோக வெங்காயச் செய்கை ஆரம்பம்

வடமராட்சி,ஜூலை 16

அல்வாய், திக்கம் பகுதியில் சிறுபோக வெங்காயச் செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் அந்தப் பகுதியில் கால்நடைகளைக் கட்டி வளர்க்குமாறு திக்கம் விவசாய சம்மேளனம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

வெங்காயத்துக்கு தற்போது நல்ல விலை கிடைத்து வருவதால் இந்த முறை அதிக எண்ணிக்கையாள விவசாயிகள் சிறுபோக வெங்காயச் செய்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த நிலையில் கால்நடை வளர்ப்போர் மேய்ச்சலுக்காக கால்நடைகளை மேயவிடுவதால் சிறுபோக வெங்காயச் செய்கை பாதிப்படையலாம் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது.

இதனைக் கருத்தில் கொண்டு கட்டாக்காலிகளான ஆடு, மாடுகளைக் கட்டி வளர்த்து விவசாயிகளை வெங்காயச் செய்கையில் ஊக்குவிக்குமாறு விவசாய சம்மேளனம் கால்நடை வளர்ப்போரைக் கோரியுள்ளது. (ம-8)



மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் திருக்கார்த்திகைத் திருவிழா நேற்று முன்தினம் சிறப்பாக நடைபெற்றது. முருகப் பெருமான் மஞ்சத்தில் வீதியுலா செல்வதையும் பக்தர்கள் [illegible] செல்வதையும் படங்களில் காணலாம். (அ-86)

## நிகழ்வுகள் இன்று

**நூல் வெளியீடு**

சாவகச்சேரி இந்துக் கல்லூரி உயர்தர வர்த்தக பாட மாணவர் மன்றத்தினரின் 'இந்து வணிகன்' நூல் வெளியீட்டு விழா பிற்பகல் ஒரு மணிக்கு கல்லூரி மண்டபத்தில் இடம்பெறும். கல்லூரி வணிக மாணவர் மன்றத் தலைவர் ச.யதர்ஷன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ்.பல்கலைக் கழக முகாமைத்துவ கற்கை வணிக பீடாதிபதி பேராசிரியர் கலாநிதி தி.வேல்நம்பியும் சிறப்பு விருந்தினராக யாழ்.பல்கலைக் கழக பொருளியல் துறை விரிவுரையாளர் சி.உதயகுமாரும் கலந்துகொள்வர். (ம-9)

**திறப்பு விழா**

வடமராட்சி கிழக்கு ஆழிய வளைகலைவாணி முன்பள்ளியின் புதிய கட்டடத் திறப்பு விழாவும் விளையாட்டுப் போட்டியும் பிற்பகல் 2 மணிக்கு அருணோதயா விளையாட்டு மைதானத்தில் வி. ஜெயபாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெறவுள்ளன. (ம-8)

**செயலமர்வு**

தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடத்தும் க.பொ.த. உயர்தரம் (தரம்-13) மாணவர்களுக்கான புவியியல் பாட செயலமர்வு காலை 8.30 மணிக்கு வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நடைபெறவுள்ளது. (ம-14)

**பரிசளிப்பு விழா**

கொக்குவில் இந்துக் கல்லூரியின் பரிசளிப்பு விழா பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. கல்லூரி அதிபர் எ.அகிலதாஸ் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண நீர்ப்பாசனத்திணைக்கள பிரதிப் பணிப்பாளர் வேலுப்பிள்ளை பிறேம்குமார் கலந்துகொள்வார். (ம-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மு. காவின் முதலமைச்சர் வேட்பாளர் பைசால் காசீம்?

கிழக்கு மாகாண சபை தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கரஸின் முதலமைச்சர் வேட்பாளராக நாடாளுமன்ற உறுப்பினர் பைசால் காசீம் களமிறங்கவுள்ளார் என நம்பத் தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கட்சி தலைமையகமான தாருஸ்ஸலாமில் இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ள அதியுயர் பீட கூட்டத்தினை அடுத்து, கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்காக நாடாளுமன்ற உறுப்பினர் பதவியினை பைசால் காசீம் இராஜினாமா செய்வார் என எதிர்பார்க்கப்படுவகவும் முஸ்லிம் காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

தனது சொந்த ஊரான நிந்தவூரில் தங்கியிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் பைசால் காசீம் கட்சி தலைவர் ரவூப் ஹக்கீம் அழைப்பினையடுத்து, ஹெலிக்கப்பட்டர் மூலம் நேற்றுப் பிற்பகல் கொழும்பு சென்றுள்ளார்.

## ஆளுநர் சந்திரசிறிக்கு மாரடைப்பு ஆபத்து என்று ஆஸ்பத்திரியில்

01 பகல் 12.30 மணியளவில் யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். அவருக்கு இருதய சத்திர சிகிச்சைப் பிரிவில் அவசர சிகிச்சை அளிக்கப்பட்டது. எனினும் அவரது உடல்நிலையில் முன்னேற்றம் தென்படாததால் அங்கிருந்து பலாலி இராணுவ வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். அதன் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக பிற்பகல் 3.30 மணியளவில் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

கடந்த இரு நாள்களாக சுகயீனம் காரணமாக ஆளுநரின் உடல்நிலை பாதிக்கப்பட்டிருந்ததாகவும் இந்த நிலையிலேயே அவருக்கு நேற்று திடீரென மாரடைப்பு ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஆளுநருக்கு இப்போதே முதல்முறையாக மாரடைப்பால் தாக்கம் ஏற்பட்டுள்ளது என்றும் அவரது உடல் நிலை இன்னமும் ஆபத்தான கட்டத்தில் உள்ளது எனவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

(ந-16)

## அல்வாயில் மூதாட்டி வெட்டிக் கொலை

01 தம் வள்ளிப்பிள்ளை (வயது-83) என்பரேஇவ்வாறு கொடூரமான முறையில் வெட்டிக் கொலை செய்யப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டவராவார்.

வீட்டில் தனிமையில் இருந்த இவர் நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் வெட்டிக் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது. நேற்று அதிகாலை மூதாட்டியின் சடலத்தைக் கண்ணுற்ற அயலவர்கள் இது குறித்து பருத்தித்துறை பொலிஸாருக்கு அறிவித்தனர். இதனை அடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். குறித்த வயோதிபப் பெண் அணிந்திருந்த நகைகள் எதுவும் அபகரிக்கப்படாத நிலையில் காணப்பட்டதாகவும், எனவே திருட்டுக்காக கொலை இடம் பெற்றிருப்பதற்கு வாய்ப்பில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பாக இதுவரை எவரும் கைதுசெய்யப்படவில்லை எனத் தெரியவருகின்றது. நேற்று மாலை சம்பவ இடத்துக்குச் சென்ற பருத்தித்துறை நீதிவான் மற்றும் யாழ். வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரி ஆகியோர் விசாரணைகள் மேற்கொண்டதை அடுத்து சடலம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(ந-16-5-8)

## பரிந்துரைகளை இலங்கை அலட்சியம் செய்கின்றது

01 கையைஅமுல்படுத்தினாலும் அதில் நம்பத் தகுந்த முன்னேற்றம் எதுவும் இல்லை எனக் கூறப்படுகின்றது.

அத்துடன், 13ஆவது அரசமைப்பு அமுலாக்கம், தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை விவகாரம் ஆகியன ஆணைக்குழுவின் பரிந்துரைகளுள் முக்கியமானவையாக இருந்தாலும், இவற்றை அமுல்படுத்துவதற்கு அரசு முன்வரத் தயங்குகின்றது எனச் சுட்டிக்காட்டும் உள்நாட்டு அரசியல் ஆய்வாளர்கள், தீர்வை நோக்கிப் பயணிக்கவேண்டிய தருணத்தில் அரசு காலத்தை இழுத்தடிக்கும் கைங்கரியத்தைப் பின்பற்றிவருகின்றது என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

சமீபத்தில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 19 ஆவது கூட்டத்தொடரில் இலங்கை விவகாரம் தொடர்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திலும் ஆணைக்குழுவின் விதப்புரைகளை விரைந்து அமுல்படுத்துமாறே பிரதானமாக வலியுறுத்தப்பட்டுள்ளது. ஆனால், இது விடயத்தில் அரசு அக்கறை செலுத்துவதாகத் தெரியவில்லை.

அது மட்டுமன்றி, நல்லிணக்க ஆணைக் குழுவின் சிபார்சுகளை அமுல்படுத்த இலங்கை அரசு முன்வராமையானது, அதற்கு நவம்பரில் நடைபெறவுள்ள ஜெனிவா மனித உரிமை மீளாய்வுக் கூட்டத்தொடரில் பாரிய நெருக்கடியாக அமையுமென சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதேவேளை, நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபார்சுகளை மூன்று கட்டங்களாகப் பிரித்து அவற்றைப் படிப்படியாக நிறைவேற்றுவோம் என்றும், அறிக்கையிலுள்ள அனைத்து விதப்புரைகளையும் அமுல்படுத்த முடியாது என்றும் அரசதரப்பு கூறுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

## ஆஸி. செல்ல முற்பட்ட 131 பேர் மடக்கிப் பிடிப்பு

01 2,94,000 ரூபா பணம் கைப்பற்றப்பட்டுள்ளது எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

ஆஸ்திரேலியா நோக்கிச் செல்லவிருந்தவர்கள் யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத் தீவு மாவட்டங்களைச் சேர்ந்தவர்களாவர்.

இதேவேளை, படகு மூலம் ஆஸி. செல்ல முயன்ற 8 சிங்களவர்கள் உட்பட 109 பேரை திருகோணமலை கடற்பகுதியில் கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

இந்த றோலர் படகு நேற்றுமுன்தினம் இரவு திருகோணமலை துறைமுகத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளதுடன் கைதுசெய்யப்பட்டவர்கள் குற்றப்புலனாய்வுப் பிரிவினரிடம் மேலதிக விசாரணைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

ஜூலை 13 ஆம் திகதி 41 பேர் திருகோணமலையிலிருந்து 15 கடல்மைல் தொலைவில் கைதுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## இராமேஸ்வரம் மீனவர்களை விரட்டியடித்தது இலங்கை கடற்படை

01 குச் சென்றனர்.

அவர்களின் படகை மீட்டு சர்வதேச கடல் எல்லையில் விட்டுச்சென்ற இலங்கைக் கடற்படையினர், தங்கள் பகுதிக்குத் திரும்பும்போது, கச்சதீவுக் கடற்பகுதியில் இராமேஸ்வரம் மீனவர்கள் சிலர் மீன்பிடிப்பதைப் பார்த்துள்ளனர். இதனால் அவர்கள் வானத்தை நோக்கித் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்ததுடன், இராமேஸ்வரம் மீனவர்களின் படகில் இருந்த மீன் வலைகளைப் பறித்துக் கொண்டு விரட்டியடித்தனர்.

இதனால் வெறுங்கையுடன் மீனவர்கள் கரை திரும்பினர். இதனால் இராமேஸ்வரம் பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

## சென்.ஜோன்ஸ் ஹென்றிஸ் முதலிடம்

01 ளில் வில்லுப் பாட்டு நிகழ்வில் சென்.ஜோன்ஸ் கல்லூரி முதலிடத்தைத் தனதாக்கிக் கொண்டது. 2010, 2011 ஆம் ஆண்டுகளிலும் சென்.ஜோன்ஸ் கல்லூரியே தேசிய ரீதியில் முதலிடம் பெற்றிருந்தது. இந்தமுறையும் முதலிடம் பெற்று வில்லுப் பாட்டு நிகழ்வில் ஹட்ரிக் சாதனையை அந்தக் கல்லூரி புரிந்துள்ளது.

அத்துடன் நாடகப் போட்டியில் இளவாலை சென்.ஹென்றிஸ் கல்லூரி முதலிடத்தை சுவீகரித்துக் கொண்டுள்ளது.

இதேவேளை கொழும்பு தமிழ் சங்கத்தில் இன்று நடைபெறவுள்ள நிகழ்வில் தேசிய ரீதியில் முதலிடம் பெற்ற சென்.ஜோன்ஸ் கல்லூரிமாணவர்களின்வில்லிசை நிகழ்வு நடைபெற ஏற்பாடாகியுள்ளது. (ந-23-130-86)

## தமிழீழம் மலர அனுமதியோம்

01 காரசாரமாக - கடுந்தொனியில் முழங்கியுள்ளது தேசப் பற்றுள்ள தேசிய இயக்கம்.

கனவில் கூட எவருக்கும் தனிஈழச் சிந்தனை வரக் கூடாது. கருணாநிதிக்கு ஈழம் தேவையென்றால் அதை இந்தியாவில் அமைத்துக் கொள்ளட்டும் என்றும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

தமிழகத்திலிருந்து இலங்கை விமானப்படையினர் விரட்டப்பட்டமை மற்றும் தனிஈழக் கோரிக்கையை முன்வைத்து தமிழ் நாட்டில் நடைபெற்று வரும் ஆர்ப்பாட்டங்கள் ஆகியன குறித்து கருத்து வெளியிடும்போதே தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

''இலங்கையில் தனி ஈழமொன்றை அமைப்பதற்கு தமிழகத் தலைவர்கள் பாடுபடுகின்றனர். இங்கு ஈழம் அமைப்பதற்கு ஒரு போதும் இடமளிக்கமாட்டோம் என்ற விடயத்தை ஜெயலலிதா, கருணாநிதி, வைகோ ஆகிய தமிழகத் தலைவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

அரசியல் நடத்துவதற்காகவே அவர்கள் இன்று ஈழத்தைத் தூக்கிப்பிடித்து தீவிர பிரசாரம் நடத்தி வருகின்றனர். கனவில் கூட எவருக்கும் தமிழீழச் சிந்தனை வரவே கூடாது.

தமிழ்த் தலைவர்களுக்குத் தனி ஈழத்தைக் காண்பதற்கு அதிக விருப்பமென்றால், ஈழத்தை இந்தியாவில் அமைத்து அழகுபார்க்கட்டும்.

இலங்கையில் ஈழத்தை உருவாக்கப்போய் இந்தியா ராஜீவ்காந்தியை இழந்த வரலாற்றை தமிழகத் தலைவர்கள் புரட்டிப் பார்க்க வேண்டும்'' - என்று குறிப்பிட்டார் குணதாச அமரசேகர.

## கட்சிக்குள் எழுந்துள்ள எதிர்ப்பால் மு.காவின் முடிவு மீள் பரிசீலனையில்

01 அதற்கு முன்னதாக காலை 8 மணிக்கு கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களை ஹக்கீம் சந்தித்துப் பேசவுள்ளார். அந்தச் சந்திப்பில் எட்டப்படும் தீர்மானங்களை அடிப்படையாகக்கொண்டு முன்னைய தீர்மானம் மீள்பரிசீலிக்கப்படும் என்று கட்சி வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

அரசுடன் இணைந்து போட்டியிடுவதென்று மு.கா. ஏற்கனவே தீர்மானம் எடுத்திருந்தது. இந்தத் த்தீர்மானத்தால் கட்சியின் உறுப்பினர்களும், ஆதரவாளர்களும் கடும் அதிருப்தியடைந்தனர்.

அதிருப்தி குழு தனித்துப் போட்டியிடுவது பற்றியும் கலந்தாலோசிக்கத் தொடங்கியது. கட்சியின் செயலாளர் எம்.ரி.ஹஸன் அலியும் அரசுடன் இணைந்து போட்டியிடும் தீர்மானத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்.

மேற்படி தீர்மானத்தை எவரும் ஏற்காததால் அதை மீள் பரிசீலனை செய்யும் நிலைக்கு மு.காவின் தலைமைத்துவம் தள்ளப்பட்டுள்ளது. இன்று காலை மீண்டும் கட்சியின் உயர் பீடம் கூடி தீர்மானத்தை மீள்பரிசீலனை செய்யவுள்ளது. வேட்புமனுத் தாக்கல் நிறைவடைய இன்னும் மூன்று தினங்கள் மட்டுமே உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கோமா நிலை கைதியைப் பார்க்கத் தடை தமிழ்க் கூட்டமைப்பு சட்ட நடவடிக்கை

01 நிறுத்தப்பட்டுள்ளனர் என்றும், டில்றுக்ஷனின் கால்களில் சங்கிலி கட்டப்பட்டுள்ளது என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான எம்.ஏ. சுமந்திரன் 'உதய'னிடம் தெரிவித்தார்.

டில்றுக்ஷனைப் பார்வையிடுவதற்கு அவரது பெற்றோருக்கு கடுமையான நிபந்தனைகள் விதிக்கப்படுகின்றன என்றும் சுமந்திரன் சுட்டிக்காட்டினார்.

வவுனியா சிறைச்சாலையில் ஏற்பட்ட கலவரத்தையடுத்து சிறைச்சாலை அதிகாரிகளினதும், விசேட அதிரடிப்படையினரதும் கொடூரமான கூட்டுத் தாக்குதலுக்கு இலக்காகிப் படுகாயமடைந்து ராகம வைத்தியசாலையில் கோமா நிலையில் அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் சிகிச்சை பெற்றுவரும் தமிழ் அரசியல் கைதி டில்றுக்ஷனைப் பார்வையிடுவதற்கு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சுரேஷ் பிரேமச்சந்திரன், சுமந்திரன் ஆகியோர் ராகம வைத்தியசாலைக்குச் சென்றுள்ளனர்.

இதன் போது டில்றுக்ஷனைப் பார்வையிடுவதற்கு கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. சிறைச்சாலை ஆணையாளரின் அனுமதிக் கடிதம் இருந்தால் மாத்திரமே கைதியைப் பார்வையிட முடியும் என அவர்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து துரிதமாகச் செயற்பட்ட கூட்டமைப்பு சிறைச்சாலை ஆணையாளருக்குத் தொலைபேசி மூலம் உடன் அழைப்பை ஏற்படுத்தி சிகிச்சை பெற்றுவரும் கைதியைப் பார்வையிட அனுமதி வேண்டுமெனவும், அனுமதி மறுக்கப்படுவது நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமையை மீறும் செயல் எனவும் சுட்டிக் காட்டியுள்ளனர்.

அதன் பின்னர் பார்வையிட அனுமதியளிக்குமாறு சிறைச்சாலை ஆணையாளர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பணிப்புரை [illegible]

[illegible] 'உதய'னிடம் கருத்து வெளியிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் கூறியவை வருமாறு:-

ராகம வைத்தியசாலையில் கோமா நிலையில் அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் சிகிச்சை பெற்றுவரும் தமிழ் அரசியல் கைதி முத்துராசா டில்றுக்ஷனைப் பார்வையிடுவதற்கு நானும், சுரேஷ் பிரேமச்சந்திரனும் ராகம வைத்தியசாலைக்கு சனிக்கிழமை சென்றிருந்தோம்.

கோமா நிலையில் சிகிச்சை பெற்றுவரும் டில்றுக்ஷனைப் பார்வையிடுவதற்கு வெளிநாட்டு இராஜதந்திரிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மக்கள் பிரதிநிதிகள், சட்டத்தரணி ஆகியோருக்கு அனுமதியளிக்க வேண்டுமென உத்தரவளிக்கப் பட்டுள்ளது. இதனால் டில்றுக்ஷனைப் பார்வையிடுவதற்கு எமக்கு ஆரம்பத்தில் அனுமதியளிக்கப்படவில்லை.

இதனையடுத்து சிறைச்சாலை ஆணையாளருடன் உடன் தொடர்புகளை மேற்கொண்ட நாம் மேற்படி விடயங்களை சுட்டிக்காட்டியதுடன், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அனுமதி மறுக்கப்படுவது அவர்களின் சிறப்புரிமையை மீறும் செயல் எனவும் குறிப்பிட்டோம். இதனையடுத்து எமக்கு அனுமதி வழங்கப்பட்டது.

நாம் அங்கு சென்ற வேளை உரிய வைத்தியர்கள் இல்லாமையால் டில்றுக்ஷனின் உடல் நிலைமை குறித்து எம்மால் கேட்டறிய முடியாமல் போனது.

டில்றுக்ஷனைப் பார்வையிடுவதற்கு அவரின் பெற்றோர் நாளாந்தம் அவதிப்படுகின்றனர். மஹர சிறைச்சாலைக்குச் சென்று அனுமதி பெற்றபின்னரே ராகம செல்லவேண்டியுள்ளது. நாளாந்தம் அனுமதி பெற வேண்டியுள்ளது. டில்றுக்ஷனைப் பார்வையிடுவதற்கு அவரது பெற்றோருக்கு இரண்டு நிமிடங்களே வழங்கப்படுகின்றன. இதனால் அவர்கள் அல்லல் படுகின்றனர்.

கைதியைப் பார்வையிடுவதற்கு அனுமதி மறுக்கப்பட்டு வருகின்றமைக்கு எதிராகவும் இந்த விடயத்தில் அரசு இறுக்கமான போக்கைக் கடைப்பிடித்து வருகின்றமைக்கு எதிராகவும் கூட்டமைப்பு சட்ட நடவடிக்கை எடுக்கும். இந்த விடயத்தை நாம் நாடாளுமன்றத்திலும் எடுத்துரைப்போம்'' - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## கிழக்கு தமிழ்பேசும் மக்கள் முன் அரசு விரித்திருக்கும் வலை

கிழக்கில் மாகாண சபைத் தேர்தலில் யார் யாருடன் சேர்வார்கள், எந்தக் கட்சி எந்தக் கட்சியுடன் இணைந்து போட்டியிடப்போகிறது என்ற சிக்கல் இப்போது ஒருவாறு அவிழ்க்கப்பட்டுவிட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தன்னுடன் இணைந்து களம் இறங்க முன்வரலாம் என்று எதிர்பார்த்திருந்தது. அதில் நியாயமும் இருந்தது. ஏனென்றால் கிழக்கில் வாழும் தமிழர்களும் முஸ்லிம்களும் வெவ்வேறு சமய கலாசாரங்களையும் பண்பாடுகளையும் பேணுபவர்களாய் இருந்தாலும் ஒரே மொழியைப் பேசுகிறவர்கள், ஒரே பகுதியில் வாழ்பவர்கள், பெரும்பாலும் ஒரேவிதமான பிரச்சினைகளை எதிர்நோக்குபவர்கள். அதனால் இரு கட்சிகளும் ஒன்றாக இணைந்து போட்டியிடுவதன் மூலம் இரு தரப்பு நலன்களையும் சுமுகமான முறையில் பேணிக்கொள்வது சுலபமாகவும் வசதியாகவும் இருக்கும் என்பது மட்டுமல்ல, சிறுபான்மை மக்கள் தொடர்பான தேசியப் பிரச்சினைகளில் இரு தரப்பும் ஒருமித்த குரலில் பேசுவதும் தங்களுக்குள் இணங்கிப் போவதும் கூட இலகுவாக இருக்கும் என்று கருதப்பட்டது. இன்னும் சொல்வதானால் முஸ்லிம் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக இரு தரப்புக்கும் இடையில் நட்பு ரீதியில் உடன்பாடு ஒன்றை செய்து கொள்வதும் கூட சாத்தியமாக இருந்திருக்கும்.

ஆனால் முஸ்லிம் காங்கிரஸ் அவ்வாறு சிந்திக்கவில்லை- அரசாங்கத்தோடு சேர்ந்து போட்டியிடவும் அதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை செய்துகொள்ளவும் முடிவு செய்திருப்பதாகக் கூறப்படுகின்றது. இதேசமயம் முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீமுக்கும் அக்கட்சியின் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ரி. ஹஸன் அலிக்கும் இடையில் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டிருப்பதாகவும் ஒரு செய்தி கூறுகின்றது. அதேசமயம் முஸ்லிம் காங்கிரஸ் அரசுடன் சேர்ந்து போட்டியிட முடிவு செய்திருப்பது பற்றி முஸ்லிம் உலமா கட்சியின் தலைவரும் முஸ்லிம் விடுதலை முன்னணியின் தலைவருமான முபாறக் அப்துல் மஜீத் தெரிவித்துள்ள ஒரு கருத்தில் சமூகத்தைப் பற்றி எந்த அக்கறையும் இன்றி தமது பதவிகள் பற்றி மட்டும் சிந்திக்கும் கட்சி முஸ்லிம் காங்கிரஸ் என்று குற்றஞ்சாட்டியுள்ளார். முஸ்லிம் கட்சிகள் அனைத்துமே ஒரு முஸ்லிம் கூட்டமைப்பாக போட்டியிடுவதன் மூலமே பேரினவாதிகளைக் கட்டுப்படுத்துவதாய் இருக்கும் என்பது அவரது வாதம். அதேவேளை முன்னாள் செனட்டரும், முன்னாள் கல்முனை மாநகர சபையின் மேயரும் கட்சியின் பிரசார செயலாளருமான மசூர்தமௌலானா விடுத்துள்ளதோர் அறிக்கையில்; அரசுடன் இணைந்து களமிறங்குவதென்று முஸ்லிம் காங்கிரஸ் எடுத்துள்ள முடிவானது தமிழ் பேசும் மக்களுக்கு இழைத்துள்ள ஒரு வரலாற்றுத் துரோகமாகும் என்று குறிப்பிட்டிருப்பதோடு அன்று தமிழர்களை கடவுள்தான் காப்பாற்றவேண்டும் என்று தந்தை செல்வா சொன்னார். அதேபோன்று இனி முஸ்லிம்களையும் இறைவன்தான் காப்பாற்ற வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

இது விடயமாக கூட்டமைப்பின் செயலாளர் மாவை சேனாதிராசா வெளியிட்டுள்ள ஒரு கருத்தில், அரசுடன் முஸ்லிம் காங்கிரஸ் இணைந்து போட்டியிட தீர்மானித்திருப்பது முஸ்லிம் மக்களுக்கே பெரும் ஏமாற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர் பட்டியலில் இணைந்து போட்டியிட முஸ்லிம் பிரமுகர்கள் பலர் முன் வந்திருக்கிறார்கள் என்றும் இந்த விண்ணப்பங்கள் குறித்து கூட்டமைப்பின் உயர் பீடம் ஆராய்ந்து முடிவெடுக்க விருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

நேற்றைய பத்திரிகைகளில் வெளிவந்த இன்னொரு செய்தி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வெளியிட்டிருக்கும் அறிவிப்பாகும். அந்தக் கட்சியினர் கூறியிருப்பது இதுதான்; 13 ஆவது அரசமைப்பு திருத்தத்தை தாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அதன்மூலம் வந்த மாகாண சபை முறையையும் ஏற்றுக்கொள்ளவில்லை. அதனால் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இந்த மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடக்கூடாது. அதேசமயம் கூட்டமைப்பு சுயேச்சையாகப் போட்டியிட்டால் தாங்களும் ஆதரிப்பார்களாம். மாகாண சபையே வேண்டாம் என்ற பிறகு சுயேச்சையாக இருந்தால் என்ன கட்சியாக இருந்தால் என்ன போட்டியிட்டால் அதனை ஏற்றுக்கொண்டதாகத்தானே கருத்து?

இதற்கு உடனடியாகவே பதிலளித்துள்ள கூட்டமைப்பின் தலைவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதன் பெயரிலும் சின்னத்திலும் எந்தவித மாற்றமும் செய்யமாட்டாது என்று குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள்ளேயே வேட்பாளர் நியமனம் குறித்து கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டிருப்பதாகவும் கூறப்படுகின்றது. பல கட்சிகள் ஒன்றுசேர்ந்து கூட்டமைப்பாகச் செயற்படும்போது முரண்பாடுகளும் குறை கூறுதல்களும் ஏற்படுவது சாதாரணம்தான். ஆனால் அவைகளை சாணக்கியமாக அணுகி தீர்த்துக் கொள்ள வேண்டியதும் அனைவரையும் அணைத்துக் கொண்டு முன் நகர வேண்டியதும் தலைமை வகிப்பவர்களின் திறமை. அவசியமானால் கண்டிப்போடு நடந்து கொள்ளவேண்டியதும் அதில் ஓர் அம்சமே.

அரசுத் தரப்பை பொறுத்தவரை மூன்று மாகாண சபைகளுக்குமான தேர்தலை உரியகாலத்துக்கு முன்பாகவே நடத்தத் துணிந்திருப்பதானது வடமத்திய மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் அவர்கள் இலகுவாக வெற்றிபெற்று விடமுடியும், அதுவல்ல பிரச்சினை, கிழக்குமாகாணத்தில் வெற்றிபெற்றுக் காட்ட வேண்டும். அதுவே அவர்களுக்கு முக்கியம். 13 ஆவது திருத்தத்தில் காணப்படும் இரு மாகாணங்களையும் இணைக்கும் அம்சத்தை மட்டுமல்ல அதுபோன்ற அரசு விரும்பாத அம்சங்கள் அனைத்தையும் தூக்கி எறிந்து விடுவது ஒருபுறம். வடக்கு, கிழக்கை நிரந்தரமாகப் பிரித்து தமிழ் பேசும் மக்களின் ஒருமைப்பாட்டுக்கும் உலை வைப்பதுமாகும். அதற்காகத்தான் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியையும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸையும் தனது பிடிக்குள் வைத்துக்கொண்டு தேர்தலை நடத்த முன்வந்துள்ளது அரசு.

கிழக்கு மாகாண தமிழ்பேசும் மக்கள் தம் எதிரில் விரிக்கப்படும் வலையைச் சரியாகப் புரிந்து கொண்டு செயற்படுவார்கள் என்று எதிர்பார்ப்போம்.

# சட்டங்கள் பற்றிய போதிய அறிவு மக்கள் மத்தியில் அவசியம் தேவை

## பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் தெரிவிப்பு

வடமராட்சி, ஜூலை 16

பொது மக்கள் மத்தியில் சட்டங்கள் பற்றி போதிய அறிவும் விளக்கமும் இருக்க வேண்டும். சட்டங்கள் பற்றிய விழிப்புணர்வும் மக்கள் மத்தியில் இருக்க வேண்டும். இதற்கு தமிழ்மொழியில் சட்ட நூல்கள் இல்லாதது ஒரு குறைபாடாகும்.

இவ்வாறு பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் தெரிவித்தார்.

சட்டத்தரணி சபா. ரவீந்திரன் எழுதிய 'குடும்ப வன்முறைச் சட்டம்' நூல் வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் அதிபர் கே.கே.யோகநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொதுமக்கள் மத்தியில் சட்ட அறிவு ஏற்பட சட்ட வல்லுநர்கள் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். மக்களுக்குச் சட்ட அறிவு இருந்தால் நாட்டில் குற்றச் செயல்கள் குறைவடைய வாய்ப்புகள் உண்டு.

நாடு முழுவதும் குடும்ப வன்முறைகள் அதிகரித்தே வருகின்றன. ஆனால் வடமராட்சிப் பிரதேசத்தில் மனைவியால் கணவன் வன்முறைக்குட்படுத்தப்பட்ட சம்பவங்களிலும் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. குடும்ப வன்முறைச் சம்பவங்களிலிருந்து அவர்கள் விடுபட்டு மீண்டும் சேர்ந்து வாழ வேண்டும் என்ற அடிப்படையிலேயே மிக நுணுக்கமாக ஆராய்ந்து இவ்வாறான வழக்குகளில் கட்டளை இடப்படுகின்றன.

பெண்கள் தாங்கள் பெண்கள் என்ற காரணத்தால் தாங்கள் நினைப்பதை எப்படியும் சாதித்து விடலாம் எனக் கருதக் கூடாது. சில பெண்கள் இந்த விடயத்தில் பிழையான அணுகு முறைகளைக் கொண்டிருப்பதைக் காணமுடிகிறது. பெண்கள் என்பதற்காக அவர்கள் மீது எதிரான கட்டளைகள் இடப்படமாட்டா என்று கருதக் கூடாது. அவர்களுக்கு எதிரான கட்டளைகளும் இடப்படலாம்.

பெண்களுக்கு இயற்கையாக பல வேறுபாடுகள் இறைவனால் வழங்கப்பட்டுள்ளன. அதை அனுசரித்தே அவர்கள் செயற்படவேண்டும். பெண்கள் ஆண்களைப் பலிக்கடாக்கள் ஆக்காமல் ஆண்களையும் பாதுகாக்கவேண்டும். பிரச்சினைகள் ஏற்பட்டால் சட்டத்தின் மூலம் தீர்வு காணலாம். - என்றார். (ம-8)

# செயன்முறைப் பரீட்சை தாமதம்; பட்டதாரி நியமனம் பறிபோனது

யாழ்ப்பாணம், ஜூலை 16

2011 ஆம் ஆண்டில் பட்டப் படிப்பை பூர்த்தி செய்திருக்க வேண்டிய நுண்கலைப்பீட மாணவர்கள், செய்முறைப் பரீட்சை இடம்பெறாத காரணத்தால் 2011 ஆம் ஆண்டு இறுதிக்குள் பட்டப் படிப்பை பூர்த்தி செய்யாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக கடந்த இரண்டாம் திகதி யாழ்.மாவட்டத்தில் ஏனைய பட்டதாரிகளுக்கு பட்டதாரி பயிலுநர் நியமனம் வழங்கப்பட்டபோதும் நாம் புறக்கணிக்கப்பட்டுள்ளோம். எனவே எமது விடயம் தொடர்பில் கவனம் செலுத்தி பட்டதாரி பயிலுநர் நியமனத்துக்குள் உள்வாங்குமாறு பாதிக்கப்பட்ட 2011 ஆம் ஆண்டு நுண்கலைப் பட்டதாரி மாணவர்கள், யாழ். மாவட்ட அரச அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட 2011 ஆம் ஆண்டு நுண்கலைப் பட்டதாரி மாணவர்கள், அரச அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

யாழ்.மாவட்ட செயலகத்தில் கடந்த மாதம் பட்டதாரி பயிலுநர் நியமனத்துக்காக நடத்தப்பட்ட நேர்முகத் தேர்வில் தோற்றியிருந்தோம். நுண்கலைப் பட்டதாரி மாணவர்களாகிய நாங்கள் 2006/2007 கல்வியாண்டில் பல்கலைக் கழகத்துக்குத் தெரிவாகி நான்கு வருட சிறப்பு நுண்கலைமாணிப் பட்டத்தைப் பெற்றுக் கொண்டோம்.

தற்போது 2006/2007 கல்வியாண்டில் எம்முடன் பல்கலைக் கழகத்துக்குத் தெரிவாகிக் கலைப் பீடத்தில் கல்வி பயின்று 2011.12.31 ஆம் திகதிக்கு முன்னர் பட்டம் பெற்ற மாணவர்கள் மேற்குறித்த பயிலுநர் நியமனத்துக்காக இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

இருப்பினும் 2011 ஆம் அண்டில் பட்டப்படிப்பைப் பூர்த்தி செய்ய வேண்டிய நுண்கலைப் பீட மாணவர்களாகிய நாங்கள் செய்முறைப் பரீட்சையின் காரணமாகவும் சில நிர்வாக நடவடிக்கைகள் காரணமாகவும் எமது பட்டப் படிப்பைப் பூர்த்தி செய்த இறுதித் திகதியானது இசை, நடனத்துறை மாணவர்களுக்கு 48 நாள்கள் தாமதமாகி 2012.02.18 என்ற வகையிலும் சித்திரமும் வடிவமைப்பும் துறை மாணவர்களுக்கு 3 நாள்கள் தாமதமாகி 2012.01.03 என்ற வகையிலும் அமைந்துவிட்டது.

இந்தக் காரணங்களால் பட்டதாரிப் பயிலுநர் நியமனங்கள் கிடைப்பதில் இருந்து நாம் விலக்கப்பட்டுள்ளோம். இதனால் 2011 ஆம் ஆண்டுக்கான நுண்கலைப் பட்டதாரிகளாகிய நாங்கள் குறித்த நியமனம் கிடைக்காததாலும் எமது குடும்ப சூழ்நிலைகள் காரணமாகவும் மனவிரக்தி நிலையுடன் கவலையும் அடைந்துள்ளோம்.

இந்த விடயம் தொடர்பில் தாங்கள் கவனம் செலுத்தி ஏனைய பட்டதாரிகளைப் போன்று எமக்கும் கால விரயம் இன்றி உடன் நியமனங்களை வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்- என்றுள்ளது. (ம-5)

## கலைஞர் விவரத் திரட்டு வெளியிட ஏற்பாடு

யாழ்.பிரதேச செயலக கலாசாரப் பேரவையால் கலைஞர் விவரத் திரட்டு நூல் வெளியிடப்படவுள்ளது. இதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

யாழ்.பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பல்துறை சார்ந்த கலைஞர்களின் விவரங்களைத் திரட்டும் பணிகள் கிராம அலுவலர் பிரிவுகளில் இடம்பெற்று வருகின்றன. இந்தப் பணிகளில் அண்மையில் நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்ட பட்டதாரிப் பயிலுநர்கள் அமர்த்தப்பட்டுள்ளனர். இவர்கள் கிராமம் கிராமமாகச் சென்று கலைஞர்களின் சுயவிவரங்களைத் திரட்டி வருகின்றனர். தேசிய கலை, இலக்கிய கலாசாரப் பெருவிழாவில் இந்த ஆவண நூல் வெளியிடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ம-135)

## கல்வித்துறையை இராணுவமயமாக்க அரசு முயற்சி

யாழ்ப்பாணம், ஜூலை 16

மாணவர்களுக்கு இராணுவப் பயிற்சி வழங்குவதானது கல்வித் துறையை இராணுவ மயமாக்கும் முயற்சியே. உரிமைகளைத் தட்டிக் கேட்காத மக்கள் சமூகத்தை உருவாக்கும் நோக்கமே இது என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தெரிவித்திருக்கிறார்.

மாணவர்களுக்கு இராணுவப் பயிற்சி வழங்கப்படுவது தொடர்பில் அவர் கருத்து வெளியிட்டபோதே இவ்வாறு தெரிவித்தார்.

முன்னர் பல்கலைக்கழக மாணவர்களுக்கு இராணுவப் பயிற்சி வழங்கப்பட்டது. தற்போது இலங்கை கல்வி நிர்வாகசேவை தரம் I ஐச் சேர்ந்த அதிகாரிகளுக்கும் ஒருவாரகால இராணுவப் பயிற்சி வழங்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது. தவிர ஆயிரம் பாடசாலைகள் திட்டத்தின் கீழ் பாடசாலை மாணவர்களுக்கும் இராணுவப்பயிற்சிவழங்க முயற்சி எடுக்கப்படுகிறது. இந்தச் செயற்பாடுகளை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இராணுவப் பயிற்சி என்கின்றபோது சொன்னதைச் செய்ய வேண்டும். அதுவே அங்கு ஒழுக்கம். ஆனால் கல்வித்துறையானது அப்படியான திணிப்பு அல்ல. சுதந்திரமாக உணர்ந்து கற்கவேண்டியது கல்வி. அதற்கான சுதந்திரம் மாணவர்களுக்கு உண்டு. மாணவர்கள் சுயமாகச் சிந்திக்க, செயற்பட, அதன் மூலமாக முன்னேற அவர்கள் மீது எந்த அழுத்தமும் இருத்தல் கூடாது - என்றார். (த-4)

# ஓய்வூதியர் விவரம் திரட்டல்

பருத்தித்துறை, ஜூலை 16

பருத்தித்துறை பிரதேச செயலர் உட்பட்ட சகல ஓய்வூதியர்களது தரவுகளும் ஈ-ஓய்வூதிய கருத்திட்டத்தின் கீழ் நிரைப்படுத்தப்பட வேண்டியுள்ளதால் பருத்தித்துறைப் பிரதேச செயலகத்தின் கீழ் ஓய்வூதியத்தினைப் பெற்றுக்கொள்ளும் சகல ஓய்வூதியர்களும் தமது விவரங்களைச் சமர்ப்பிக்குமாறு பருத்தித்துறை பிரதேச செயலர் ஆர்.ரி.ஜெய சீலன் [illegible].

இதன்படி [illegible] ஓய்வூதியர்களும் தமது ஓய்வூதிய இலக்கம், ஓய்வுபெற்ற திகதி, விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய இலக்கம், தேசிய அடையாள அட்டை இலக்கம், பிறந்த திகதி, தற்போதைய முகவரி, வங்கிக் கணக்கு இலக்கம் போன்ற விவரங்களை நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ பருத்தித்துறைப் பிரதேச செயலக ஓய்வூதியக் கிளைக்கு எதிர்வரும் 30ஆம் திகதி, திங்கட்கிழமைக்கு முன்னதாக அனுப்பிவைக்குமாறு பிரதேச செயலர் கேட்டுள்ளார். (16-253)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களின் எதிர்ப்புக்கு மத்தியிலும் மதுபானசாலை திறந்து வைப்பு

## புதுக்குளம், மருக்காரம்பளை மக்கள் அதிருப்தி

வவுனியா, ஜூலை 16

பொதுமக்களின் எதிர்ப்புக்கு மத்தியிலும் மருக்காரம்பளைப் பகுதியில் மதுபானசாலை ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

புதுக்குளம் - மருக்காரம்பளைப் பகுதியில் பொதுமக்கள் வாழும் பகுதியிலேயே இந்த மதுபானசாலை திறக்கப்பட்டுள்ளது.

இதற்கு அண்மையில் மருக்காரம்பளைப் பாடசாலையும், அதிலிருந்து சில மீற்றர் தூரத்தில் புதுக்குளம் மகாவித்தியாலயமும் அமைந்துள்ளதோடு அந்தப் பகுதி சனநடமாட்டம் அதிகமான பகுதியாகவும் காணப்படுகின்றது. இதனால் இந்தப் பகுதியில் மதுபானசாலை அமைப்பதனை நிறுத்துமாறுஅந்தப் பகுதிக் கிராம மக்களும், கிராம அபிவிருத்திச் சங்கத்தினரும், வவுனியா பிரதேச செயலரிடம், கோரிக்கை விடுத்ததுடன் தமது எதிர்ப்பையும் தெரிவித்திருந்தனர். இந்த நிலையிலேயே அந்த மதுபானசாலை கடந்த 8 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டுள்ளது.

> இந்தப் பகுதியில் மதுபானசாலைகள் திறக்கப்படுவதால் மாணவர்கள், இளைஞர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் பாதிக்கப்படுவர்.

இதேவேளை இந்த மதுபானசாலை திறக்கப்படுவதை ஆட்சேபித்தும் அதனைத் தடுக்குமாறு கோரியும் மருக்காரம்பளை கிராம அபிவிருத்திச் சங்கத்தினால் ஏற்கனவே கடிதம் ஒன்றும் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

அந்தக் கடிதத்தில்; பாரம்பரிய விவசாயக் கிராமமாகிய இந்தப் பகுதி மக்கள் கிராமியக் கட்டமைப்புகளுடனும், கலாசார பண்பாடுகளுடனும் வாழ்ந்து வருகின்றனர். இந்த நிலையில் எமது கிராமத்தில் புதிதாக மதுபானசாலை திறப்பதற்கான ஆரம்ப கட்டப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. ஏற்கனவே இதனைத் திறப்பதற்கான முயற்சிகள் மேற்கொண்டபோதும் அதற்கான அனுமதிகள் மறுக்கப்பட்டமையையும் தங்களின் கவனத்துக்குக் கொண்டு வருகின்றோம்.

இந்தப் பகுதியில் மதுபானசாலைகள் திறக்கப்படுவதால் மாணவர்கள், இளைஞர்கள் மற்றும் பொது மக்கள் எனப் பலரும் பாதிக்கப்படுவர். அத்துடன் இந்தச் செயற்பாடானது கலாசார சீரழிவுகள் மேலும் அதிகரிப்பதற்கும் வழிகோலும். எனவே மதுபானசாலையை அமைப்பதை உடன் தடுத்து நிறுத்துமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம். - என்றுள்ளது.

இந்தக் கடிதத்தின் பிரதிகள் வவுனியா அரச அதிபர், ஜனாதிபதி, வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் வவுனியா தெற்கு பிரதேச சபைத் தலைவர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(க-410)

# சட்டவிரோத செய்கையாளருக்கு அதிகூடிய தண்டம் அறவீடு

## நீர் வரிப் பங்கும் நிறுத்தப்படலாம்

கிளிநொச்சி, ஜூலை 16

இரணைமடுக்குளத்தின் கீழ் இவ்வாண்டு சிறுபோக செய்கையின் போது மேற்கொள்ளப்பட்டுள்ள சட்டவிரோத விதைப்புக்களுக்கு அதிகூடிய தண்டம் அறவிடப்படுவதுடன் சட்டவிரோத செய்கையை மேற்கொள்பவர்களுக்கு இனிமேல் நீர் வரிப் பங்குகளும் நிறுத்தப்படும் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி இரணைமடுக்குளத்தின் கீழ் உள்ள உபதிட்டக் குழுக்களின் கீழ் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள சட்டவிரோதப் பயிர்ச் செய்கைகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட கூட்டத் தீர்மானத்தின் பிரகாரம் மேலதிக சட்டவிரோதச் செய்கைகளுக்கு ஒரு ஏக்கருக்கு 15 ஆயிரம் ரூபாவுக்கு மேலான தண்டம் அறவிடப்படுவதுடன் எதிர்காலத்தில் இத்தகைய காணி உரிமையாளர்களின் நீர் வரியும் நீக்கப்பட்டு நீர்விநியோகத்தை நிறுத்துவதற்கும் வாய்ப்புக்கள் உள்ளன.

இதேவேளை, கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தலைமையிலான குழுவினர் முரசுமோட்டையின் பாதிக்கப்பட்ட விவசாயிகளைச் சந்தித்துக் கலந்துரையாடியதுடன், அழிவடைந்து வரும் வயல்களையும் பார்வையிட்டனர்.

இவ்வாண்டு மேற்கொள்ளப்பட்டுள்ள சிறுபோகச் செய்கையில் கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட முரசுமோட்டைப் பகுதியில் சுமார் 100 ஏக்கர் பயிர்ச் செய்கை சீரான நீர்ப்பாசனமின்றி எரிந்து கருகி அழிந்த நிலையில் உள்ளது.

இந்த நிலையில் விவசாயிகள் பலர் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், மாவட்ட அரச அதிபர் ஆகியோரிடம் முறையிட்டனர். இதனையடுத்து நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் மாவட்ட அரச அதிபர் திருமதி றூபாவதி கேதீஸ்வரன் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், கண்டாவளைப் பிரதேச செயலர் முகுந்தன், நீர்ப்பாசன பொறியியலாளர் விகிர்தன் உள்ளிட்டோர் முரசுமோட்டைப் பகுதியில் அழிவடைந்துள்ள வயல்களைப் பார்வையிட்டுள்ளதுடன் விவசாயிகளையும் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

அத்துடன் எஞ்சியுள்ள நெற் செய்கைகளைப் பாதுகாத்துக் கொள்ளும் வகையில் பல்வேறு தீர்மானங்களும் எடுக்கப்பட்டுள்ளன.

(க-6)

## வவுனியா வருகிறார் மஹிந்த

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எதிர்வரும் 21 ஆம் திகதி வவுனியாவுக்கு வருகைதரவுள்ளதாக மாவட்டச் செயலகத்தின் செய்திப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியா மாவட்டத்தின் வீதி அபிவிருத்தி, மீளக்குடியமர்வு, காணிப் பிரச்சினை, புனர்வாழ்வு அளிக்கப்படும் போராளிகளின் நிலையை அவதானித்தல், அண்மையில் வவுனியாச் சிறையில் நிகழ்ந்த சம்பவங்கள் தொடர்பாக ஆராய்தல் என்பன அவரது வருகையின் முக்கிய நோக்கங்களெனக் கூறப்பட்டது.

ஜனாதிபதியின் வருகையை முன்னிட்டு அபிவிருத்தி தொடர்பான முன்னேற்பாட்டுக் கூட்டமொன்று இடம்பெற்றுள்ளது.

(க-402)

## சிறைக்குள் வைத்துத் தாக்கப்பட்டதாக மனித உரிமைக் குழுவில் முறைப்பாடு

வவுனியா, ஜூலை 16

நீதிமன்றத் தீர்ப்பின் பிரகாரம் சிறைக்குச் சென்றவர் பூட்டிய சிறைக்குள் வைத்துத் தான் தாக்கப்பட்டதாக வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

மகாறம்பைக்குளத்தைச் சேர்ந்த 32 வயதான பா.விசுவலிங்கம் என்பவரே தன்னைப் பூட்டிய சிறைக்குள் வைத்துக் கடுமையாகத் தாக்கியதாகவும் அதனால் தனக்கு கண்டல் காயங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் முறைப்பாடு செய்துள்ளார்.

பூந்தோட்டம் மகாறம்பைக்குளத்தைச் சேர்ந்த பா.விசுவலிங்கமும் அவரது மனைவியாகிய அருட்செல்வியும் தற்போது பிரிந்து வாழ்கின்றனர். இவர்களுக்கு நான்கு பிள்ளைகள் உள்ளனர். தனது கணவரிடமிருந்து தாபரிப்பணத்தைப் பெற்றுக் கொடுக்குமாறு கோரி மனைவியால் வவுனியா மாவட்ட நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

கடந்த மாதம் வழக்கு விசாரணை இடம்பெற்றபோது விசுவலிங்கம் பிணையில் வெளியில் விடப்பட்டார்.

பின்னர் கடந்த 5 ஆம் திகதி இடம்பெற்ற வழக்கு விசாரணையின் போது தாபரிப்புப் பணமாக ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாவைச் செலுத்துமாறும் தவறும் பட்சத்தில் 10 மாதச் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டுமெனவும் நீதிவான் தீர்ப்பளித்திருந்தார்.

உடனடியாக பணத்தைக் கட்டத் தவறியமையால் குறித்த நபர் சிறையில் அடைக்கப்பட்டு மீண்டும் 11 ஆம் திகதி பணத்தைச் செலுத்தியதால் வெளியில் வந்துள்ளார்.

தான் சிறையில் அடைக்கப்பட்டவுடன் மூடிய சிறைக்குள் வைத்துத் தாக்கப்பட்டதாக இவர் சிறையில் இருந்து மீண்டு வந்ததும் முறைப்பாடு செய்துள்ளார்.

(க-410)

## விதாதா வள நிலையத்தால் புத்தாக்கக் கண்காட்சி

நெளுக்குளம்,ஜூலை 16


தேசிய புத்தாக்கக் கண்காட்சி ஒன்றை நடத்துவதற்கு வவுனியாப் பிரதேச செயலகத்தின் விதாதா வள நிலையத்தினர் தீர்மானித்துள்ளனர்.

எதிர்வரும் செப்ரெம்பர் 30 மற்றும் ஒக்ரோபர் 1 ஆம் திகதிகளில் இந்தக் கண்காட்சி இலங்கை புத்தாக்க ஆணைக்குழுவின் ஒத்துழைப்புடன் இடம்பெறவுள்ளது.

புத்தாக்கச் செயற்பாடுகளுக்குப் போட்டி அடிப்படையில் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. முதலாவது பரிசாக 15 ஆயிரம் ரூபாவும் இரண்டாம், மூன்றாம் பரிசுகளாக 10 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படவுள்ளன.

இதில் பங்குபற்ற விரும்புவோர் வவுனியாப் பிரதேச செயலகத்தின் விதாதா வள நிலையத்துடன் தொடர்புகளை ஏற்படுத்துமாறு வவுனியாப் பிரதேச செயலர் அ.சிவபாலசுந்தரன் கேட்டுக் கொண்டுள்ளார். (க-402)

## ஆபத்தான பயணம்...



வவுனியா பூங்கா வீதிக்கு அருகிலுள்ள பாதுகாப்பில்லாத ரயில்வேகடவை ஒன்றினூடாக மோட்டார் சைக்கிளில் பயணிக்கின்றார் பயணியொருவர். (402)

# அழிவடைந்த ச.ச.நிலையங்கள், நூலகங்கள் கரைச்சிப் பிரதேச சபையால் புனரமைப்பு

கிளிநொச்சி, ஜூலை 16

இயங்க முடியாத நிலையிலிருந்த 22 சனசமூக நிலையங்களும், நான்கு நூல் நிலையங்களும் பல லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு இயங்க வைக்கப்பட்டுள்ளன.

> பிரதேச சபையில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி சபையின் நிதியிலிருந்து 22 சனசமூக நிலையங்களும் 4 நூல் நிலையங்களும் பல லட்சம் ரூபா செலவில் திருத்தியமைக்கப்பட்டு தற்பொழுது இயங்க வைக்கப்பட்டுள்ளன.

மாணவ சமூகத்தின் கல்வி வளர்ச்சியையும், பொது மக்கள் மத்தியில் வாசிப்புப் பழக்கத்தையும் விருத்தி செய்ய முன்வந்துள்ள கரைச்சி பிரதேச சபைத் தவிசாளர் நா.வை.குகராசா போர் காரணமாக அழிவடைந்து இயங்க முடியாத நிலையிலிருந்த சன சமூக நிலையங்களையும் நூல் நிலையங்களையும் சபை நிதியிலிருந்து புனரமைத்துத் தற்பொழுது இயங்க வைத்துள்ளார்.

வசதியீனங்கள் மத்தியில் மீள்குடியமர்ந்த மாணவர்கள் உட்படப் பொதுமக்கள் தவிசாளரின் இந்தச் செயற்பாடு குறித்து மகிழ்ச்சியடைந்துள்ளதாகத் தெரிய வருகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள கரைச்சிப் பிரதேசத்தில் இயங்கி வந்த 66 சன சமூக நிலையங்களும் 4 நூல் நிலையங்களும் போர் காரணமாகச் சேதமடைந்து இயங்க முடியாத நிலையிலிருந்தன. இதனால் மீள்குடியமர்த்தப்பட்ட மக்களின் அறிவுசார்ந்த தேவைகளை நிறைவேற்ற முடியாத நிலை காணப்பட்டது.

இதற்கமையப் பிரதேச சபையில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி சபையின் நிதியிலிருந்து 22 சனசமூக நிலையங்களும் 4 நூல் நிலையங்களும் பல லட்சம் ரூபா செலவில் திருத்தியமைக்கப்பட்டு தற்பொழுது இயங்க வைக்கப்பட்டுள்ளன.

வாசிப்புப் பழக்கத்தை மக்கள் மத்தியில் அதிகரிக்கும் நோக்குடன் புனரமைக்கப்பட்ட 22 சனசமூக நிலையங்களுக்கும் தேசியப் பத்திரிகை ஒன்றும் உள்ளூர்ப் பத்திரிகைகள் இரண்டுமாக மூன்று பத்திரிகைகள் சபை நிதியிலிருந்து தினசரி வழங்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை, கிளிநொச்சி, முரசுமோட்டை, அக்கராயன், வட்டக்கச்சி ஆகிய இடங்களில் புனரமைக்கப்பட்ட நான்கு நூல் நிலையங்களிலும் மாணவர்களின் கல்வி வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு பல அறிவு சார்ந்த நூல்களும் வைக்கப்பட்டுள்ளன. இதனால் மாணவர்கள் நன்மையடைந்துள்ளார்கள்.

அதேநேரம் போரினால் சேதமடைந்த நிலையிலிருக்கும் ஏனைய 44 நூல் நிலையங்களும் சபை நிதியிலிருந்து புனரமைக்கப்பட்டு விரைவாக இயங்க வைக்கப்பட இருக்கின்றன என்று தெரிவித்துள்ள பிரதேசசபை தவிசாளர், நூல் நிலையம் சம்பந்தமாகப் பிரதேச சபையால் மேற்கொள்ளப்படவிருக்கும் செயற்பாடுகளுக்குப் பொதுமக்களும் சனசமூக நிலைய நிர்வாகத்தினரும் பூரண ஒத்துழைப்பு வழங்குமாறு கோரியுள்ளார்.

அழிவடைந்த நிலையிலிருந்த சனசமூக நிலையங்களையும் நூல் நிலையங்களையும் புனரமைத்து இயங்க வைக்க நடவடிக்கை எடுத்த கரைச்சி பிரதேச சபைத் தவிசாளரின் சேவையை மாணவர்கள் உட்படப் பொது மக்கள் பாராட்டியுள்ளார்கள்.

(க-115)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பு தேர்தல்கள் அலுவலகம் இன்று திறப்பு



மட்டக்களப்பு,ஜூலை16

மட்டக்களப்பு மாவட்ட தேர்தல்கள் திணைக்களத்துக்குப் புதிதாக அமைக்கப்பட்ட கட்டடத்தைத் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை திறந்து வைத்தார்.

இந்தப் புதிய தேர்தல்கள் அலுவலகம் மட்டக்களப்பு, மண்முனை வடக்கு பிரதேச செயலகக் கட்டடத்துக்குச் சமீபமாக அமைக்கப்பட்டுள்ளது.

இந்தத் திறப்பு விழா நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர், மட்டு. மாநகர ஆணையாளர் சிவநாதன், மண்முனை வடக்கு பிரதேச செயலர் கிரிதரன் மற்றும் சமய குருமார்கள், திணைக்கள அதிகாரிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

(ச)

## பெட்டி கழன்றது மூன்று பேர் காயம்

திருகோணமலை, ஜூலை16

உழவு இயந்திரத்தின் பெட்டி வேறாக கழன்றதில் அதில் பயணித்த மூவர் படுகாயமடைந்து கிண்ணியா தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கிண்ணியா, புஹாரியடிச் சந்தியில் நேற்று ஞாயிற்றுக் கிழமை காலை இந்தச் சம்பவம் இடம்பெற் றுள்ளது.

இந்த மூவரும் மேசன் தொழிலுக்காக திருகோணமலை நோக்கிச் சென்றுகொண்டிருந்த போதே குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

(ச)

## அம்பாறை மாவட்ட ஐ.ம.சு.மு. முதன்மை வேட்பாளர் மஜீட்

மட்டக்களப்பு, ஜூலை16

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் அரசுடன் இணைந்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி போட்டியிடுவதற்குத் தீர்மானித்திருப்பதால் அம்பாறை மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தலைமை வேட்பாளராக முன்னாள் மாகாணசபை உறுப்பினரும் ஓய்வுபெற்ற சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான எம்.அப்துல் மஜீட் நியமிக்கப்படவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த கிழக்கு மாகாண சபையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி சார்பான உறுப்பினர்களின் தலைவராகப் பணியாற்றிய மஜீட், மாகாணசபையில் தனது கட்சிசார்பான கொள்கைகளைச் சிறந்த முறையில் முன்னெடுத்துச் சென்றவர்.

2008ஆம் ஆண்டு நடைபெற்ற மாகாணசபைத் தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் போட்டியிட்ட அப் துல் மஜீட் சுமார் முப்பதாயிரம் வாக்குகளைப் பெற்று தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் மூலம் அரசியலுக்குள் அறிமுகமான மஜீட் நாடாளுமன்ற உறுப்பினராகவும், கிழக்கு மாகாண சிவில் பாதுகாப்பு இணைப்பு அதிகாரியாகவும் இருந்து பணியாற்றியுள்ளார். அஷ்ரப்பின் மறைவின் பின்னர் முஸ்லிம் காங்கிரஸில் இணைந்து கொண்டார்.

(ச)

# முஸ்லிம் சமூகத்தை நிரந்தர அடிமையாக்கிவிட்டது மு.காங்

## உலமாக் கட்சி குற்றச்சாட்டு

மட்டக்களப்பு,ஜூலை16

கிழக்கு மாகாணத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசுடன் இணைந்து போட்டியிடுவது முஸ்லிம் சமூகத்தை நிரந்தர அடிமையாக்கிவிட்டது என்று உலமா கட்சியின் தலைவர் முபாறக் அப்துல் மஜீத் குற்றம் சாட்டியுள்ளார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் வெற்றிபெறும் பட்சத்தில் நாம் எத்தனை பள்ளிவாசல்களை உடைத்தாலும் முஸ்லிம்கள் எமது பக்கம் தான் எனப் பேரினவாதம் உரத்துக்கூறி செயற்படும் நிலை ஏற்படும்.

கிழக்கு மாகாணசபைத் தேர்தல் சம்பந்தமாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் முடிவு என்பது ஏற்கனவே தெரிந்த ஒன்றுதான். சமூகத்தைப் பற்றி எந்த அக்கறையுமின்றி தமது பதவிகள் பற்றி மட்டும் சிந்திக்கும் ஒரு கட்சி இந்த முடிவுக்குத்தான் வரும்.

முஸ்லிம் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து கூட்டமைப்பாகப் போட்டியிடுவதன் மூலமே முஸ்லிம் மக்களைக் கிள்ளுக்கீரையாக நினைக்கும் பேரினவாதிகளைக் கட்டுப்படுத்த முடியும். ஆனால், கடைசி நேரத்தில் சுயநல பதவிக்கு முஸ்லிம் கட்சிகள் அடிபணியும் என்பது நாம் அறிந்த ஒன்றுதான்.

அறுவைக்குக் கொண்டு செல்லும் ஆட்டுக்கு அகத்திக் கீரையைக் காட்டுவது போன்று இவர்களுக்கு சில பதவிகளைக் காட்டி முஸ்லிம் சமூகம் அறுவைக்கு கொண்டு செல்லத் தயார்படுத்தப்படுகிறது. இவ்வாறு முதலில் அறுக்கப்பட்டது மு.காவின் உயர்பீடமும் போராளிகளுமாகும்.

மு.கா. தனித்துப் போட்டியிட்டால் தமக்கும் போட்டியிட முடியும் என நினைத்து பல்லாயிரக்கணக்கில் செலவு செய்து ஒரு வாரமாகக் கொழும்பில் தவம்கிடந்தவர்கள் கழுத்தறுபட்ட நிலையில் உள்ளார்கள்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கடந்த இரண்டு வருடங்களாக அமைச்சுப் பதவிகளை வகித்தும் ஒலுவில் காணிப் பிரச்சினை, தம்புள்ள பள்ளிவாசல் ஆகிய பிரச்சினைகளுக்கு எந்த முடிவும் காணமுடியாமல் இருக்கிறது.

இந்தநிலையில், தனது தனித்துவத்தை இழந்து அடிமையாகிய நிலையில் முஸ்லிம்களையும் அடிமைத் தளத்துக்குள் நிரந்தரமாகத் தள்ளிவிட்டுள்ளது. மேற்படி பிரச்சினைகளில் பெரும்பாலானவை மு.காவின் அரச ஆதரவுடனேயே ஏற்பட்டவையாகும்.

வழமையான ஏமாற்று வேலையை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் செய்துகாட்டியுள்ளது - என்றார்.

(ச)

# மரண அறிவித்தல்

## இராசரத்தினம் செல்வரத்தினம்

### (செல்வம்)



மலேசியாவைப் பிறப்பிடமாகவும் தொல்புரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசரத்தினம் செல்வரத்தினம் நேற்று (15.07.2012) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை- செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை-தில்லைமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இராசரத்தினத்தின்(FR) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான நவரட்ணம் (கனடா), இராசரட்ணம் (கொழும்பு), காசிப்பிள்ளை-வில்வரட்ணம் (லண்டன்), நடராசா-நாகரட்ணம் (சுன்னாகம்),Dr. பொன்னம்பலம் (கொழும்பு) மற்றும் செல்லத்துரை-நேசரத்தினம் (மலேசியா), இராமசாமி-மகாலட்சுமி (லண்டன்), பாலசுப்ரமணியம்-தனலட்சுமி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிறிதாமோதரராஜா (சிறிராஜ் JP), சிறிஸ்கந்தராஜா (கணேஸ் மில் உரிமையாளர், அச்சுவேலி), சிறிகரன் (உரிமையாளர் கரன் வெல்டிங்வேக்சொப் கே.கே.எஸ் வீதி கோண்டாவில்), சிறிரஞ்சன் (கிராமசேவையாளர் J/171 ), சிறிரவீந்திரா (பெரதெனியா பல் சிகிச்சையகம் யாழ்ப்பாணம்), விஜிதா-குகதாசன் (ஓய்வு பெற்ற ஆசிரியை), லலிதா-தர்மதேவன் (ஆசிரியை-சுழிபுரம் யா/விக்ரோறியா கல்லூரி), சுவிதா-கரிகரசக்தி (விரிவுரையாளர் கல்வியியற் கல்லூரி வவுனியா) ஆகியோரின் அன்புத் தாயும், இராசலட்சுமி (தெல்லிப்பழை), வசந்தா (அச்சுவேலி), செல்வலட்சுமி (கோண்டாவில்), சறோயா (சுழிபுரம்), வனஜா (மூளாய்), குகதாசன் (ஓய்வு பெற்ற தபாலதிபர்), தர்மதேவன் (ஆசிரியர் பண்டத்தரிப்பு ஜசிந்தா பாடசாலை), ஹரிஹரசக்தி (விரிவுரையாளர்-தேசிய கல்வியியற் கல்லூரி வவுனியா), ஆகியோரின் அன்பு மாமியும், ஸ்ரீகௌசிகா (BIO Medical Science Colombo), கோகுலமேனன்( Mobital யாழ்ப்பாணம்), ராஜ்கஜன், கபில்தேவ் (ஜேர்மனி), கயூரி (ஜேர்மனி),கஜனா ( 2012 A/L Arts இந்து மகளிர் கல்லூரி), கோமதி (கனடா), விஜே (ராம் மல்ரி சொப் சுழிபுரம்) , சர்மதி (சுழிபுரம்), சரணியா(2014 A/L வேம்படி மகளிர் கல்லூரி), லக்சியன்(தரம் 9 யாழ் இந்துக் கல்லூரி), குகப்பிரியா(கனடா), குகப்பிரசாந்த்(கனடா), பிரியந்தி(சுழிபுரம்), பாதுஜா(இராமநாதன் நுண்கலைப்பீடம் 1ம் வருடம் ), பாதுஜன்(2012 விக்ரோரியா கல்லூரி), நிதுஜா(2014 A/L யா/விக்ரோரியாக் கலலூரி), நீதிகா(தரம் 7 இறம்பைக் குளம் மகளிர் கல்லூரி), இனித்திகா(இறம்பைக் குளம் கல்லூரி), ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், றுக்சன்(கனடா), தமனா(கனடா), றிசான்(ஜேர்மன்), விதுஷி(கனடா), நிக்சன்(சுழிபுரம்) ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(16.07.2012) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் ஒரு மணியளவில் பொன்னாலை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொல்புரம் மேற்கு,
சுழிபுரம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(20496) (3)



திருகோணமலை மாணவர்களுக்கான இலவச வரலாற்றுப்பாட கல்விக்கருத்தரங்கு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு திருமலை நகரசபை மண்டபத்தில் ஆரம்பமானது. ஆரம்ப நிகழ்வாக நகரசபைத் தலைவர் க.செல்வராஜா சிறப்புரை நிகழ்த்துவதையும், கலந்து கொண்ட மாணவர்களில் ஒரு பகுதியினரையும் படத்தில் காணலாம். (40)

# இனத்தின் எதிர்காலம் மாணவர் கைகளிலே

## திருமலை நகரசபைத் தலைவர் கூறுகிறார்

திருகோணமலை, ஜூலை 16

எமது இனத்தின் எதிர்காலம் மாணவர்களின் கைகளில்தான் தங்கியுள்ளது. கல்வி என்பது எமது மக்களின் மிகப்பெரிய சொத்தாகும்.அதை மாணவர்கள் மிகவும் தெளிவான முறையில் கற்க வேண்டும் என்று திருகோணமலை நகராட்சி மன்றத் தலைவர் க.செல்வராஜா தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்ட மாணவர்களுக்கான இரண்டு நாள் வரலாற்றுப் பாட கல்விக்கருத்தரங்கு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை திருமலை நகரசபை மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தநிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இன்று நாம் எல்லாவற்றையும் இழந்து நிற்கின்ற வேளையில் கல்வியை மட்டும் இன்னும் நாம் இழக்கவில்லை என்பதை மாணவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். இன்று எமக்கு, எமது இனத்துக்கு நடந்தது, நடந்து கொண்டிருப்பது என்ன என்பதை நீங்கள் அறிவீர்கள். எமது இனம் அழிக்கப்பட்டது, எமது வளம் சிதைக்கப்பட்டது, எமது நிலம் பறிக்கப்பட்டது, எமது கலாசாரம் சீரழிக்கப்பட்டது, எமது கல்வி சீர்குலைக்கப்படுகின்றது. இப்படியான சூழலில் எமது இனமும் வாழ்ந்து கொண்டிருக்கிறது என்பதை நீங்கள்புரிந்து கொள்ளவேண்டும்.

நாம், நமது இனம் இழந்ததை மீண்டும் பெற்றுக்கொள்ள எம்மிடம் இருக்கின்ற ஒரே சொத்து இந்தக் கல்வி மட்டும் தான். இதன் மேல் நீங்கள் நாட்டம் வைத்து உங்கள் பெற்றோர்கள், உங்கள் உடன்பிறப்புகளின் உதவியோடு இந்தக் கல்வியை இந்தப் பருவத்தில் சீராகப் பெற்றுக்கொள்ள வேண்டும். உங்கள் எண்ணங்களை இந்த வயதில் வேறு விடயங்களில் அலையவிடாது கல்வியில் மட்டும் கவனம்செலுத்தி நாம் இழந்தவைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

இந்தப் பிறவியில் சிறந்த கல்விமானாகத் திகழவேண்டும் அதற்காக உங்கள் கவனம் முழுவதும் இந்தப் பருவத்தில் கல்வியின் மேல் நாட்டமாக இருக்க வேண்டும்.

தற்போது நாம் நிலத்தை, வளத்தை, பலத்தை, பண்பாட்டை , கலாசாரத்தை இழந்து நின்றாலும் மீண்டும் அவைகளை நீங்கள் இந்தக் கல்வி மூலம் எமது இனத்துக்கு நாம் இழந்து நிற்கின்ற அனைத்தையும் மாணவர்களாகிய நீங்கள் பெற்றுத் தருவீர்கள் என்ற பூரண நம்பிக்கை எங்களிடம் இருக்கின்றது- என்றார். (ச-40)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கூட்டுத்தாபனத் தலைவர்களின் பதவிகளிலும் அதிரடி மாற்றங்கள்

கொழும்பு,ஜூலை 16

முக்கிய பல கூட்டுத்தாபனங்களின் தலைவர்களை அதிரடியாக மாற்றுவதற்கு அரசு நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

இவர்களில் ஊழல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ள பலர் இந்த முறை பதவிநீக்கம் செய்யப்படவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்ட சிலருக்கு தமது பதவிகளை விட்டு நீங்குமாறு ஜனாதிபதியால் தனிப்பட்ட ரீதியில் அறிவிப்புகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த நிலையில் சில தலைவர்கள் தம்மைப் பதவிநீக்கம் செய்யாதிருக்குமாறு அரசின் பிரபலங்கள் ஊடாகப் பல்வேறு மட்டங்களில் அழுத்தங்களைப் பிரயோகித்து வருவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. மேலும் சிறப்பாகச் செயற்பட்ட ஒரு சில தலைவர்களுக்குப் புதிய நிறுவனங்களும் கையளிக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (த-16-22)


# கண்ணீர் அஞ்சலி



அ. மனோரஞ்சன், பிரதிப் பிரதம செயலாளர் - நிதி மாகாணத் திறைசேரி, வட மாகாணம். அவர்களின் அன்புத் தாய்

திருமதி அழகரத்தினம் மனோன்மணி

(ஓய்வுபெற்ற ஆசிரியர்) கடந்த (14.07.2012) சனிக்கிழமை சிவபதமடைந்தார். அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரி சங்கம்,
மாகாணத் திறைசேரி, வட மாகாணம்.

(20491) (45-6-7)

# ALLIANCE FRANCAISE DE JAFFNA

The Only Official French Language Centre in Jaffna
*Learn French the French Way*

French Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட, சர்வதேச தரம் வாய்ந்த, யாழ்ப்பாணத்திலுள்ள ஒரே ஒரு பிரெஞ்சு மொழிக் கல்வி நிறுவனமாகிய Alliance Francaise de Jaffna ஊடாக பிரெஞ்சு மொழி வகுப்புகள் நடத்தப்படு கின்றன. France மற்றும் பிரெஞ் பேசப்படும் நாடுகளுக்கு செல்வோர் மற்றும் மொழி ஆர்வமுள்ள எவரும் கற்றுக்கொள்ளலாம்.

வகுப்புகள்: சனி, ஞாயிறுகளில்.

புதிய பிரிவுகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

61, Kachcheri - Nallur Road, Jaffna Phone: 021 2228093
E-mail: alliance jaffna@yahoo. com
(ரக்கா வீதியும் கச்சேரி - நல்லூர் வீதியும் இணையும் சந்தியில் அமைந்துள்ள மாடிக் கட்டடம்)
மேலதிக விபரங்களை நேரில்/தொலைபேசியினூடாக பெறலாம்.

(20492) (45-6-7)


# பொதுச் சுகாதாரப் பரிசோதகர் கொலை கண்டனத் தீர்மானம் நிறைவேற்றம்

திருகோணமலை, ஜூலை16

தம்பலகாமத்தில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் கே. எம். எம்.பளீஸ் கொல்லப்பட்டமைக்கு தம்பலகாமம் பிரதேச சபையில் நேற்றுமுன்தினம் கண்டனத் தீர்மானம் பிரதேச சபையின் தவிசாளர் எஸ்.எம்.சுபியானால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

எமது பிரதேச எல்லைக்குட்பட்ட பகுதியில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்ட பொதுச் சுகாதார பரிசோதகர் கே.எம்.பளீஸ் கடந்த 9ஆம் திகதி வீட்டு உரிமையாளர் ஒருவரால் அடித்துக் கொல்லப்பட்டமைக்கு சபை கண்டனம் தெரிவிக்கின்றது.

எதிர்காலத்தில் இது போன்ற சம்பவங்கள் இடம்பெறாது தடுப்பதற்கு அனைத்துத் தரப்பினரதும் ஒத்துழைப்பு அவசியமாகும். பொதுச் சுகாதார பரிசோதகர் கே.எம்.பளீஸின் குடும்பத்தினருக்கு நட்டஈடு பெற்றுக் கொடுக்கப்படவேண்டும்.

இந்தத் தீர்மானம் சபையில் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)


உதயன்
விளம்பரத் தொடர்புக்கு
adyt@uthayan.com
0215671111



# மரண அறிவித்தல்

பொன்னையா மங்கயற்கரசி



கொக்குவில் மேற்கு ஞானபண்டிதா வித்தியாசாலையடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா மங்கயற்கரசி நேற்று (15.07.2012) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் திருநாவுக்கரசு, இராசமணி, சுப்பிரமணியம் ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.07.2012) திங்கட்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புது வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (20497) (3)

தகவல்:
குடும்பத்தினர்


# நூறு தம்பதியருக்கு சுமங்கலி பூசை

சாவகச்சேரி, ஜூலை 16

சாவகச்சேரி சந்திரசேக வாரிவளநாதசிவன் ஆலயத்தில் 100 தம்பதியருக்கான விசேட அபிஷேகமும் பூசைகளும் எதிர்வரும் 19 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது.

ஆலய அமிர்தபாஷினி அம்பாளுக்கு நடைபெற்றுவரும் ஆடிப்பூர திருவிழாவின் சுமங்கலி பூசையாக 100 தம்பதியருக்கு இந்த விசேட அபிஷேகம் நடத்தப்படவுள்ளது. சிவஞான சம்பந்தப்பிரியன் சிவப்பிரம்ம ஸ்ரீ உமாசுதக் குருக்கள் தலைமையில் நடைபெறும் இந்த விசேட அபிஷேகத்தில் கலந்துகொள்ளவுள்ள தம்பதிகள் ஆலய முகாமையாளருடன் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (9-16)


# கோழிக்குஞ்சு விற்பனை

தடுப்பு மருந்து போடப்பட்ட "A" தரமான பிறிமா புறொயிலர் குஞ்சுகள், பேட்டுக்குஞ்சுகள் மற்றும் சிவப்பு சேவல் குஞ்சுகள் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். முன்கூட்டியே பதிவுசெய்யவும்.

| | | |
|---|---|---|
| நல்லூர் பாம் சென்ரர் | நல்லூர் பாம் சென்ரர் | கூட்டி பாம் சென்ரர் |
| #19, முருகேசர் ஒழுங்கை, | கனகபுரம் வீதி, | வட்டுக்கோட்டை |
| நல்லூர், யாழ்ப்பாணம் | கிளிநொச்சி | தொ.பே : 077 8996085 |
| தொ.பே : 021 2226944 | தொ.பே : 077 6225944 | |

(20454)(6-7-8)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 01 * 09 * 1953



மறைவு 16 * 06 * 2012

கரம்பகம் மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் இத்தாவில் பளையை வசிப்பிடமாகவும் அச்சுவேலி வடக்கை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட மேஸ்திரியார்

*அமரர் கந்தன் ஆறுமுகம் (துரை)*

பண்பின் ஒளிவிளக்காய் பாசத்தின் உறைவிடமாய்
அன்பின் இருப்பிடமாய் வாழ்ந்தீர்
உங்கள் அன்புப் பார்வையும் மகிழ்வித்த வார்த்தையும்
அரவணைத்த கரங்களையும் இழந்து நாள்கள் முப்பத்தொன்று
ஆனதே ஆறவில்லை எங்கள் இதயம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும்

அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி.

என்றும் நினைவில்
குடும்பத்தினர்.

(20489)(3.6.7)

# 4ஆம் ஆண்டு நினைவலைகள்

மண்ணுலகில் 25 ★ 07 ★ 1949



விண்ணுலகில் 30 ★ 07 ★ 2008

அமரர் முருகேசு திருஞானம்

திதி: 16.07.2012

ஆண்டுகள் நான்கு ஆனாலும் ஆறாது எம் துயர் - அப்பா
ஆயிரம் உறவுகள் வந்தாலும் உங்கள் பாசத்துக்கு ஈடாகாது - அப்பா
அன்புடன் அரவணைத்து ஆசையுடன்
வழிகாட்டி பார்போற்ற வைத்தீரே எமை - அப்பா
உமைப் பிரிந்து மனம் கலங்கி நிற்கின்றோம் - அப்பா
உம் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

இல. 10/4, சிவன் வீதி,
திருநெல்வேலி.

(20175) (45.6.9)

என்றும் உங்கள் நினைவில்
மனைவி, பிள்ளைகள்.

(20175) (45.6.9)

# நினைவலையில் எம் ஆசான்

மலர்வு 1977 * 06 * 02



உதிர்வு 2012 * 06 * 02

*அமரர் வீரசிங்கம் ஜெகதீஸ்வரன்*

கண்கள் பல உமைத்தேட
காணாமல் காலனுடன் சென்றதேனோ?
கள்ளமில்லா வெள்ளை மனமும்
புன்னகை பூத்த பொன் முகமும் மறைந்ததேனோ
கண்களெல்லாம் கடலாய் பொங்க
கலங்கவிட்டு எங்கு சென்றீர்
அமைதியாய் மரணத்திரையில்
மௌனமாய் மறைந்ததேனோ?
எமக்கு கற்பித்த காலம் கனவாகினாலும் உம்முகம்
எம்மனதிலிருந்து அழியாது.

நல்லூர் எடிசன் அக்கடமி
தரம் 8(T.M) மாணவர்கள்

(20495)(3.6)

# விசேட விலைக்கழிவு சதுரஅடி 35/=



மிகத் துல்லியமான,உயர் தரத்திலான
6 கலர்ஸ்
டிஜிற்றல் பனர் பிரின்டிங்
3 வருட உத்தரவாதம்
டிஜிற்றல் பனர்,டிஜிற்றல் ஸ்ரிக்கர்கள்
விளம்பரப் பெயர்ப் பலகைகள்
மற்றும்
பந்தல் தட்டிகள்,முகப்புகள்,
ஆலய திரை அலங்காரங்கள்
என்பன உடனுக்குடன் பெற்றுக் கொள்ளலாம்.

ஜனா டிஜிற்றல் பிரின்டிங்
JANA DIGITAL PRINTING

மானிப்பாய் வீதி,
ஆறுகால் மடம் ஆனைக்கோட்டை,
யாழ்ப்பாணம். (20494)

T.P: 021 221 3233
077 0731654
E-MAIL; JANADIGITAL@YAHOO.COM

# Lap Tops For Sale

HP க்கு வெகுமதிகள் உண்டு



| | |
|---|---|
| HP COMPAQ CQ43 2nd GEN D | 56000/= |
| HP 630 i3 | 66000/= |
| HP 630 i5 | 75000/= |
| HP PAVILION G6 i3 | 69000/= |
| HP PAVILION G6 i5 | 78000/= |
| DELL i3 | 69000/= |
| DELL i5 | 79000/= |
| DELL i7 | 99000/= |
| TOSHIBA i3 | 63000/= |
| DV6 15" i5 | 108000/= |
| DV6 14" i5 | 95000/= |
| HP BRANDED PC Doual core | 55000/= |

நளின் in மெகா Sales



உங்கள் தெரிவுக்கு முந்துங்கள்

hp DELL Authorised business Partner

Assembled Pc Doul core,i3,i5,i7 3 years Warranty

4 GB Pen drive = 850/ 3 years Warranty
8 GB Pen drive = 1100/ 3 years Warranty
16 GB Pen drive= 1850/ 3 years Warranty
HSDPA Dongle = 3800/= = 6000/= Warranty

இலவசம்
Head Phone
Mouse
Cooler Fan
Kaspersky 2012

NALIN Information Technologies Pvt Ltd

Luxan Plaza, Kasthuriyar Road , Jaffna. 195/2, Parameswara Junction, Jaffna.

e.mail - nalin@nit.lk web - www.nit.lk T.P: 0212220838 / T.P: 0212221121 / 0777667975


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பளை வைத்தியசாலையின் கட்டடப் பணி மந்தகதியில்

**2000 ஆம் ஆண்டு போர் நடைபெற்ற வேளை வைத்தியசாலை வளாகத்திலிருந்த பிள்ளையார் ஆலயம் தவிர்ந்த அனைத்துக் கட்டடங்களும் சேதமடைந்திருந்தன.**

பளை, ஜூலை 16

பளைப் பிரதேச வைத்திய சாலைக்கு இருமாடி நிர்வாக அலகுக் கட்டடம் அமைக்கும் பணிகள் மந்தகதியில் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த வருடம் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவால் பிரதேச வைத்தியசாலைக்கான அடிக்கல் நடப்பட்டது. ஒரு வருடமாகியும் கட்டடப் பணிகள் முழுமைபெறாத நிலை குறித்தும் கவலை தெரிவிக்கப்பட்டது.

2000 ஆம் ஆண்டு போர் நடைபெற்ற வேளை வைத்தியசாலை வளாகத்திலிருந்த பிள்ளையார் ஆலயம் தவிர்ந்த அனைத்துக் கட்டடங்களும் சேதமடைந்திருந்தன.

2009 ஆம் ஆண்டு பிரதேச மக்கள் மீளக்குடியமர்ந்ததை அடுத்து அந்தப் பகுதியில் உள்ள தனியார் வீடொன்றில் அடிப்படை வசதிகளற்ற நிலையில் வெளிநோயாளர் பிரிவு மட்டும் இயங்கி வருகிறது.

இந்த வைத்தியசாலையில் இரண்டு வைத்திய அதிகாரிகள் பணிபுரிகின்ற போதிலும் வெளிநோயாளர் தவிர்ந்த ஏனையோர் சாவகச்சேரி வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்படுகின்றனர்.


போர் நடைபெற்ற வேளையில் சேதமடைந்த பளை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை புனரமைக்கப்பட்டு இயங்கி வருகிறது.

ஆனால் பிரதேச வைத்தியசாலைக் கட்டட வேலைகள் மந்தகதியில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. இதே வேளை முழுமையாகச் சேதமடைந்த பளை அஞ்சல் அலுவலகக் கட்டட வேலைகள் ஆரம்ப கட்டப் பணிகளுடன் இடைநிறுத்தப்பட்டுள்ளமை குறித்தும் கவலை தெரிவிக்கப்பட்டது.

எழுதுமட்டுவாழ் தொடக்கம் ஆனையிறவு வரையான பளைப் பிரதேசத்துக்கான அஞ்சல் அலுவலகக் கட்டட வேலைகள் இடைநடுவில் நிறுத்தப்பட்டுள்ள நிலையில் கடந்த நான்கு வருடங்களாக நிரந்தரக் கட்டடமில்லாததால் அஞ்சலக செயற்பாடுகள் மாறி மாறி ஒவ்வொரு இடங்களிலும் இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

பிரதேச மக்களின் அத்தியாவசிய அரச நிறுவனங்களான பிரதேச வைத்திய சாலை மற்றும் அஞ்சல் அலுவலகம் ஆகியவற்றின் கட்டடப் பணிகளை விரைவில் முடித்து செயற்படுத்த உரிய அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்படுகிறது. (ம-9)

## முதலாவது இசுறு பாடசாலையின் புதிய கட்டடம் நேற்றுத் திறப்பு



வலி.வடக்கு,ஜூலை16

வடமாகாணத்துக்கான முதலாவது இசுறு பாடசாலைக்கான புதிய கட்டடத் தொகுதி சுன்னாகம் ஸ்கந்த வரோதயாக் கல்லூரியில் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தனவால் கல்லூரி அதிபர் ஆறு.திருமுருகன் தலைமையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி வடமாகாணக் கொடியை ஏற்றி வைக்க தேசியக் கொடியை கல்வி அமைச்சர் ஏற்றினார்.

சுமார் 5 மில்லியன் ரூபா செலவில் கட்டப்பட்ட மூன்று மாடிக் கட்டடத்தைக் கல்லூரி மாணவர்களுடன் இணைந்து கல்வி அமைச்சர் திறந்து வைத்தார். தொடர்ந்து இரு மாடிக் கட்டடமும் திறந்து வைக்கப்பட்டது.

இந்தக் கட்டடத்தில் விவசாய ஆய்வுகூடம், விஞ்ஞான ஆய்வுகூடம், தொழில்நுட்ப ஆய்வுகூடம் மற்றும் நூலகம், நிர்வாகக் கட்டடம் எனப் பல தொகுதிக் கட்டடங்களும் திறந்து வைக்கப்பட்டன. பாரம்பரிய சிறுகைத்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நாடாளுமன்ற குழுக்களின் உப தலைவரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மு.சந்திரகுமார், யாழ்ப்பாணம் மாநகர சபை முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசா உட்பட மற்றும் கல்வி அமைச்சின் அதிகாரிகள், வடமாகாண கல்வி அமைச்சின் அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ம-86)

## கழிவுகளால் நிறையும் செம்மணி வயல் நிலங்கள்

செம்மணியில் உள்ள வயல் வெளிகளில் தினமும் இறைச்சிக்காக வெட்டப்படும் கோழிகளின் கழிவுகள் கொட்டப்படுவதாக அந்தப் பகுதி விவசாயிகளாலும் வீதியால் செல்லும் பயணிகளாலும் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வீதியின் இரு பக்கங்களிலும் வயல் நிலங்கள் காணப்படும் நிலையில் சிலரால் இறைச்சிக்காக வெட்டப்படும் கோழிகளின் சிறகுகள் மற்றும் குடல் போன்றகழிவுகள்உரப்பைகளில் நிரப்பப்பட்டு மக்களின் நடமாட்டம் குறைந்த நேரங்களில் இந்தப் பகுதி வயல்வெளிகளில் கொட்டப்படுகின்றன.

இவற்றை நாய்கள் இழுத்து வயல் முழுவதும் பரவுகின்றன. அத்துடன் இந்தப் பகுதிகளில் துர்நாற்றம் வீசுகிறது. இதனால் வீதியால் செல்வோர் மூக்கைப் பொத்திய படியே செல்ல வேண்டிய நிலைமை உள்ளது. இதே வேளை இந்த வயல் நிலங்களில் வீடுகளில் இருந்து வெளியேற்றப்படும் கழிவுகளும் கொட்டப்படுகிறது. இதனால் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருவதாக விவசாயிகள் கூறுகின்றனர். (ம-288)

# சட்டவிரோதமாக பல தடவை மணல் ஏற்றியவர் சிக்கினார்

### 2 லட்சத்து 25 ஆயிரம் ரூபா அபராதம்

யாழ்ப்பாணம், ஜூலை 16

சட்ட விரோதமாக மணல் ஏற்றிச் சென்ற குற்றத்துக்காக ஊர்காவற்றுறை புளியங்கூடலைச் சேர்ந்த ஒருவருக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றம் 2 லட்சத்து 25 ஆயிரம் ரூபா அபராதமும் 5 வருடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்ட 6 மாத சிறைத் தண்டனையும் விதித்துத் தீர்ப்பளித்தது.

இந்த வழக்கு நீதிவான் ஆர்.எஸ்.மகேந்திரராஜா முன்னிலையில் கடந்த 12 ஆம் திகதி விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

குற்றவாளி ஏற்கனவே சில தடவைகள் சட்ட விரோதமாக மணல் ஏற்றிச் சென்ற குற்றத்துக்காக ஊர்காவற்றுறை நீதிமன்றினால் தண்டிக்கப்பட்டிருந்தார்.

மீண்டும் சில நாள்களுக்கு முன்னர் டிராக்டர் ஒன்றில் மண்கும்பானிலிருந்து வேலணை நோக்கி சட்டவிரோதமாக மணல் ஏற்றிச் சென்றபோது ஊர்காவற்றுறைப் பொலிஸாரிடம் மாட்டிக்கொண்டார்.

அவரைப் பொலிஸார் ஊர்காவற்றுறை நீதிமன்றில் முற்படுத்தினர். அதன்போது ஏற்கனவே இவ்வாறான குற்றச்செயலில் ஈடுபட்டீரா? என நீதிவான் கேட்டபோது முதலில் இல்லையென்று பதில் அளித்துள்ளார். அவர் முற்குற்றம் புரிந்திருந்தமை பதிவேட்டிலிருந்து தெரியவந்தது. பின்னர் அதனை ஒப்புக் கொண்டார்.

தவிர இறுதியாக அகப்பட்டுக்கொண்டமை தொடர்பான வழக்கில்தான் முதலில் சுற்றவாளி என்று கூறி கடந்த இரண்டு தடவைகள் வாதாடியிருந்தார். இதனையடுத்து அந்த வழக்கு விளக்கத்துக்காக கடந்த 12 ஆம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டது. மீண்டும் இந்த வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது தான், குற்றவாளி என்பதனை ஒப்புக்கொண்டார். முற்குற்றம் இருந்தமை தொடர்பில் முன்னர் நீதிமன்றில் பொய் கூறியுள்ளார்.

விசாரணைகளின் பின்னர் அவரைக் குற்றவாளியாக இனங்கண்டு அவருக்கு 2 லட்சத்து 25 ஆயிரம் ரூபா அபராதமும் அதனைச் செலுத்தத் தவறின் 6 மாத காலச் சிறைத்தண்டனையும், 5 வருடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்ட 6 மாதகால சிறைத்தண்டனையும் விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

மணல் பறிமுதல் செய்யப்பட்டதோடு, வாகன உரிமைக்கோரிக்கைக்காக வழக்கும் ஒத்திவைக்கப்பட்டது. வாகனம் சட்ட விரோத பாவனைக்கு உட்படுத்தப்பட்டதா என சரியான விளக்கம் அளித்தல் வேண்டும். தவறின் வாகனம் பறிமுதல் செய்யப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (த-4)

# மாடுகள், பன்றிகளால் கிராம்புவிலில் பயிரழிவு

தென்மராட்சி,ஜூலை16

சாவகச்சேரி, பெருங்குளம் மற்றும் கிராம்புவில் வயல் பகுதிகளில் கட்டாக்காலி மாடுகள் மற்றும் பன்றிகளால் ஏற்படும் அழிவுகளைத் தடுக்க வேலிகளை அமைத்துத் தருமாறு அந்தப் பகுதி விவசாயிகள் கோரியுள்ளனர்.

காலபோக நெற்செய்கை காலத்தில் நெல் விதைக்கப்பட்டு அறுவடையின் பின்னர் உப உணவுப் பயிர்கள் பயிரிடப்பட்டு வருவது காலம் காலமாகப் பயிர்ச் செய்கையாளர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தென்மராட்சிப் பிரதேசத்தில் வற்றாளை மற்றும் வெண்டி உற்பத்திக்கு பெயர் போன விளைச்சல் நிலத்தில் கடந்த இரண்டு வருடங்களாக நெற்செய்கை மற்றும் உப உணவுப் பயிர்ச்செய்கை போன்ற உற்பத்திப் பயிர்கள் கட்டாக்காலி மாடுகள் மற்றும் பன்றிகளால் அழிக்கப்பட்டு வருகின்றன. இதனால் இந்த வருடம் வற்றாளை பயிரிடல் முற்றாக நிறுத்தப்பட்டு விட்டது. 500 இற்கும் மேற்பட்ட நிலப்பரப்பில் காலபோக நெற்செய்கை விரைவில் ஆரம்பமாகவுள்ளதால் நெற்பயிர்களைப் பாதுகாக்க வயல்களில் விதைப்புக்கள் ஆரம்பமாவதற்கு முன்னர் இந்த விளை நிலத்தைச் சுற்றிப் பாதுகாப்பு வேலி அமைத்துத் தருமாறு விவசாயத் திணைக்களத்தினரை இந்தப் பகுதி விவசாயிகள் கேட்டுள்ளனர். (த-9)

## புளியந்திடல் ஆலயம் செல்லும் வீதியைத் திருத்தக் கோரிக்கை

தென்மராட்சி,ஜூலை 16

மந்துவில் வடக்குப் பகுதியில் போர்த்துக்கேயர் காலத்தில் அமைக்கப்பட்ட புளியந்திடல் கந்தசாமி ஆலயத்துக்குச் செல்லும் வீதியைத் திருத்தித் தருமாறு ஆலய அடியார்கள் கேட்டுள்ளனர்.

மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயத்துக்கு முன்பாக உள்ள ஆலயத்துக்கு செல்லும் சுமார் இரண்டு கிலோ மீற்றர் நீளமுடைய வீதி கடந்த 50 வருடங்களுக்கு மேலாகப் புனரமைக்கப்படாமல் குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றது.

விவசாயக் குடும்பங்களைக் கொண்டுள்ள இந்தக் கிராம மக்கள் இந்த வீதியினூடாகவே தமது பயணத்தை மேற்கொள்கின்றனர்.

மழை காலத்தில் பல இடங்களில் வெள்ளம் தேங்கி நிற்பதால் மாணவர்கள் உட்பட பொதுமக்கள் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இந்த வீதியூடாக சரசாலை, கப்புதூர், மந்துவில் மேற்கு போன்ற இடங்களுக்குச் செல்லக்கூடிய வீதிகள் இருந்த போதிலும் அவற்றினூடாகப் பயணிக்க முடியாத நிலையில் பாவனை குறைந்து ஏனைய வீதிகள் பற்றைக் காடுகளாக மாறியுள்ளன. இந்த வீதியைப் புனரமைத்துத் தருமாறு மக்கள் கோரியுள்ளனர். (த-9)




இந்துபோர்ட் இராசரத்தினம் அவர்களின் 128 ஆவது பிறந்தநாள், திருநெல்வேலி சைவச் சிறுவர் இல்லத்தில் அண்மையில் நடைபெற்றது. இல்லச் சிறுமிகள் பெரியாரின் திருவுருவப் படத்துக்கு மலர் அஞ்சலி செய்வதை முதலாவது படத்திலும், பேராசிரியர் வேல்நம்பி நினைவுப் பேருரை நிகழ்த்துவதை இரண்டாவது படத்திலும் காணலாம். நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட நல்லூர் பிரதேச செயலாளர் பா.செந்தில்நந்தனன் மற்றும் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் தலைவர் சோ.பத்மநாதன் ஆகியோரும் காணப்படுகின்றனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரபாகரன் தலைமையில் 5ஆம் கட்ட விடுதலைப் போர்

## பழ.நெடுமாறன் சூளுரை

இன்று போரில் பின்னடைவு ஏற்பட்டிருக்கலாம். ஆனால் மீண்டும் பிரபாகரன் தலைமையில் 5ஆம் கட்ட விடுதலைப் போர் நிச்சயம் தொடரும் மக்கள் உரிமை கூட்டமைப்புத் தலைவர் பழ.நெடுமாறன் தெரிவித்தார்.

சிதம்பரம் கீழவீதி சரவணா திருமண மண்டபத்தில் மக்கள் உரிமைக் கூட்டமைப்பு சார்பில் பழ.நெடுமாறன் எழுதிய பிரபாகரன் ''தமிழர் எழுச்சி வடிவம்'' என்ற நூலின் அறிமுக விழா நேற்றுமுன்தினம் நடைபெற்றது. விழாவில் பங்கேற்று பேசினார். இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

விடுதலைப்புலிகள் பிரபாகரனின் வீரம் செழிந்த விடுதலைப் போராட்ட வரலாற்றை தற்கால இளைஞர்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தில்- பிரபாகரன் தமிழர் எழுச்சி வடிவம்- நூல் எழுதப்பட்டது.

உலகத்தில் எத்தனையோ விடுதலைப் போராட் டங்கள் நடத்தப்பட்டுள்ளன. ஆனால் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் விடுதலைப் போராட்டத்தை வேறொன்றுடன் ஒப்பிட முடியாது.



ஏனென்றால் பிரபாகரன் போராட்டத்துக்கு எந்த நாடுகளின் உதவிகளும் கிடைக்க வில்லை. 20 நாடுகள் அணி திரண்டு ஒழிக்க முயற்சித்தன. உலகம் முழுவதும் வாழும் தமிழர்களிடம் நிதியைத் திரட்டி ஆயுதங்களைப் பெற்று 30 ஆண்டுகளுக்கு மேலாக விடுதலைப் போரை நடத்தியவர் பிரபாகரன். இன்று போரில் பின்னடைவு ஏற்பட்டிருக்கலாம். மீண்டும் பிரபாகரன் தலைமையில் 5ஆம் கட்ட விடுதலைப் போர் நிச்சயம் தொடரும்.


பிரபாகரன் வீரம் செறிந்த வரலாறு கொண்ட இந் நூல் தமிழக இளைஞர்க ளுக்கு அளித்த ஆயுதமா கும். ஒரு கருவியாகும். இந்த நூலைப் படிக்கும் இளைஞர்கள் பிரபாகரனின் அடுத்த கட்ட போராட்டத்துக்குத் துணை நிற்க வேண்டும். தோள் கொடுக்க வேண்டும். எப்படியாவது பதவி பெற்று, அதனை வைத்து பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற எண்ணத்தை இளைஞர்களிடையே இன்றைய அரசியல் கட்சிகள் உருவாக்கியுள்ளன. இந்த மாயையை மாற்றுவதற்கே இப்படிப்பட்ட நூல் எழுதப்பட்டது. தமிழர்கள் நிலை அழிவின் விளிம்பில் கொண்டு வந்து நிறுத்தப்பட்டுள்ளது.

இன்று இலங்கைத் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள். நாளை மலேசியத் தமிழர்களுக்கு இந்தநிலை ஏற்படலாம். ஏன் தமிழ் நாட்டில் உள்ள தமிழர்களுக்கே இந்நிலை ஏற்படலாம். எனவே நாம் இந்தக் காலகட்டத்தில் விழிப்புணர்வுடன் ஒன்று சேர்ந்து அனைத்துவித தியாகத்துக்கு தயாராகி போராட துணிய வேண்டும். தமிழர்களின் முதலாவது, இறுதியான எதிரி இந்தியா. இலங்கை தமிழர் படுகொலையில் ராஜபக்ஷ மட்டும் குற்றவாளி அல்லர். மன் மோகன் சிங்கும் குற்றவாளியே, அதற்குத் துணையாக நின்ற கருணாநிதியும் குற்றவாளி நான் - என்றார். (வ)

## துணை ஜனாதிபதி வேட்பாளர் அன்சாரியே

### அறிவித்தார் சோனியா

துணை ஜனாதிபதி வேட்பாளருக்காக ஐக்கிய முற்போக்குக் கூட்டணி சார்பில் ஹமீது அன்சாரியை அதிகாரபூர்வமாக சோனியா காந்தி அறிவித்தார்.



இதற்கான ஆலோசனைக் கூட்டம் நேற்றுமுன்தினம் மாலை புதுடில்லியில் நடைபெற்றது.

சோனியா காந்தி தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் பிரதமர் மன்மோகன் சிங், காங்கிர ஸின் கூட்டணிக் கட்சித்தலைவர்கள் மற்றும் காங்கிரஸின் முக்கிய பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இந்தக்கூட்டத்தில்சோனியா காந்தி, மீண்டும் துணை ஜனாதிபதியாக ஹமீது அன்சாரியை நிறுத்தும் நோக்கில் அவரையே வேட்பாளராக அறிவித்தார்.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 7 ஆம் திகதி துணை ஜனாதிபதிக்கான தேர்தல் நடைபெற உள்ளது. இதற் கான வேட்பு மனுத்தாக்கல் ஏற்கனவே ஆரம்பமாகி விட்டது. இதுவரை யாரும் வேட்பு மனு செய்யவில்லை.

துணை ஜனாதிபதித் தேர்தலில், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமே வாக்களிக்க முடியும். காங்கிரஸ் முன்னிறுத்தும் ஹமீத் அன்சாரிக்கு திரிணாமுல் காங்கிரஸ் தவிர ஏனைய கூட்டணிக் கட்சிகள் அனைத்தும் ஆதரவு தெரிவித்துள்ளன.

முலாயம்சிங் மற்றும் மாயாவதியின் ஆதரவும் உள்ளது. இதனால் வெற்றிக்குத் தேவையான 396 நாடாளுமன்ற உறுப்பினர் களை விடவும் கூடுதலாக 50 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவு அன்சாரிக்குக் கிடைத்துள்ளது. இதனால் ஐ.மு. கூட்டணி வேட்பாளராக அன்சாரி அறிவிக்கப்பட்டால் அவரது வெற்றி உறுதி.

## பாகிஸ்தான் ரீ.வி. அலைவரிசைகளுக்கு தடையை நீக்க இந்தியா ஆலோசனை

புதுடில்லி, ஜூலை 16

பாகிஸ்தானின் தொலைக் காட்சி அலைவரிசைகளுக்கு இந்தியா விதித்துள்ள தடையை வாபஸ் பெற வேண்டும் என்று பாகிஸ்தானின் வெளி விவகாரச் செயலர் ஜாலில் அபாஸ் ஜிலானி விடுத்த கோரிக்கையைப் பரிசீலிப்பதாக இந்தியா அறிவித்துள்ளது.

கடந்த வாரம் ஜிலானி, இந்திய மத்திய அரசுக்கு ஒரு கோரிக்கை விடுத்தார். அதில் பாகிஸ்தானின் அரச மற்றும் தனியார் தொலைக் காட்சி அலைவரிசைகளுக்கு இந்தியா வில் விதிக்கப்பட்டிருக்கும் தடை நீக்கப்பட வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.



ஐக்கிய முற்போக்குக் கூட்டணிக் கட்சி சார்பில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பிரணாப்முகர்ஜி மும்பையில் சிவசேனா கட்சியின் தலைவர் பால்தாக்கரேயைச் சந்தித்தார்.

## சரணடையும் மாவோக்களுக்கு பணப்பரிசில், உதவித் தொகை

மாவோயிஸ்ட்டுகள் சரணடைந்தால் அவர்களுக்கு பரிசில்களையும், மாதாந்தம் உதவித்தொகைகளையும் வழங்க மத்திய அரசு முன் வந்துள்ளது.

இந்தியாவில் 11 மாநிலங்களில் மாவோ தீவிரவாதிகளின் அட்டூழியம் அதிகரித்துள்ளது. இவர்கள் அரச பிரதிநிதிகளைக் கடத்துவது, ரயில் தண்டவாளங்களுக்குக் குண்டுவைத்துத் தகர்ப்பது என பல நாச வேலைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தநிலையில் இவர்கள் மனம் திருந்தி, சரணடைந்தால் ரூ.1.5 லட்சம் வழங்குவதாக மத்திய அரசு அறிவித்துள்ளது. ஏற்கனவே இந்தத் தொகை ரூ.10 ஆயிரமாக இருந்து தற்போது 15 சதவீதம் உயர்த்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதுதவிர ஆயுதங்களுடன் சரணடைந்தால் ரூ.5 லட்சம் தருவதாகவும் மேலும் மாதம் தோறும் ரூ.2 ஆயிரம் உதவித் தொகை என்று 36 மாதங்களுக்கு தருவதாகவும் மத்திய அரசு தெரிவித்துள்ளது.

**இத்தகைய திட்டங்கள் மூலம் உள்நாட்டு மாவோ தீவிரவாதிகளின் அட்டூழியங்களைக் குறைக்க முடியும்.**

இத்தகைய திட்டங்கள் மூலம் உள்நாட்டு மாவோ தீவிரவாதிகளின் அட்டூழியங்களைக் குறைக்கமுடியுமென உள்நாட்டு பாதுகாப்பு சிறப்பு செயலாளர் அஜய் சத்தா தெரிவித்துள்ளார்.

## இந்தியாவின் செயற்கைக்கோள் விரைவில் செவ்வாய்க் கிரகத்துக்கு

ஸ்ரீஹரிகோட்டா, ஜூலை 16

செவ்வாய்க் கிரகத்துக்கு செயற்கைக் கோளை அனுப்பும் திட்டத்துக்கு விரைவில் அரச அனுமதி கிடைத்து விடும் என்று இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையத்தின் தலைவர் கே. ராதா கிருஷ்ணன் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக செய்தியாளர்களிடம் அவர் தெரிவித்ததாவது:-

செவ்வாய்க் கிரகத்துக்கு செயற்கைக்கோள்ள அனுப்பும் திட்டத்துக்கான அனுமதி பெறுவதில் கடைசிக் கட்டத்துக்கு தற்போது வந்துள்ளோம். இந்தத் திட்டத்துக்கு அரசிடமிருந்து அனுமதி கிடைத்ததும் பணிகள் ஆரம்பிக்கப்படும். அடுத்த ஆண்டு நவம்பர் மாதம் இந்தத் திட்டத்தைச் செயற்படுத்த முடிவு செய்துள்ளோம்.

**இந்தத் திட்டத்தின்படி ரொக்கெட் மூலம் செயற்கைக்கோளை அனுப்பி, செவ்வாய் கிரகத்தின் சுற்றுவட்டப் பாதையில் நிலைநிறுத் தம் செய்ய முடிவு செய்யப் பட்டுள்ளது.**


இந்தத் திட்டத்தை வெற்றிகரமாகச் செயற்படுத்துவதற்கான அறிவியல் ரீதியான சாத்தியக்கூறுகள் அடங்கிய வரைவுத் திட்டம் அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின்படி, பி.எஸ்.எல்.வி - எல்.எக்ஸ் ரொக்கெட் மூலம் செயற்கைக் கோளை அனுப்பி, செவ்வாய்க் கிரகத்தின் சுற்றுவட்டப் பாதையில் நிலைநிறுத்தம் செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து அந்தக் கிரகம் பற்றிய தகவல்களைச் சேகரிக்க முடியும். -என்றார்.

## அமர்நாத் யாத்திரிகர்களின் பஸ் பள்ளத்தில் பாய்ந்தது

### 15 பேர் சாவு; 18 பேர் காயம்

ஜம்மு- காஷ்மீரில் அமர்நாத் யாத்திரிகர்களுடன் சென்ற அரச பஸ் ஒன்று பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 15 பேர் உயிரிழந்தனர். 18 பேர் காயடைந்தனர்.



ஜம்மு பள்ளத்தாக்கிலிருந்து அரசுப் பஸ் ஒன்று ரம்பான் மாவட்டத்தின் டிக்தூல்- நல்லாஹ் மலைப் பகுதியில் சென்று கொண்டிருந்தபோது சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து ஆழமான பள்ளத்தில் உருண்டு விழுந்து விபத்துக்குள்ளானது.

இதில் 15 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். 18 பேர் காயமடைந்தனர். சம்பவ இடத்துக்கு வந்த மீட்புப்படையினர் 14 பேரின் உடல்களை மீட்டனர்.

காயமடைந்தவர்கள் ஜி.எம்.சி. மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டனர்.

இந்த விபத்துக் குறித்து ரம்பான் மாவட்ட பொலிஸ் அதிகாரி அனில் மகோத்ரா, இவர்கள் அமர்நாத் யாத்திரைக்குச் செல்ல இருந்ததாக தெரிவித்தார். எனினும் அதற்கான ஆவணங்கள் உள்ளனவா என விசாரணை இடம் பெறுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரியாவில் தொடரும் கொலைகள் ஐ.நாவின் தலையீடு அவசியம்

## பான் கீ -மூன் வலியுறுத்து

**சிரியாவின் டிரெய்சா பகுதியில் இராணுவத்தினர் கடந்த வியாழக்கிழமை நடத்திய தாக்குதலில் 200 இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் உயிரிழந்தனர்.**




சிரியாவில் மக்கள் மீது அரசு நிகழ்த்தும் தாக்குதலை தடுத்து நிறுத்த ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புக் குழு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஐ.நா.சபையின் பொதுச் செயலாளர் பான் கீ - மூன் வலியுறுத்தியுள்ளார். தாக்குதலைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை மேற் கொள்ளாவிட்டால், மக்களைக் கொல்ல சிரியா அரசுக்கு உரிமம் வழங்கியதைப் போல ஆகிவிடும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

சிரியாவில் இராணுவத்துக்கும், அரசு எதிர்ப்புப் படைக்கும் இடையே மோதல் நடைபெற்று வருகிறது. இந்த நிலையில், அந்நாட்டின் டிரெய்சா பகுதியில் இராணுவத்தினர் கடந்த வியாழக்கிழமை நடத்திய தாக்குதலில் 200 இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் உயிரிழந்தனர். இதற்கு அரபு லீக் உட்பட பல்வேறு அமைப்புகள் கடும் கண்டனம் தெரிவித்திருந்தன. இந்தநிலையில் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் பான் கீ - மூன் தெரிவித் துள்ளதாவது:-

சிரியா பிரச்சினை குறித்து ஐ.நா. பாதுகாப்புக் குழுவில் கொண்டு வரப்பட்ட தீர்மானம் மதிக்கப் படவில்லை. எனவே, அனைத்து உறுப்பினர்களும் இணைந்து சிரியா அரசு மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறு செய்யத் தவறினால், அந்தநாட்டு அரசின் செயற்பாடுகளுக்கு உரிமம் வழங்கியதாக ஆகிவிடும். அந்த நாட்டில் அமைதியை நிலை நிறுத்த சர்வதேச நாடுகள் கொண்டு வந்த திட்டத்தைச் செயற்படுத்த அதிபர் பசார் அல் - அசாத்துக்கு விருப்பமில்லை என்ற சந்தேகம் எழுந்துள்ளது- என்றார்.

இதற்கிடையே சிரியா மீது இராணுவம் சாராத நடவடிக்கையாக, பொருளாதாரத் தடையை விதித்து நெருக்கடி கொடுப்பது என்ற மேற்கு நாடுகளின் கோரிக்கையை ரஷ்யா நிராகரித்து விட்டது. முன்னதாக ஐ.நா. சபையின் முன்னாள் பொதுச் செயலாளரும், சிரியாவுக்கான அமைதித் தூதுவருமான கோபி அனான், பாதுகாப்புக் குழுவுக்கு எழுதிய கடிதத்தில், பீரங்கி, ஹெலிகொப்டர் உள்ளிட்டவற்றின் மூலம் மக்கள் மீது குண்டுவீச்சுத் தாக்குதல் நடத்தமாட்டோம் என்று உறுதியளித்திருந்த சிரியா, அதை மீறிவிட்டதுஎன்றுதெரிவித்திருந்தார்.(வ)



எகிப்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஹிலாரிகிளிண்டன் தலைநகர் கெய்ரோவில் வெளியுறவுத்துறை அமைச்சர் முகம்மது கமல் அமரை சந்தித்தார்.

## உலகின் பிரபலமான கட்டடம் விற்பனை

உலகிலேயே மிகப் பிரபலமான ஜப்பானின் மேற்கு டோக்கியோ பகுதியில் உள்ள கட்டடம் ஒன்று விற்பனைக்கு வர உள்ளது. இதன் மதிப்பு 14.72 மில்லியன் பவுண்ஸ்கள் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

உலகிலேயே அதிக மதிப்பு கொண்ட இந்தக் கட்டடம் தற்போது விற்பனைக்கு வந்துள்ளதாக சோத்பி இண்டர் நேசனல் ரியாலிட்டி நிறுவனம் தெரிவித்துள்ளதாக 'த டெலிகிராப்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

(வ)

## தாய்லாந்து பயணிகள் விமானத்தை சுட்டு வீழ்த்தியது கம்போடியா

தாய்லாந்துக்குச் சொந்தமான பயணிகள் விமானம் ஒன்றை, கம்போடியா இராணுவத்தினர் சுட்டு வீழ்த்தியதாக தகவல் வெளியானது.

ஆனால் பயணிகள் விமானத்தின் மீது கம்போடியா இராணுவத்தினர் சுடவில்லை என்று தாய்லாந்து பிரதமர் யிங்லுக் ஷினாவத்ர தெரிவித்துள்ளார். இதே கருத்தை வெளிவிவகாரத்துறை அமைச்சரும் வெளியிட்டுள்ளார்.

இந்தநிலையில் குடியரசுக் கட்சியின் செய்தித் தொடர்பாளர் சவனோந் தெரிவித்ததாவது:-

வெளிவிவகாரத்துறை அமைச்சர் பொய் சொல்கிறார். இந்த விவகாரம் தொடர்பாக பிரதமர் கம்போடியாவை கண்டித்திருக் கலாம்.

அதை விட்டு விட்டு அவசரமாக அறிக்கை வெளியிட்டது கண்டனத்துக்குரியது என்றார். சீம் ரீம் விமான நிலையத்தில் காலை 9 மணிக்கு இறங்க வேண்டிய விமானம் வானம் தெளிவாக இல்லாததால் தாய்லாந்தில் இறங்கியது.

அப்போது அரைமணி நேரமாக அது வானத்தில் சுற்றிக் கொண்டேயிருந்தது. பின்பு சீம் ரீம் விமான நிலையத்தில் இறங்கி விட்டது-என்றார்.

இதேவேளை,இந்த விமானம் வானத்தில் அரை மணி நேரம் சுற்றிக் கொண்டிருந்ததால் இது உளவு விமானமாக இருக்குமோ என்று சந்தேகப்பட்டு கம்போடியா இராணுவத்தினர் சுட்டனர் என்றும் கம்போடியாவின் இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார்.(வ)

## மீண்டும் விண்வெளிக்கு சுனிதா வில்லியம்ஸ்

இந்திய வம்சாவளியைச் சேர்ந்த அமெரிக்க விண்வெளி வீராங்கனை சுனிதா வில்லியம்ஸ்(வயது 46) 2ஆவது முறையாக விண்வெளிக்குப் பயணம் மேற்கொள்கிறார்.

நேற்றுக்காலை 8.40 மணிக்கு கஜகஸ்தானில் உள்ள பைகோனூர் ஏவு தளத்தில் இருந்து, விண்வெளிப் பயணத்தை மேற்கொண்டார்

அவருடன் ரஷ்யா மற்றும் ஜப்பானைச் சேர்ந்த 2 விண்வெளி வீரர்கள் பயணிக்கின்றனர்.

இந்த மூவரும், சர்வதேச விண்வெளி மையத்தில் உள்ள 32 பேர் கொண்ட குழுவுடன் வரும் 17ஆம் திகதி இணைந்து கொள்வர் என்று நாசா தெரிவித் துள்ளது.



ஏற்கனவே சுனிதா வில்லியம்ஸ் விண்வெளியில் அதிக நாள் (195 நாள்கள்) தங்கி ஆய்வு செய்த வீராங்கனை என்ற சாதனையைப் புரிந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ)

## ஜப்பானில் கனமழை 29 பேர் உயிரிழப்பு



ஜப்பானின் தென்மேற்கு மாநிலங்களில் பெய்த கனமழை மற்றும் வெள்ளத்தில் சிக்கி 29 பேர் உயிரிழந்தனர். வீடிழந்து தவிக்கும் 4 லட்சம் பேர், பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப் பட்டுள்ளனர்.

ஜப்பானின் தென்மேற்கு மாநிலமான புகோகோ, குமாமோடோ, யனகவா ஆகியவற்றில் கடந்த ஒரு வாரமாக கனமழை பெய்து வருகிறது. அதனால், பல நகரங்கள் வெள்ளக் காடாகின. பல பகுதிக ளில் நிலச்சரிவு ஏற்பட்டு வீடுகள் மண்ணுக்குள் புதைந்தன. கைஷு என்ற நகரில் ஏற்பட்ட பயங்கர நிலச்சரிவில் புதைந்து 20 பேர் உயிரிழந்தனர். வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு 5 பேர் உயிரிழந்தனர்.

தொடர் மழையால் பல நகரங்கள் வெள்ளத்தில் மிதக்கின்றன. வீடுகளுக்குள் தண்ணீர் புகுந்ததால் 4 லட்சம் பேர் வீடிழந்து தவிக்கின்றனர். ஏராளமானோர் மொட்டை மாடிகள், மரங்கள், கம்பங்களில் தஞ்சம் அடைந்து மீட்புக் குழுவினரை எதிர்பார்த்துக் காத்திருந்தனர். மீட்புக் குழுவினர் போர்க்கால வேகத்தில் செயற்பட்டு பாதிக்கப்பட்டவர்களை பாதுகாப்பான பகுதிகளுக்கு அப்புறப்படுத்தி வருகின்றனர். இதற்கிடையே, அடுத்த சில தினங்களுக்கு பலத்த மழை தொடரும் என்றும் நிலச்சரிவுகள் ஏற்படலாம் என்றும் வானிலை மையம் எச்சரித்துள்ளது.(வ)

## சோதனைக் குழாயில் பிறந்த பெண் உலக அழகி இறுதிப் போட்டியில்



சோதனைக்குழாய் மூலம் பிறந்த பிரிட்டனைச் சேர்ந்த பெண் ஒருவர் உலக அழகி இறுதிப்போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளார்.

பிரிட்டனைச் சேர்ந்த வின்ஸ்டன் என்ற பேராசிரியரின் உதவியால் சோதனைக்குழாய் (ஐ.வி.எப்) மூலம் 1988ஆம் ஆண்டு வான்னி, கென் தம்பதியர், சர்லோட் கோல்ம்ஸ் என்ற பெண் குழந்தையைப் பெற்றெடுத்தனர்.

வளர்ந்த அந்தப் பெண் குழந்தை கோல்ம்ஸ், கடந்த மாதம் மிஸ். பிரிட்டன் பட்டம் பெற்றார்.

இந்த நிலையில், அடுத்த வாரம் சீனாவில் நடைபெற உள்ள மிஸ். வேர்ள்ட் பட்டம் பெறத் தயாராகி வருகிறார்.

உலக அழகிப் போட்டியில் பங்கேற்க சீனா செல்லும் கோல்ம்ஸ் 119 அழகிகளுடன் இந்தப்பட்டத்துக்காக போட்டி போடவுள்ளார்.

மிஸ். பிரிட்டன் பட்டம் வென்றதன் மூலம் உலக அழகிப்போட்டியில் பங்கு பெற வாய்ப்புக் கிடைத்ததாகக் கூறும் கோல்ம்ஸ், இந்தப் போட்டியில் பங்கேற்பதை தன்னால் வார்த்தைகளில் விவரிக்க இயலவில்லை என்று தெரிவித்தார். (வ)

## ஒபாமாவை கொலை செய்ய முயன்றவருக்கு 15 வருட சிறை

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவைக் கொலை செய்ய முயன்ற நபருக்கு அமெரிக்க நீதிமன்றம் 15 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்துள்ளது.

உஸ்பெகிஸ்தானைச் சேர்ந்த 22 வயதான உலுக்பெக் கோடிரோவ், படிப்பதற்கான ஆவணங்களுடன் 2009 ஆம் ஆண்டு அமெரிக்காவுக்குள் நுழைந்திருக்கிறான்.

பின்னர் அனுமதி அளித்த குறிப்பிட்ட காலத்தை தாண்டியும் மறைமுகமாக அங்கேயே தங்கி சட்டவிரோதச் செயல்களில் ஈடுபட்டுள்ளான்.

தீவிரவாதிகளுக்கு ஆயுதங்கள் வழங்கியது, ஜனாதிபதி பராக் ஒபாமாவைக் கொல்ல மிரட்டல் விடுத்தது மற்றும் ஆயுதங்கள் பதுக்கி வைத்திருந்தது உட்பட பல வேறு வழக்குகளின் கீழ் 2011 ஆம் ஆண்டு ஜூலை மாதம் அவர் கைது செய்யப்பட்டான்.

அவர் மீதான வழக்கை விசாரித்து வந்த அமெரிக்க பெடரல் நீதிமன்றம், நாட்டில் பெரும் சேதம் விளைவிக்கும் முன்பே அவனை கைது செய்த அதிகாரிகளை பாராட்டியதோடு, உலுக்பெக்கை குற்றவாளி என்று தீர்ப்பளித்தது.

அத்துடன் அவனுக்கு 15 ஆண்டுகள் 8 மாதம் சிறைத் தண்டனை விதித்தது. மேலும் அவனது தண்டனைக் காலம் முடிவு பெற்ற பிறகு தனது சொந்த நாட்டுக்குத் திருப்பி அனுப்பப்படுவார் என்றும் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.


உஸ்பெகிஸ்தான் நாட்டில் செயற்பட்டு வரும் முஸ்லிம் தீவிரவாத இயக்கத்துக்கு அமெரிக்கா தடை விதித்துள்ளது குறிப்பிடத்தக்கது.(வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈராக், பாக்கில் வன்முறை

## 18 பேர் பரிதாபமாகச் சாவு

ஈராக் மற்றும் பாகிஸ்தானில் நடைபெற்ற துப்பாக்கிச்சூடு, வன்முறை ஆகியவற்றில் 18 பேர் உயிரிழந்தனர்.



பாகிஸ்தானின் கராச்சி நகரில் நேற்று முன்தினம் நடைபெற்ற வன்முறையில் 9 அப்பாவி மக்கள் கொல்லப்பட்டனர்.


இதேபோல் பலுசிஸ்தான் மாகாணம், குயெட்டாவிலும் வன்முறை உருவானதால் பதற்றம் நிலவியது. இது குறித்து கராச்சி பொலிஸ் வட்டாரம், பல்வேறு இடங்களில் தீ வைப்பு மற்றும் வன்முறைச் சம்பவங்களில் 9 பேர் கொல்லப்பட்டதை உறுதி செய்துள்ளது.

இதுதொடர்பாக ஒருவரை கைது செய்துள்ளதாகவும் பொலிஸ் வட்டாரம் தெரிவித்துள்ளது. குயெட்டாவில் நடந்த பேரணியில் அடையாளம் தெரியாத ஒருவர் துப்பாக்கியால் சுட்டதில் 9 பேர் காயமடைந்தனர்.

ஈராக்கின் வட பகுதியில் உள்ள ரசத்தியா சோதனைச் சாவடியில் மர்ம நபர் ஒருவர் திடீரென நடத்திய துப்பாக்கிச்சூட்டில் 7 பாதுகாப்பு படையினர் உட்பட 9 பேர் கொல்லப்பட்டனர்.

இந்தத் தகவலை பாதுகாப்பு மற்றும் மருத்துவத் துறை அதிகாரிகள் உறுதி படுத்தியுள்ளனர். (வ)

## ஹொலிவுட் நடிகர் ஸ்டாலோனின் மகன் மர்ம மரணம்



பிரபல ஹொலிவுட் நடிகர் சில்வெஸ்டர் ஸ்டாலோனின் மகனும், நடிகருமான சேஜ் மூன்பிளட் தன் வீட்டின் படுக்கையறையில் மர்மமான முறையில் இறந்து கிடந்தார்.

அமெரிக்காவில் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் தனியார் அடுக்கு மாடிக் குடியிருப்பில் வசித்து வந்தவர் சேஜ் மூன்பிளட் ஸ்டாலன்(வயது 36).

இவர் பிரபல ஹொலிவுட் நடிகர் சில்வெஸ்டர் ஸ்டாலனின் மகன். இவரும், தந்தையைப் போல் படங்களில் நடித்து வந்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை தொடக்கம் இவர் தன் வீட்டின் படுக்கை அறையில் இருந்து வெளியே வரவில்லை. வீட்டுக்குச் சென்ற வேலைக்காரி படுக்கை அறைக்குள் பார்த்தபோது, அங்கு மயங்கிய நிலையில் சேஜ் படுத்திருப்பது தெரிந்தது.

மருத்துவர்கள் அவரை பரிசோதித்த போது அவர் இறந்து விட்டது தெரிந்தது. அவரது மரணத்திற்கான காரணம் குறித்து, பொலிஸார் விசாரித்து வருகின்றனர். (வ)

## ஐ.நாவின் கல்வித் தூதராக பிரிட்டனின் முன்னாள் பிரதமர்



ஐக்கிய நாடுகள் சபையின் சிறப்பு கல்வித் தூதராக, பிரிட்டன் முன்னாள் பிரதமர் கார்டன் பிரௌன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதன்மூலம், 2015ஆம் ஆண்டுக்குள், உலகளவில் மேலும் 6 கோடியே 10 லட்சத்துக்கும் மேற்பட்ட குழந்தைகளை கல்வியறிவு பெற்றவர்களாக மாற்ற முயற்சி மேற்கொள்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதுகுறித்து கார்டன் பிரௌன் தெரிவித்ததாவது:-

உலகில் உள்ள ஒவ்வொரு குழந்தையும் பாடசாலைக்குச் சென்று படிக்கும் வாய்ப்பை உறுதியாக்குவேன். அவர்கள் தொடர்ந்து கல்வி கற்க வேண்டும் என்பதும் என்னுடைய விருப்பம்.

ஐக்கிய நாடுகள் சபையின் இலக்கை எட்டுவது சுலபமான காரியம் கிடையாது. ஆனாலும், இணைந்து பணியாற்றினால், எம்மால் இலக்கை அடைய முடியும் என்றார்.

தனது முன்மாதிரியாக ஐக்கிய நாடுகள் சபை முன்னாள் பொதுச்செயலர் கொபி அனான், அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி பில் கிளிண்டன் உள்ளிட்டோரை பின்பற்றிச் செயற்படுவேன்-என்றார்.

மேலும், சிறப்புத் தூதராகப் பொறுப்பேற்ற பின்பு, ஓகஸ்ட் மாதம் ஆசிய நாடுகளில் சுற்றுப் பயணம் மேற்கொள்ளவுள்ளார். (வ)

## ஆதி மனிதனின் எலும்புக்கூடு கண்டுபிடிப்பு

லண்டன், ஜூலை 16

ஆதிமனிதன் ஒருவனின் முழுமையான எலும்புக்கூடு ஒன்று தென்னாபிரிக்காவின் ஜோஹன்னஸ்பர்க் நகரில் முதல் முறையாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. 20 லட்சம் ஆண்டுகளுக்கு முந்தைய எலும்புக்கூடு இது என்றும் தெரிய வந்துள்ளது.

ஆதிமனிதன் ஒருவனின் எலும்புக் கூட முழுமையாக எமக்குக் கிடைத்திருப்பது இதுவே முதல் முறையாகும்.

இதனால் விஞ்ஞானிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். ஆதி மனிதர்களின் உடல் கூறு குறித்த புதிய பரிமாணத் தகவல்கள் கிடைக்கலாம் என்ற நம்பிக்கையும் பிறந்துள்ளது.

தென்னாபிரிக்க விஞ்ஞானிகள்தான் இதைக் கண்டுபிடித்துள்ளனர். தென்னாபிரிக்காவின் ஜோஹன் னஸ்பர்க் நகரின் வடக்கே ஒரு பாறைப் பகுதியில் 2008 ஆம் ஆண்டு இந்த எலும்புக்கூடு கண்டுபிடிக்கப்பட்டது. இதை முழுமையாக ஆராய்ச்சி செய்வதற்காக ஆய்வகத்துக்குக் கொண்டு சென்றனர்.

அந்தப் பாறைப் பகுதி ஆய்வகத் திலேயே இருந்து வந்தது. அதில் என்ன இருக்கிறது என்பது கூட சரியாக அனுமானிக்க முடியவில்லை. இந்த நிலையில் அந்தப் பாறையில் ஒரு பல் ஒட்டிக் கொண்டிருப்பதை ஆய்வக உதவியாளரான ஜஸ்டின் முகாங்கா பார்த்துள்ளார். அதன்பின்னர் இந்தத் தகவலை விஞ்ஞானிகளிடம் அவர் தெரிவித்தார்.

இதையடுத்து அந்தப் பாறையைத் தீவிரமாக ஆராய்ந்தனர். அப்போதுதான் அந்தப்பாறையில் ஒரு மனிதனின் எலும்புக்கூடு பாசில் வடிவில் ஒட்டிய நிலையில் புதைந்திருந்தது தெரிய வந்தது. (வ)


# 23ஆவது வீரமக்கள் தினம்

**13.07.2012 - 16.07.2012**



அமரர்.அ.அமிர்தலிங்கம்

செயலாளர் நாயகம் - தமிழர் விடுதலைக் கூட்டணி





அமரர் தோழர் க.உமாமகேசுவரன்

செயலதிபர்

**விடுதலைப் போராட்டத்தில் தமது இன்னுயிரை ஈந்த கழக கண்மணிகள், அனைத்து போராளிகள், பொதுமக்கள் அனைவருக்கும் எமது அஞ்சலிகள்.**

**“ஒன்றாய் இன்றும் நாமில்லையேல் விடிவு என்றும் எமக்கில்லை”**

**தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (PLOTE)**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாய்ப்பு வரும் நேரம்

(26)

நீங்கள் எதை வியாபாரம் செய்தாலும், உங்கள் தொழில் எதுவாக இருந்தாலும், உங்கள் வேலை எதுவாக இருந்தாலும், அது மாசற்றது, பயனுள்ளது, நேர்மையுள்ளது என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். விரிவடையக் கூடிய ஒரு தொழிலை தேர்ந்தெடுங்கள்; உங்களை முன்னேற்றம் அடையச் செய்யும் உங்களை உயர்த்தும் உங்கள் சுய முன்னேற்றத்திற்கு வாய்ப்பு அளிக்கும், உங்களைச் சிறந்த மனிதனாக்கும் ஒரு தொழிலைத் தேர்ந்தெடுங்கள். உன் வாழ்வு என்பது நீ நிரந்தரமாக ஆறுதல் பெற வேண்டிய அனைத்தும் ஆகும் எனக் கூறுகிறார் கார்லைல்.

ஒவ்வொரு மனிதனும் வாழ்வில் பெறும் வாய்ப்புகளில் பெரும்பாலானவற்றைப் பயன்படுத்திக் கொண்டால், நிரந்தரமாக ஊக்கம் அடையவேண்டியது அவசியமானது அல்லவா? அவனது ஆன்மாவைப் போல நீடித்திருக்கும் விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்ள வேண்டியது அவசியமானது அல்லவா? உண்மையான கௌரவமும் வாழ்வின் முக்கியத்துவமும் - இரத்த ஓட்டத்தை விரைவுபடுத்தி உயிர் வாழத்தூண்டும் சாதாரண வருமானத்திற்கும் மேலான ஒன்று ஆகும்.



அதுக்கு நம்மைச் சுற்றியுள்ள சமுதாயத்துடனும், நமது ஆன்மீக சக்திகளின் அடிப்படைத் தேவைகளுடனும் நெருங்கிய தொடர்பு உள்ளது. உலகின் உயர்வடைவதற்குப் பணத்தை மட்டும் சம்பாதித்தால் போதாது.

பிரெஞ்சுக் கவிஞர் கார்னிலே கூறுகிறார், ''தெய்வமே தனது கரங்களைத் திறந்து கொண்டு அருளைப் பொழியும் வேளையில், மன வலிமையற்றவன் எதையும் பெறத் தகுதியற்றவனாகி விடுகிறான். அந்த நம்பிக்கைக் குறைவு தெய்வம் தனது அருளைப் பொழிவதற்குப் பலமுறை தடை ஆகிவிடுகிறது.

அப்படியே அவை கீழே இறங்கி உலகிற்கு வந்தாலும், அவற்றைத் தொலைவிற்கு அனுப்பி விடுவதே பொருத்தமானதாகி விடுகிறது.'' விக்டர் ஹுகோவும் அதே உருவகத்தைப் பயன்படுத்துகிறார். ''தெய்வம் அவ்வப்போது நமக்காக தனது கரங்களைப் பாதி திறக்கிறது; அதுவே நமக்குச் சிறந்த நேரம்.''

மனமும் இதயமும் திறந்து இருந்து துளிர்விடும் சக்திகளுடன் வேகமாக உள்ளபோது, அது உண்மையில் பொன்னான நேரம் ஆகும். இந்த ஒழுக்க விஸ்தரிப்பு மகிழ்ச்சியூட்டுவதை நீங்கள் உணரவில்லையா? உங்களுக்குள் இருக்கும் தேவதை ஓர் உயர்ந்த தொழில் வாழ்வில் பேரானந்தத்தை அடைய முன்வரப் போராடிக் கொண்டிருந்ததைப்போல, உங்களுக்கு முன்னேற்ற மடையும் நோக்கம் எதுவும் இல்லையா? வளர்ச்சி பெறும் சக்தி எதுவும் இல்லையா? சாதனை புரியும் ஆர்வம் எதுவும் இல்லையா? வாழும் திறமை எதுவும் இல்லையா? இன்றைய உலகின் இளைஞர்களுக்கு, புத்திக் கூர்மையுடனும் நியாயமான கண்ணோட்டத்துடனும் பிரமாண்டமான தொழில்களில் சுய முதலீடு செய்துகொள்ள ஒரு வாய்ப்பு எவ்வளவு அழகாகக் காத்துக் கொண்டிருக்கிறது. அதற்காகப் பணம் சம்பாதிக்கவும் அதற்காக வாழ்வதற்கும்.

எல்லாக் காலங்களிலும் தோன்றும் அந்த உன்னதமான நேரத்தில், அதைக் காணமுடியாமல் செயல்படாதவன், பார்வையற்றவனும் முடக்கமடைந்தவனும் ஆவான்.

உங்கள் வீட்டுக் கதவுகளைத் தட்டும், ஜன்னல் வழியாக எட்டிப் பார்க்கும், தெருவில் நடந்து செல்லும்போது தோள்களைத் தட்டும், தினசரி காலை அல்லது மாலைப் பத்திரிகைகளில் பயனுள்ள வாழ்வுக்கான புதிய வாய்ப்புகள் உள்ளதென அறிவுறுத்தும் நியாயமான வாய்ப்பைக் கண்டு அதன்படி செயல்படுங்கள். உலகியற் பொருள்களைப் பதுக்கி வைப்பவனும், அவற்றை வீணாக்குபவனும், பொது மனிதாபிமானத்தை உயர்த்துவதில் இறைவன் அளித்துள்ள தமது பங்களிப்பை ஆற்ற முடியாதவனும் உள்ளபடியே ஒழுக்கத்தைக் கண்டறியாதவன் ஆவான்; உத்வேகம் அற்றவன் ஆவான்.

அது புதிய நூற்றாண்டில் வாழ்வின் நியாயமான வாய்ப்புகளைப் பறித்துக் கொள்ளும் மனித முடிவுகளுக்காகக் காத்துக் கொள்ளும் மனித முடிவுகளுக்காகக் காத்துக் கொண்டிருக்கும் பொன்னான நேரத்தைத் தவிர வேறு எதுவாக இருக்க முடியும்? அது ஒரு தேவதையும் கூட பொறாமைப் படக்கூடிய வாய்ப்பின் மகுடம் ஆகும்.

-ஒரிசன் ஸ்வெட் மார்டன்- (முற்றும்)



# கூட்டுறவுச் சங்கங்களின் பொதுச்சபை உறுப்பினர்கள் உரிய காலத்தில் கடமைகளை நிறைவேற்ற வேண்டும்

## கூட்டுறவு உத்தியோகத்தர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை16

சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் பொதுச்சபை உறுப்பினர்கள் சங்கத்தின் பொறுப்புகளையும் கொடுக்கப்பட்ட கடமைகளையும் சட்ட விதிமுறைகளுக்கு அமைவாக உரிய காலத்தில் நிறைவேற்ற வேண்டும்.

எதிர்காலத்தில் சங்கங்களின் அபிவிருத்தி நடைமுறைப்படுத்தப்படுகின்ற செயற்பாடுகளிலேயே தங்கியுள்ளது என்பதை ஒவ்வொரு உறுப்பினரும் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று சங்கானைப் பிராந்தியத்துக்கான கூட்டுறவு உத்தியோகத்தர் நா.குமணதாஸ் தெரிவித்தார்.

சிக்கன கடன் வழங்கும் சங்கங்களின் சங்கானை பிராந்திய சபையால் கடந்த 15 ஆம் திகதி வட்டுக்கோட்டை ஸ்ரீ கணேசா வாசிக சாலை மண்டபத்தில் சபைத் தலைவர் வி. செல்வரத்தினம் தலைமையில் அங்கத்தவர்களுக்கான பயிற்சிப் பட்டறை நிகழ்வு இடம்பெற்றது.

இந்தப் பயிற்சிப் பட்டறை நிகழ்வில் ''சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுச் சபை உறுப்பினர்களின் கடமைகளும் பொறுப்புகளும்'' எனும் தலைப்பில் கருத்துரை வழங்கும் போதே குமணதாஸ் இவ்வாறு தெரிவித்தார்

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்கள் தற்போது 1972 ஆம் ஆண்டு ஐந்தாம் இலக்க சட்டப்படி உருவாக்கப்பட்ட சட்டவிதிகளுக்கு அமைவாக செயற்பட்டு வருகின்றன. இதற்கமைவாக சங்கங்களின் பொதுச் சபை உறுப்பினர்கள் சங்கத்தால் வரையறுக்கப்பட்ட பொறுப்புகளையும் உரிய கடமைகளையும் குறித்த காலத்தில் நிறைவேற்ற வேண்டும்.

**சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்கள் தற்போது 1972 ஆம் ஆண்டு ஐந்தாம் இலக்க சட்டப்படி உருவாக்கப்பட்ட சட்டவிதிகளுக்கு அமைவாக செயற்பட்டு வருகின்றன.**

சங்கத்தின் பொதுவான விடயங்கள் பற்றி உறுப்பினர்கள் ஏற்கனவே அறிந்திருப்பார்கள். எனினும் சட்டரீதியான விடயங்கள் பொதுச் சபையில் அங்கீகரிக்கப்படுவதால் இவற்றை சங்க உறுப்பினர்கள் நடைமுறைப்படுத்த வேண்டும்.

குறித்த காலத்தில் சங்கங்களால் நிறைவேற்றப்பட வேண்டிய வரவு செலவு தொடர்பாக ஒப்பு நோக்கல் செய்து அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

எனவே சங்கத்தின் கணக்கறிக்கை பொதுச்சபையால் நியமிக்கப்பட்ட உள்ளக கணக்காய்வுக் குழுவால் கிரமமாக ஆய்வு செய்து உறுதிப்படுத்தப்பட வேண்டும். வருடாந்த கணக்காய்வு அறிக்கையில் சங்கங்களின் கணக்காய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டியது கட்டாயமாகும்.

இதன்போதே சங்கங்களின் செயற்பாடுகளில் காணப்படும் குறை நிறைகளை வெளிக் கொணர முடியும். இதன் மூலம் ஆராயப்பட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட்டு சங்கங்களை அபிவிருத்தி அடையச் செய்ய முடியும்- என்றார்.

(எ-14)

# பேச்சுப் போட்டி முடிவுகள்

யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் வெள்ளிவிழாவை முன்னிட்டு கல்வித் திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் வலய ரீதியாக நடத்தப்பட்ட 03 பிரிவுகளைக் கொண்ட பேச்சுப் போட்டியின் இறுதிச் சுற்று முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

**மேற்பிரிவு**

த.கலைவாணி (வடமராட்சி மத்திய கல்லூரி, கரவெட்டி), த.சிந்துஜா (விக்கினேஸ்வராக் கல்லூரி, கரவெட்டி) நி.விதுஷா (வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி)

**வலிகாமம் வலயம்**

**கீழ்ப்பிரிவு**

க.ஆரன்யா (இணுவில் மத்திய கல்லூரி), யோ.கோவிந்தன் (ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க பாடசாலை), செ.விநோதினி (வட்டு மத்திய கல்லூரி)

**மத்தியபிரிவு**

ப.விதுஜனா (இணுவில் மத்திய கல்லூரி), தி.கீர்த்தனா (வட்டு மத்திய கல்லூரி),க. மஜிதா (ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம்.)

**மேற்பிரிவு**

ஸ்ரீ.லக்சனா (வட்டு மத்திய கல்லூரி), சி.அனோஜிதா (விக்ரோறியாக் கல்லூரி) த.மதுஜனன் (இணுவில் மத்திய கல்லூரி)

**தென்மராட்சி வலயம்**

**கீழ்ப்பிரிவு**

சாளினி (கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம்), க.ரம்மியா (கைதடி குருசாமி வித்தியாலயம்)

**மத்தியபிரிவு**

லோ.சலாஜினி (கைதடி குருசாமி வித்தியாலயம்) சி.வினித்தா (கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம்)

**தீவக வலயம்**

**கீழ்ப்பிரிவு**

தி.ரதிஸ் (வேலணை மேற்கு நடராசா வித்தியாலயம்), அ.வேணுஜன் (வேலணை மேற்கு நடராசா வித்தியாலயம்), வி.சானுகா (வேலணை மத்திய கல்லூரி)

**மத்தியபிரிவு**

அ. சாள்ஸ் டிலக்சன் (புனித அந்தோனியார் கல்லூரி), க.பிரியங்கா (வேலணை மத்திய கல்லூரி), க.லக்சினி(வேலணை மத்திய கல்லூரி)

**மேற்பிரிவு**

இ.கஜாஜினி (புனித அந்தோனியார் கல்லூரி), வி.கஜனி (வேலணை மத்திய கல்லூரி), ஜெ.ஜெயதாரணி (வேலணை மத்திய கல்லூரி)

**யாழ்ப்பாண வலயம்**

**கீழ்ப்பிரிவு**

ப.தர்மிகா (அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாசாலை), க. தேவஜெனா (கொக்குவில் இந்துக் கல்லூரி), க.ரக்ஷிகா (கனகரட்ணம் ம.ம.வித்தியாலயம்)

**மத்தியபிரிவு**

பௌஸ்ரிகா (கனகரட்ணம் ம.ம. வித்தியாலயம்), ம.டினுசியா (அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை), தே. சுலக்சனா (கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்)

**மேற்பிரிவு**

க. டுவாரகா (கனகரட்ணம் ம.ம வித்தியாலயம்) க. அனிருத்தன் (பெரியபுலம் மகா வித்தியாலயம்) (எ)

# சிறுவர்களின் ஒளிமயமான எதிர்காலத்துக்கு முன்பள்ளிகளின் பணி மிக முக்கியமாகும்

## பருத்தித்துறை பங்குத் தந்தை தெரிவிப்பு

வடமராட்சி, ஜூலை 16

இன்றைய சிறுவர்களின் எதிர்காலத்தை ஒளிமயமாக்க வேண்டும். இந்த ஒளிமயமான எதிர்காலத்துக்கு முன்பள்ளிகளே வித்திடுகின்றன. இந்தக் காலகட்டத்தில் முன்பள்ளிகளின் பணி மிக முக்கியமானதொன்றாகும் என்று பருத்தித்துறை பங்குத் தந்தை அருட்திரு ஜே.ஜோன் மவுலிஸ் அடிகளார் தெரிவித்தார்.

பருத்தித்துறை, தும்பளை புனிதமரியாள் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுப்போட்டி புனித மரியாள் சனசமூகத் தலைவர் எம். ஜெயரத்தினம் தலைமையில் நடைபெற்றது. இந்தப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போது அருட்திரு ஜே.ஜோன் மவுலிஸ் அடிகளார் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

இன்றைய சிறார்களை பல்வேறு துறைகளில் மேம்பாடு அடையச்செய்ய வேண்டும். அவர்கள் முன்பள்ளியில் கற்கும் போது அங்கு கற்ற விடயங்கள் மனதில் பதிந்து விடுகின்றன.

இந்தப் பதிவுகள் அவர்களது வாழ்க்கையில் மேம்பாடு காண பெரிதும் உதவுகின்றன. சிறார்களின் செயற்பாடுகள் அதிகரிக்க முன்பள்ளி ஆசிரியர்களின் பணி மிக முக்கியமானது. அவர்களின் தன்னலம் கருதாத பணி எத்தனையோ சிறார்களின் எதிர்காலத்தை நிர்ணயிக்கின்றன. முன்பள்ளி ஆசிரியைகளின் பணி மாத்திரம் சிறார்களை மேம்படுத்த போதாது. முன்பள்ளிகளின் வளங்களும் அதிகரிக்க வேண்டும். இதற்குச் சூழவுள்ள சமூகம் முன்பள்ளிகளுக்குத் தேவையான உதவிகளை வழங்க வேண்டும். இது ஒரு சமூகப் பொறுப்பு ஆகும்.

சிறார்களின் மேம்பாட்டில் விளையாட்டும் மிக அவசியமாகும். விளையாட்டுக்கள் மூலம் சிறார்களின் உடல்,உளம் வளர்ச்சியடைகின்றன. அவர்கள் மத்தியில் தன்னம்பிக்கை வளரவும் விளையாட்டு உதவுகின்றது. விளையாட்டுப்பயிற்சியைப் பெறும் சிறார்கள் எதிர்காலத்தில் நற்பிரஜைகளாக உருவாவதற்கு ஏற்ற மனத்தைரியத்தைப் பெற்றுக்கொள்வார்கள்- என்றார்.

(எ-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் தொடர்புகளுக்கு

தலைமையகம்:
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021-222 9933,
222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
தொலைநகல்
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731

மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

வன்னிப் பணிமனை:
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
நெல்லியடிக் கிளை:
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789,
021226 2395
சாவகச்சேரிக் கிளை:
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' –மாலு சந்தி, அல்வாய் : 021226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

## செல்லரித்துப்போன புனைவுகளின் கதிரை

யாழ்ப்பாணத்தில் இந்த வாரம் வெளிநாட்டு இராஜதந்திரிகள் ஒருவர் பின் ஒருவராக வந்துகொண்டே இருக்கிறார்கள். வந்தவர்கள் சம்பிரதாயபூர்வமாக அரச அதிகாரிகளை மட்டும் சந்திக்காமல், சமூக நலன்சார் அமைப்புகளோடும் கலந்துரையாடல்களை நடத்தியிருந்தனர்.

இத்தகைய இராஜதந்திரிகளின் வருகையை தற்போதைய அரசியல் சூழலில் முக்கியத்துவமான ஒன்றாகவே நோக்கவேண்டியுள்ளது. வடமாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான சூழ்நிலை தற்போது அங்கில்லை எனவும், எனவே அடுத்த வருடம் செப்ரெம்பர் மாதமளவிலேயே வடமாகாண சபைத் தேர்தலை நடத்த முடியும் எனவும் இலங்கை அரசு அறிவித்த பின்னரே இராஜதந்திரிகள் யாழ்ப்பாணம் நோக்கி படையெடுக்கத் தொடங்கியிருக்கின்றனர்.

அரசு இன்னமும் போர்க் கால நினைப்பிலேயே இருக்கிறது. அப்போது போர் நடந்த இடங்களுக்கும் வெளி இடங்களுக்குமான தொடர்பாடல்கள் மட்டுப்படுத்தப்பட்டதாகவே இருந்தன. எனவே அரசு என்ன சொல்கிறதோ அதையே நம்ப வேண்டிய கட்டாயம் சர்வதேசத்துக்கு. என்றாலும் தமது தொழில் நுட்ப அறிவைப் பயன்படுத்தி இறுதிப் போரில் நடந்த சில விடயங்களை அமெரிக்கா போன்ற நாடுகள் பதிவு செய்திருந்தன. முள்ளிவாய்க்கால் பகுதியில் நிகழ்ந்த சில சம்பவங்களை தனது செய்மதி மூலம் அமெரிக்கா புகைப்படங்களாக வெளியிட்டிருந்தன. ஆனால் அவையெல்லாம் புனையப்பட்ட படங்கள் என்று பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ ஒரேடியாக மறுத்திருக்கிறார். 'அரசு சொல்வது மட்டுமே உண்மை, எதிர்த்தரப்புகளோ சுயாதீன ஊடகங்களோ வெளிப்படுத்தும் விடயங்கள் யாவும் உண்மைக்குப் புறம்பானவையே' என்ற கொள்கையிலேயே அரசு விடாப்பிடியாக நிற்கின்றது.

இறுதிப்போரின் போது நிர்வாணமாக்கப்பட்டு தலையில் சுடப்பட்டு வீழ்ந்து இறக்கும் தமிழ் இளைஞர்கள் பற்றிய வீடியோக் காட்சி ஒன்றுக்கு ஓராயிரம் முறை பரிசீலிக்கப்பட்டு 'அது புனையப்பட்ட ஒன்றல்ல. உண்மையான வீடியோக் காட்சி தான்' என்பதை பல்வேறு தரப்புகள் –அதிலும் வீடியோ தொழில் நுட்பத்தையே கரைத்துக் குடித்த நாடுகள்– ஆதாரங்களோடு சொன்னபோதும் கூட அவற்றையெல்லாம் பொய்கள் என்று ஒற்றைச் சொல்லில் ஒதுக்கிய பெருமை இலங்கை அரசுக்கே உரியது.

எனவே தான் இப்போது வடக்குத் தேர்தல் தொடர்பான அரசின் கூற்றை பரிசீலிப்பதற்காக நேரடியாக களத்திலேயே குதித்திருக்கிறார்கள் சர்வதேச ராஜதந்திரிகள். வடமாகாணத்தில் முக்கியமன இடங்களுக்கு வரும் இவர்கள் அங்குள்ள சமூக அமைப்பின் பிரதிநிதிகள், பொதுமக்கள் என்பவர்களோடு கலந்துரையாடியும், கள நிலைமைகளை நேரடியாக அவதானித்தும் அரசின் கூற்றுக்கும் யதார்த்தத்துக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை அளவிடுவதாக அறிய முடிகிறது. இதன்பின்னர் இராஜதந்திரிகள் தத் தம் நாடுகளுக்கு அனுப்பும் அறிக்கையின் அடிப்படையில் வடக்குத் தேர்தலை உடன் நடத்துவது தொடர்பாக இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்கக் கூடும்.

போருக்குப் பின்னர் இலங்கையின் எல்லாக் கதவுகளும் திறந்துவிடப்பட்ட சூழலில், இருண்ட அறைக்குள் மூன்று கால் முயலே ஓடித் திரிவதாக அரசின் பூச்சுற்றும் வேலை பயனற்றுப் போய்விட்டது. இதனை இன்னமும் அரசு அறியவே இல்லை. பழையபடியே தன்னுடைய புனைவுகள் மீதான கதிரையிலேயே அது தொடர்ந்தும் உட்கார்ந்திருக்கிறது. ஆனால் புனைவுகளின் நீட்சிக்கு உலை வைக்கும் பணி எப்போதோ தொடங்கிவிட்டது. அதன் ஒரு வெளிப்பாடே இராஜதந்திரிகளின் வடக்கு நோக்கிய இப்போதைய வருகை. தொடர்ந்தும் பொய்களின் கயிற்றிலேயே அரசு தொங்கிக் கொண்டிருக்குமானால் உண்மைகளைத் தேடும் இத்தகைய வருகைகள் தொடரவே செய்யும்.

# பேச்சளவில் மட்டுமே மனிதநேயம்

தமிழில் - வீயெஸ்ரி

**'ஜனரள' சிங்களப் பத்திரிகையில் ஜே.ரீ.கமமே எழுதிய கட்டுரையின் தமிழ் மொழியாக்கம்**

2006ஆம் ஆண்டுக்கு முன்னர் அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்ற ஓய்வூதியர்களுக்கான ஓய்வூதியக் கொடுப்பனவை, 2006 ஆம் ஆண்டின் புதிய சம்பளத் திட்டத்துக்கு அமையக் கணக்கிட்டு வழங்கவுள்ளதாக ஜனாதிபதி, கடந்த 2010 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 14 ஆம் திகதி அலரி மாளிகையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் வைத்து சுமார் ஏழாயிரம் ஓய்வூதியம் பெறும் முன்னாள் அரச ஊழியர்கள் முன்னிலையில் வாக்குறுதியளித்திருந்தார்.

அதற்கு நான்கு தினங்களுக்கு முன்னர், மும்மொழிப் பத்திரிகைகளிலும் ஜனாதிபதியின் கையொப்பத்துடன் அறிவித்தலும் பிரசுரமாகியிருந்தது. இந்த வாக்குறுதிக்கு மேலதிகமாக ஒவ்வோர் ஓய்வூதியர் பெயரிலும் பத்தாயிரம் ரூபாவுக்கு வைத்தியச் செலவுக்கான காப்புறுதி வசதி ஒன்றையும் அரசு ஏற்படுத்திக் கொடுக்குமென அந்தப் பத்திரிகை அறிவித்தல் தெரிவித்திருந்தது. குறிப்பிட்ட அந்தப் பத்திரிகை அறிவித்தலின் கீழ்ப் பந்தியில் ஜனாதிபதியின் பெயரில் மேலுமொரு பத்தி உள்ளடக்கப்பட்டிருந்தது. "இது வெறும் வாக்குறுதியல்ல. உங்கள் வாழ்நாள் முழுவதும் நீங்கள் வாழ்க்கையை மகிழ்ச்சியுடன் கழிப்பதைக் காண விரும்பும் எனது பிரார்த்தனையுமாகும்" என்பதே அதுவாகும்.

ஜனாதிபதியின் அந்த நல்லெண்ண வாக்குறுதி, இரண்டாண்டுகள் கழிந்த நிலையிலும் வெறும் வாக்குறுதியாக மட்டுமே இருப்பதே வேதனை தருகிறது. அது செயலுருப்பெறும் விதத்திலான எந்தவித சமிக்ஞையையும் காண இயலவில்லை.

சுமார் நான்கு லட்சத்துக்கும் மேற்பட்ட ஓய்வூதியர்கள், மற்றும் அவர்களில் தங்கியிருப்போரின் வாக்குகளை அபகரிப்பதற்காக அரசியல் வாதிகள் இவ்வாறு பலதரப்பட்ட வாக்குறுதிகளை வழங்குவது வழமையான ஒன்றே.

வயதான ஓய்வூதியர்களில் பலர் இன்று தமது குடும்பத்தவர்களுக்குப் பாரமாக உள்ளனர். பெற்றோரைப் பேணுதல், வயதானோரை அனுசரித்தல் என்ற நற்பழக்கங்கள் குறித்து கற்றிருப்பினும், இன்று அந்தப் பண்புகளை செயலளவில் கடைப்பிடிக்கத் தவறும் பிள்ளைகளில் பலர் தமது வயதான, ஓய்வு பெற்ற பெற்றோரை முதியோர் இல்லங்களில் சேர்க்கும் வழக்கம் எமது சமூகத்தில் விரவியுள்ளமை நிதர்சன உண்மையே. வேறு சில வயதானவர்கள் தமது பிள்ளைகளுடன் வாழப் பிடிக்காமலோ அல்லது அவர்களுக்குச் சிரமம் கொடுக்க விரும்பாமலோ தாமாக முன் வந்து முதியோர் இல்லங்களில் சென்று தங்குவதையும் காணமுடிகிறது.

ஓய்வூதியர்களான போதிலும், வயதான காலத்தில் நோய் நொடிகளுக்கு ஆளாவது மனித இயற்கையே. தமது நோய்க்கான மருந்து வகைகளுக்குத் தமது ஓய்வூதியத்தின் ஒரு பகுதியைச் செலவு செய்ய வேண்டிய நிலை ஓய்வூதியர்களுக்கு ஏற்படுவதுமுண்டு.

ஓய்வூதியர்களது அனுபவங்களைப் பயன்படுத்தி அவற்றின் மூலம் நன்மையடையும் வழக்கம் எமது சமூகத்தில் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. [illegible] வயதாகி ஓய்வு பெற்றதும் அவரைப் புறமொதுக்கும் மனநிலை பல குடும்பங்களின் மத்தியில் காணப்படுவது கண்கூடு. அத்தகைய ஒரு ஓய்வூதியர் வயதாகி, கால் கை வழங்காத நிலையில் பொருளாதாரச் சிரமமும் ஏற்பட விரக்தியுடன் தமது பிள்ளைகளின் உதவி ஒத்தாசையை எதிர்பார்த்துத் தமது கடைசிக் காலத்தை மகிழ்ச்சியற்று ஏனோதானோ என வாழ்ந்து முடிக்கும் நிலையும் நம் மத்தியில் தொடர்கிறது.

இத்தகைய நிலையில் ஓய்வூதியர்களது இன்றைய எதிர்பார்ப்பு, தமது வாழ்க்கையை பிள்ளைகளுக்கோ, உறவினர்களுக்கோ பொருளாதாரச் சிரமம் ஏற்படுத்தாத அளவுக்கு வாழ்ந்து முடிக்கும் வாய்ப்பே. அதற்கான நிதித் தேவையைப் பூர்த்தி செய்யும் விதத்திலான ஓய்வூதியப் பணம் தமக்கு கிட்ட வேண்டுமென அவர்கள் எதிர்பார்ப்பது தவறானது ஒன்றல்ல. இன்று சமூகத்தில் பெரும்பாலான ஓய்வூதியர்களுக்கு அவர்களது குடும்பத்தாரிடமிருந்து கிட்டும் கவனிப்பு, கௌரவம் என்பவை அவர்கள் பெறும் ஓய்வூதியத் தொகையின் அடிப்படையிலேயே அமைகின்றது.

நாடாளுமன்ற நடைமுறை அறிமுகமான காலகட்டத்தில் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் பெற்ற மாதாந்தச் சம்பளம் 400 ரூபா மட்டுமே. இன்று ஓய்வூதியம் பெறத் தகுதியுள்ள அந்த நாடாளுமன்ற உறுப்பினர் தமது மாதாந்த ஓய்வூதியமாக 45,236 ரூபாவைப் பெற முடிகிறது. 2006 ஆம் ஆண்டில் 54,285 ரூபாவை மாதாந்தச் சம்பளமாகப் பெற்ற நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர், ஓய்வூதியம் பெறத் தகுதி பெற்றதன் காரணமாக ஓய்வூதியமாக 45,236 ரூபாவை மாதாந்தம் பெற முடிகிறது. 2008 ஆம் ஆண்டில் 67,855 ரூபாவை மாதாந்தச் சம்பளமாகப் பெற்ற நாடாளுமன்ற உறுப்பினரொருவர் இன்று ஓய்வூதியம் பெறத் தகுதி பெற்றிருப்பின் அவர் மாதாந்த ஓய்வூதியமாக அதேயளவு 45,236 ரூபாவைப் பெற முடிகிறது. அந்த வகையில் கூடிய மாதாந்தச் சம்பளம் பெற்ற நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் ஓய்வூதியத் தொகையை, அதற்கு முன்னர் குறைந்த மாதாந்தச் சம்பளம் பெற்ற ஓய்வூதியம் பெறத் தகுதி பெற்ற நாடாளுமன்ற உறுப்பினரும் பெற முடிகிறது.

அந்த வகையில் இன்று மாதாந்த ஓய்வூதியம் பெறத் தகுதிபெற்ற 600 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது சேவைக்கான ஓய்வூதியம் பெற்று வருவதாகக் கூறப்படுகிறது. அதற்காக வருடாந்தம் 170 கோடி ரூபா வரையில் நாட்டின் பொது மக்களது வரிப் பணத்திலிருந்து செலவிடப்பட நேர்கிறது.

யதார்த்த ரீதியில் நோக்கும் போது நாடாளுமன்ற உறுப்பினரொருவராகும் வாய்ப்புப் பெரும்பாலும் பண வசதி மிக்கோருக்கே கிட்டுகிறது. இன்றைய நாடாளுமன்றத் தேர்தல் நடைமுறையில் ஒருவர் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைப் பெற பெருமளவில் பணம் செலவு செய்ய வேண்டியுள்ளது. அந்த வகையில் பெரும்பாலும் பெரும் தனவந்தர்களாலேயே பெரிய அளவில் பணம் செலவு செய்து பிரசார நடவடிக்கைகளை மேற்கொண்டு நாடாளுமன்றத் தேர்தல்களில் வெற்றி ஈட்ட முடிகிறது.

நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்படும் ஒருவர் அந்தப் பதவியின் வசதி வாய்ப்புகளைப் பயன்படுத்தி பலதரப்பட்ட வருமான மார்க்கங்களை ஏற்படுத்திக் கொள்கின்றார். அந்த வகையில் நாடாளுமன்ற உறுப்பினரொருவருக்கு அவரது சேவை காரணமான ஓய்வூதியம் எதுவும் அவசியமற்றது என்பதே யதார்த்தமாகும்.

நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்படும் ஒருவர் தொடர்ந்து ஐந்து ஆண்டு காலம் அந்தப் பதவியை வகித்தால் அவர் ஓய்வூதியம் பெற அருகதை உடையவராகிறார்.

அதேவேளை அரச சேவையில் நியமனமொன்றைப் பெறும் ஒரு நபர் 15 ஆண்டு கால சேவையைப் பூர்த்தி செய்ததன் பின்னரே ஓய்வூதியம் பெறத் தகுதி உடையவராகிறார். அந்த விதம் அரச சேவையில் கடமையாற்றி ஓய்வு பெறுபவர்களில் குறிப்பிட்ட ஒரு சிறு விகிதத்தினரே ஓய்வூதியத்தை விட வேறு வருமான மார்க்கங்களைக் கொண்டிருப்பவர். அந்த தரப்பினரில் பெரும்பாலோர் அரச சேவையில் இருந்து இளைப்பாறிய பின்னர் தமது ஓய்வூதியத்தை மட்டுமே தமது வாழ்வாதாரமாகக் கொண்டுள்ளனர்.

தற்போது நடைமுறையிலுள்ள அரச ஊழியர்களுக்கான ஓய்வூதியத் திட்டத்தில் ஓய்வூதியக் கணிப்பீட்டில் பல ஏற்றத் தாழ்வுகள், வேறுபாடுகள் நிலவி வருகின்றன. காலத்துக்குக் காலம் வெளியாகும் ஓய்வூதியக் கொடுப்பனவு தொடர்பான சுற்று நிருபங்கள் நடைமுறைப்படுத்தப்படும் வேளையில், ஒரே தரத்தைச் சேர்ந்த ஓய்வூதியர்கள் அவர்கள் ஓய்வு பெறும் காலத்தின் அடிப்படையில் பெறும் ஓய்வூதியத் தொகைகளில் வேறுபாடுகள் நிலவுகின்றன. அந்தந்தக் காலகட்டங்களில் நிலவும் வாழ்க்கைச் செலவு உயர்வைக் கருத்தில் எடுத்தே காலத்துக்குக் காலம் சம்பள அதிகரிப்பு அரசால் மேற்கொள்ளப்படுகிறது. ஆனால் அத்தகைய வேளைகளில் ஓய்வூதியம் பெறுவோருக்கான ஓய்வூதியக் கொடுப்பனவில் மேற்கொள்ளப்படும் அதிகரிப்பு, நியாயமான, திருப்தியளிக்கத் தக்கதாக மேற்கொள்ளப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டும் பல தரப்பினரால் முன்வைக்கப்படும் ஒன்றாகும்.

அரச ஊழியர்களது சம்பள முரண்பாட்டை நேர்சீர் செய்வதற்காக நியமிக்கப்பட்ட வனசிங்க ஆணைக்குழுவின் அறிக்கையிலும், ஓய்வூதியர்களுக்கான ஓய்வூதியக் கொடுப்பனவில் நிலவும் பாரபட்சம் சுட்டிக் காட்டப்பட்டுள்ள போதிலும், ஓய்வூதியக் கொடுப்பனவில் நிலவும் முரண்பாட்டை நேர்சீர் செய்யும் நடவடிக்கை இதுவரை மேற்கொள்ளப்பட்டதாயில்லை.

ஓய்வூதியர்களுக்கான ஓய்வூதியக் கொடுப்பனவில் நிலவும் இத்தகைய முரண்பாடுகள் காரணமாக ஓய்வூதியர்களில் பெரும்பாலானோர் நிதிப் பற்றாக்குறையால் பல சிரமங்களுக்கு முகம் கொடுக்க நேர்கிறது. தமது ஓய்வூதியக் கொடுப்பனவில் நிலவும் முரண்பாடு, மற்றும் ஓய்வூதியக் கொடுப்பனவுத் தொகை போதாமை போன்ற காரணங்களை முன்வைத்து ஓய்வூதியர் சங்கங்கள் அரசுக்கு கோரிக்கை, ஆர்ப்பாட்டம் என்பவையூடாக தமது ஓய்வூதியத் தொகையை அதிகரிக்குமாறு வற்புறுத்தல்களை மேற்கொண்ட போதிலும், அரசு அவர்களது கோரிக்கைகள் குறித்து இதுவரை சாதகமான முடிவு எதனையும் மேற்கொண்டதாயில்லை.

2009 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதல் ஓய்வூதியர்களுக்கான ஓய்வூதியக் கொடுப்பனவுத் தொகையிலிருந்து கட்டாயமாக மாதாந்தம் 50 ரூபா வீதம் அரசு அறவிட்டமைக்கு எதிராக ஓய்வூதியர் சங்கங்கள் அரசுக்கு எதிராகத் தொடுத்த வழக்கின் தீர்ப்பில் அந்த விதம் கழிக்கப்பட்ட தொகையை மீளளிக்குமாறு உத்தரவிடப்பட்ட போதிலும் இதுவரை அந்தத் தொகை மீளளிக்கப்படவில்லை.

ஓய்வூதியர்கள் முகம்கொடுத்து வரும் இத்தகைய சிரமங்களுக்குத் தீர்வு காண முயற்சிப்பது வெறுமனே தற்போது ஓய்வூதியம் பெறுவோருக்கான பொறுப்பு மட்டுமல்ல, எதிர்காலத்தில் அரச சேவையிலிருந்து ஓய்வு பெறவுள்ள அரச துறை ஊழியர்களுக்கும் இந்தப் பொறுப்பு உள்ளதென்பதை மனதில் இருத்திச் செயற்பட அவர்கள் முன்வர வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ இணுவையூர் உத்திரன்

# ஆடிக்கூழ்

"ஆடிப்பிறப்புக்கு நாளை
விடுதலை
ஆனந்தம் ஆனந்தம்
தோழர்களே
கூடிப் பனங்கட்டி கூழும்
குடிக்கலாம்
கொழுக்கட்டை தின்னலாம்
தோழர்களே"

இன்று திங்கட்கிழமை ஆடிப் பிறப்பு. சோமசுந்தரப்புலவர் கூழைப்பற்றி பாடினாலும் பாடினார். எங்கள் மனமும் கூழுக்காக அலையத் தொடங்கியது. முன்னரெல்லாம் ஆடி பிறந்துவிட்டால் போதும் ஊரிலே கொழுக்கட்டைக்கும் கூழுக்கும் குறைவே இருக்காது. அந்தக் கூழின் சுவை கடந்த சில நாள்களாகவே எங்களையும் ஏதோ செய்தது. நாங்கள் என்றால் நானும் அரவிந்தனும் தென்இலங்கையில் அறைக்குள் இருந்து படித்துக் கொண்டிருக்கும் வட இலங்கைவாசிகள்.

"கூழை கடையிலே காசுகொடுத்து வாங்க முடியுமா?" என்று அறைத்தோழன் அரவிந்தனிடம் கேட்டேன். ஒழுங்காய் சோறு, கறி, பிட்டு, இடியப்பத்தையே செய்ய மாட்டாங்கள். இந்தப் பனங்கட்டிக் கூழைப் பற்றி இஞ்சை உள்ளவர்களுக்கெல்லாம் என்ன தெரியும்? இப்பவெல்லாம் சனம் கூழை மறந்து; ஏன் சோமசுந்தரப் புலவரையே மறந்து போய்ச்சு எங்கட அடிப்படைப் உணவுப் பழக்கங்களை எல்லாம் சனம் மறந்து போய்ச்சு" என்று பெரிய ஒரு லெக்சரே அடித்தான் அரவிந்தன். எனக்குக் கூழ் ஆசையை விடமுடியவில்லை. இனி இதற்காக ஊருக்கா போக முடியும்?

நாங்கள் எதிர்பார்த்த ஆடிப்பிறப்பு வந்தது. அன்று காலையில் இருந்தே எனக்கு ஊரின் ஞாபகம்தான் ஊரிலே அன்றைய தினம் அங்குள்ள கிணற்றடி வைரவர் கோயில்களுக்கெல்லாம் பொங்கல் செய்து படைப்பார்கள். பால்றொட்டி, வடை, முறுக்கு, அரியதரம் போன்ற பலகாரங்களை எல்லாம் சுட்டு அயலவர்களுடன் பகிர்ந்து உண்பார்கள். இந்தப் பலகாரங்கள் கூட இப்போ பலருக்கு மறந்திருக்கும். இதுதவிர பனங்கட்டிக் கூழ் காய்ச்சுவார்கள். கொழுக்கட்டை அவிப்பார்கள். இது ஆடி மாதம் பூராகவும் தொடர்ந்தபடிதான் இருக்கும். எங்களுக்கெல்லாம் ஒரே வேட்டைதான். அதெல்லாம் ஒரு காலம்?

"மச்சான் பின்னேரம் வேலைமுடிஞ்சு வந்த உடனே ரெடியாய் இரு. நாங்கள் வெள்ளவத்தையில் இருக்கிற என்னுடைய சித்தப்பா முறையான ஒருவரின் வீட்டை போவம்" என்றான் அரவிந்தன்.

"இல்லை மச்சான் சுகுமார், என்று எனக்கு தெரிந்தவர் பம்பலப்பிட்டியில் இருக்கிறார் அங்கை போவம்" என்று நான் கூறினேன்.

"இல்லை மச்சான் சித்தப்பா வீட்டை போவம்" என்று மீண்டும் அரவிந்தன் கூறினான். எனக்கு கோபம் வந்தது.

"உங்கட சித்தப்பா வீட்டிலை கட்டாயம் கூழ் காய்ச்சுவினமோ" என்று ஒரு கேள்வியைக் கேட்டுவைத்தேன். அரவிந்தன் யோசித்தான். பின்பு அதே கேள்வியை மீண்டும் என்னிடம் கேட்டான்.

"உன்ரை சுகுமார் வீட்டிலை கட்டாயம் கூழ் காய்ச்சுவினமோ?" எனக்குப் பதில் சொல்லத் தெரியவில்லை.

"போன வருசம் சித்தப்பா வீட்டிலை கூழ் காய்ச்சினவை. நான் தற்செயலாகப் போனபோது எனக்கு கூழ் கிடைத்தது" என்றான் அரவிந்தன். சரி என்று அவனது விருப்பப்படியே சித்தப்பா வீட்டுக்குப் போவதாகத் தீர்மானித்துக் கொண்டோம்.

அன்று மாலை நானும் அரவிந்தனும் சீவிச்சிங்காரித்துக் கொண்டு சித்தப்பா வீடு நோக்கிப் புறப்பட்டோம். "போகும் போது வெறுங்கையுடன் போகக்கூடாது" என்றான் அரவிந்தன். நான் உடனே கடையில் ஒரு பிஸ்கட் பெட்டி ஒன்றை வாங்கிக் கொண்டேன். அதாவது பண்டமாற்று முறை. நாங்கள் பிஸ்கட்டைக் கொடுத்து கூழ் குடிக்கப்போகின்றோம். குசேலர் கூட கிருஸ்ணனைக் காணப் போகும் போது அவலுடன்தான் போனாராம்.

அங்கே போய்ச் சேர்ந்த போது எங்களுக்கு நல்ல வரவேற்புக் கிடைத்தது. பலதரப்பட்ட விடயங்களையும் பேசிக்கொண்டோம். எனது கண்கள் எப்போது கூழ் வரும் என்று அடுக்களைப் பக்கம் நோக்கியபடியே இருந்தது. பிஸ்கட் தந்தார்கள், கேக் தந்தார்கள், தேநீர் தந்தார்கள். கூழ் மட்டும் வரவே இல்லை. "ஒருவேளை ஆடிப்பிறப்பை கேக் வெட்டித்தான் கொண்டாடினார்களோ?" இருந்தே இருந்து பார்த்தோம் கடைசியில் பொறுமை இழந்த அரவிந்தன்.

"இன்றைக்கு மாதப்பிறப்பெல்லோ" என்று கேட்டான் அவர்கள் கலண்டரைப் பார்த்துவிட்டு

"இன்றைக்கு பதினாறாம் திகதிதானே" என்றார்கள்.

"அடியடா பிறப்படலையிலை எண்டானாம்" போய்ச்சு.. கூழ் ஆசை போய்ச்சு. அப்போது சித்தப்பாதான் சுதாகரித்துக் கொண்டு.

"இண்டைக்கு ஆடிப்பிறப்பு அது எனக்கு தெரியும். இஞ்சை என்னத்தைத்தான் செய்யிறது?" என்று சலித்துக் கொண்டார். துணைக்கு அவரது மனைவியும்.

"போன வருசம் கூழ் காய்ச்சி ஒருத்தருமே குடிக்கேல்லைத் தம்பி. இந்தப் பிள்ளைகளுக்குக் கூழ், கஞ்சி ஒத்துக்கொள்ளாது. எந்த நேரமும் ஐஸ்கிறீமை, யோக்கடை வாங்கி வைச்சு சாப்பிட்டுப் பழகிவிட்டுதுகள்" என்று கூறிய போது நான் அரவிந்தனைப் பார்த்தேன். அவனைப் பிடித்துச் சாப்பிடவேண்டும் போல இருந்தது. இருவருமாக விடைபெற்றுக் கொண்டாம். வெளியே வீதிக்கு வந்த பின்னர்...

"மச்சான் நீ சொன்ன சுகுமார் வீட்டுக்குப் போய்ப் பார்த்தூர் என்ன? என்று என்னைப் பார்த்துக் கேட்டான் அரவிந்தன்" இப்போ நான் விட்டாலும் அவன் விடவில்லை. "சரி" என்றேன். இருவருமாக மீண்டும் ஒரு பிஸ்கற் பெட்டியை வாங்கிக் கொண்டு சுகுமார் வீடு நோக்கிப் புறப்பட்டோம்.

சுகுமாரும் மனைவியும் எங்களை முக மலர்ச்சியோடு வரவேற்றார்கள். அவராகவே இன்றைக்கு "ஆடிப்பிறப்பு" என்றும் அதன் சிறப்புக்களையும், அதை எப்படி எல்லாம் கொண்டாடுவோம் என்று சொல்லிக் கொண்டே வந்தார். எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது. இவர் எப்போது கூழ்பற்றிக் கூறுவார்? என்று காத்திருந்தேன். பயன் இல்லை. இறுதியாக நானே சுகுமாரின் மனைவியிடம்

"நீங்கள் ஆடிப்பிறப்புக்கு கூழ் ஒன்று காய்ச்சுவதில்லையா?" என்று கேட்டேன்.

"ஆ.... கூழ்" "இந்த மரவள்ளிக்கிழங்கு, நண்டு, இறால் எல்லாம் போட்டுக் காய்ச்சு வாங்களே அதுவா?" என்று கேட்ட போது நான் மயங்கி விழாத குறைதான்.

"அ அதுவும் கூழ்தான்........ இ..இது வேறை கூழ்" என்றான் அரவிந்தன்.

"எட தம்பி என்ரை மனிசிக்கு கொழும்பு வந்த பிறகு தான் சமைக்கவே தெரியும் அதுகும் நான் சொல்லிக் கொடுத்துத்தான். நந்தினிக்கு கூழ் மட்டுமில்லை கொழுக்கட்டையும் செய்யத் தெரியாது" என்னறார் சுகுமார்.

"சரி சரி அடுத்த தடவை ஊருக்குப் போட்டு வரும்போது கூழ் காய்ச்சுவது எப்படி? என்று அறிஞ்சுகொண்டு வாங்கோ" என்று கூறியபடி நாங்கள் எழுந்த போது.....

"இல்லை இல்லை கட்டாயம் இருந்து சாப்பிட்டு விட்டுத்தான் போகவேணும்" என்று கூறி பிட்டு அவித்துத் தந்தார்கள். நாங்களும் கூழுக்குப் போய்... பிட்டை நிரப்பிக்கொண்டு வீடு வந்து சேர்ந்தோம்.

"மச்சான் நாங்கள் கல்யாணம் முடிக்கும் போது நல்லாய் சமைக்கத் தெரிந்த பெண்ணாகத்தான் கட்டவேணும்" என்று கூறினான் அரவிந்தன். எனக்குச் சிரிப்பாக இருந்தது. ஏதோ கூழ் கிடைக்கவில்லை என்ற ஆதங்கத்தில் சொல்லுகிறான். நாளைக்கு எல்லாம் சரியாப் போகும் என்று நினைத்துக் கொண்டேன். கூழ் ஆசையை தற்காலிகமாக ஒத்திவைத்துக் கொண்டோம். ஆடி மாதமும் கொஞ்சம் கொஞ்சமாக போய்க் கொண்டிருந்தது. கூடவே எங்கள் கூழ் ஆசையும் தான்.

அன்று ஒரு ஞாயிற்றுக்கிழமை. அதிகாலையிலேயே அவசரமாக என்னை எழுப்பினான் அரவிந்தன்.

"மச்சான் இண்டைக்கு நாங்கள் கூழ்குடிக்கப் போகின்றோம்" என்றான். இரவு முழுவதும் கூழைப்பற்றியே கனவு கண்டு இருப்பான் போலட இருக்கிறது. நிமிர்ந்து உட்கார்ந்தேன்.

"மச்சான் நல்ல ஒரு ஐடியா!! கூழுக்குத் தேவையான சாமான்களை கடையிலை வாங்குவம். அதைப் பக்கத்து வீட்டு அன்ரியிட்டை கொடுத்தால் கூழ் காய்ச்சித் தருவா" என்றான்.

"அன்ரிக்கு கூழ் காய்ச்சத் தெரிந்திருக்குமா?" என்று கேட்டேன்.

"ஓம் மச்சான் அதுகள் நவாலி, சங்கரத்தையைச் சேர்ந்த சனம். கட்டாயம் தெரிஞ்சிருக்கும்" என்றான்.

"நவாலி" என்றவுடன் எனக்கு நம்பிக்கை வந்தது. "சோமசுந்தரப்புலவர் பிறந்த ஊர் அல்லவா?

அவர்களுக்கு கட்டாயம் ஆடிக் கூழைப் பற்றித் தெரிந்திருக்கும். அன்று மாலை அதற்கு வேண்டிய சாமான்களை வாங்கிக் கொண்டு அன்ரி வீட்டுக்குச் சென்றோம். அன்ரிக்கு ஏதோ விளங்கியிருக்க வேண்டும்.

"தம்பிமாருக்கு என்ன செய்துதர வேணும்?... ஐசிங் கேக்கா? புருட்கேக்கா? பலூடாவா? மஸ்கெற்றா? பால்கோவாவா? சூசியமா? அல்லது சில்லிப் பராட்டவா? பூரியா, சப்பாத்தியா? சொல்லுங்கோ தம்பிமார் என்ன செய்து தரவேணும்?...." "ஆ இதுகள் எல்லாம் தின்பண்டங்களா? இதுகளைப் பற்றி எல்லாம் எங்களுக்கு எதுகுமே தெரியாது?" என்று சொல்ல நினைத்தேன் சொல்லவில்லை. அரவிந்தன் இந்த அதிர்ச்சியில் இருந்து மீளவே இல்லை. உண்மையாகவே அன்ரி ஒரு சமையல் புயல்தான், நிச்சயமாக இன்று கூழ் குடிக்கலாம். என்று நினைத்துக் கொண்டேன். நான் சுதாகரித்துக் கொண்டு..

"அன்ரி அவ்வளவிற்குச் சிரமப்பட வேண்டாம். எங்களுக்கு ஆடிக்கூழ் காய்ச்சித் தரமுடியுமா? என்று கேட்டேன்.

"ஆடிக்கூழா......?"

"ஓம் அதுதான் சோமசுந்தரப் புலவர் பாடினாரே பனங்கட்டிக்கூழ்" என்றேன்.

"யார் சோமசுந்தரப் புலவர்?" என்று கேட்டாள் அன்ரி.

எனக்கு ஐஞ்சும் கெட்டு அறிவும் கெட்டுப் போச்சு.... அதன் பிறகு அரவிந்தன்தான் பேசினான்.

"இது பயறு, பனங்கட்டி தேங்காய் எல்லாம் போட்டுக் காய்ச்சுவாங்களே அது தான்" என்றான்.

"....அ... அது ஊரிலை சின்னனிலை ஒருக்கால் குடிச்சிருக்கிறன். ஆனால் அது எப்படி செய்கிறது எண்டு எனக்குத் தெரியாது" என்று கையைப் பிசைந்து கொண்டாள். பேசத் தெரியாதவன் ஆங்கிலம் பேசின மாதிரித்தான் என்று நினைத்துக் கொண்டு,

"சரி போகட்டும் எங்களுக்கு பால்கோவா தேவைப்படும் போது வாறம் அன்ரி" என்று கூறியபடி விடை பெற்றுக் கொண்டோம்.

வெளிநாடுகளில் இருந்து எல்லாம் பலர் தங்கள் பெற்றோருக்கு இப்படி "ஒடியற்கூழ், பனங்கூழ் எல்லாம் குடிக்க ஆசையாக இருக்கிறது என்று கடிதம் எழுதியதை எல்லாம் நான் கேள்விப்பட்டிருக்கின்றேன். ஆனால் இந்த இரண்டுங்கெட்டான் கொழும்புவாழ் பெருங்குடி மக்கள் மட்டும் எங்கள் வாழ்க்கை முறையையே மறந்துட்டார்கள் என்று நான் ஆதங்கப் பட்டேன். அப்போது "உனக்கு ஒருத்தரும் கூழ்காய்ச்சித் தரவில்லை என்ற கோவம் மச்சான்" என்றான் அரவிந்தன்.

நாங்கள் மீண்டும் அறைக்கு வந்த கையோடு அரவிந்தன் மண்ணெண்ணைக் குக்கரை எடுத்து அடுப்பை மூட்டினான். சருவத்தை வைத்துத் தண்ணீர் ஊற்றினான்.

"எடேய் என்ன செய்யப் போறாய்?" என்றேன்.

"நீயே பார்... கூழ் பெரிய கூழ்? எனக்கு கொஞ்சம் சமையல் தெரியும். இண்டைக்கு எப்படியும் கூழ்குடிக்கிறது தான்" என்றான்.

சருவத்து நீர் கொதித்ததும் பயறை அதற்குள் போட்டு அவித்தான். பயறு அவிந்து வந்த போது, தேங்காய்ப்பாலையும் விட்டு அரிசிமாவையும் போட்டுக் கலக்கினான். நான் பனங்கட்டியை வெட்டிக் கொடுத்தேன். அதனையும் உள்ளே போட்டுக் கொதிக்க விட்டான். அப்போதுதான் ஞாபகம் வந்தது. தேங்காய் ஒன்றை உடைத்து, சொட்டாக்கி அதை நறுக்கி உள்ளே போட்டுக் கலக்கினோம். கூழின் வாசனை மூக்கைத் துளைத்தது. எனக்கு இருப்புக் கொள்ளவில்லை.

"மச்சான் ஆடிக்கூழ் லேசாய் உறைக்கிறது தானே? அதற்கு என்ன போட வேண்டும். என்று கேட்டேன். "வேறை என்ன செத்தல் மிளகாயை இடித்துப் போடவேண்டும்" என்றான்.

அந்தப் பதிலினால் அன்றைய அந்த ஆடிக்கூழில் பெரிய ஒரு திருப்பமே ஏற்படப் போகின்றது என்பதை அப்போது நான் அறிந்திருக்கவில்லை. மிளகாய் இடித்துப் போட்டு கூழைக்காய்ச்சி இறக்கி வைத்தான் அரவிந்தன். அந்தக் கூழைக் குடித்தது முதல் குடல் எல்லாம் எரிந்து இரண்டு நாள்களாய் ஒரே வயிற்றுப் போக்கு. கூழாசை குடலைக் கொண்டு போகப் பார்த்தது. நல்லகாலம் தப்பித்தோம்.

பிறகுதான் நாங்கள் தெரிந்து கொண்டோம். "கூழுக்கு மிளகு, சீரகம், ஏலக்காய் இடித்துப் போட வேண்டும். அது எங்களைப் போன்ற 'அவசரக் குடுக்கைகளுக்கு' சரிப்பட்டு வராது தான்.

"ஆடிக்கூழைத் தேடிக்குடி என்று ஆச்சி அடிக்கடி கூறுவாள். அங்கெல்லாம் தேடாமலே கூழ் கிடைக்கும். இங்கு தேடினாலும் கூழ் கிடைக்கவில்லை. அவரவர்க்கு அளந்ததுதான் எல்லாமே. ஒருவாறு ஆடிமாதமும் நிறைவு பெற்றிருந்தது. கூடவே கூழ் ஆசையும் தான். மீண்டும் அடுத்த வருடம் ஆடிமாதம் வரும் ஊருக்குப் போய், சந்தோசமாக "கூடிப் பனங்கட்டி கூழும் குடிக்கலாம் கொழுக்கட்டை தின்னலாம்" என்று நினைத்துக் கொண்டோம்....!"

■ கா.கார்த்திகேசு

# உவராகிறது பூநகரி

பூநகரி வடக்கே கிளாலி யாழ்ப்பாணக் கடல் நீரேரியையும்,மேற்கே வங்காள விரிகுடாவையும் தெற்கே மாந்தை மேற்கு உதவி அரச அதிபர் பிரிவில் அடக்கும் வெள்ளாங் குளத்தையும் கிழக்கே கரைச்சி உதவி அரச அதிபர் பிரிவின் எல்லைகளையும் உள்ளடக்குகின்றன. இந்தப் பிரதேசம் 448.75 சதுரக் கிலோமீற்றர் பரப்பளவைக் கொண்டது.

இன்று இதன் கணிசமான பகுதி உவராகிப்போகும் பேராபத்தை எதிர் நோக்கி வருகின்றது. 1960இல் ஆனையிறவு ஏ-9பாதையில் காணப்பட்ட பாலம் மூடப்பட்டதால் கிளாலிக் கடல் நீரேரியில் இருந்து நீர் ஏ-9 வீதிக்கு கிழக்குப் பகுதிக்கு செல்வது தடைப்பட்டது. இதனால் கிளாலி யாழ்ப்பாணக் கடல் நீர் ஏரிகளில் வற்றுப்பெருக்கு காலங்களில் கடல் நீர்மட்டம் உயரும். ஆனையிறவுப் பாலம் மூடப்பட முன்னர் கடல் நீர் பாலத்தின் ஊடாக அடுத்த பகுதிக்குச் சென்று சமநிலையாகும் பாலம் மூடப்பட்ட பின்னர் ஏ-9 பாதைக்கு மேற்குப் பகுதியால் கடல் நீர் மட்டம் வழமையை விட உயர்ந்தது. இதனால் தாழ்வான தரைப் பகுதிக்கு கடல் நீர் செல்லும்.

பின்னர் வற்றுக் காலத்தில் தரையை சென்றடைந்த கடல் நீரும் கடலுக்குள் செல்லாது ஒரு பகுதி தரையில் தேங்கி விடும். இவ்வாறு தரைப்பகுதியல் தேங்கிய நீரின் அளவு அதிகரித்ததோடு அல்லாமல் அந்நீரில் ஆவியாதலின் காரணமாக அதன் உப்புச் செறிவும் அதிகரித்து நிலத்தை உவராக்கி உள்ளது.

இவ்வாறு உவர் நீரால் பாதிக்கப்பட்ட பகுதிகளே மாளாப்பு மருதடிவெளி எனப்படுகிறது. (பூநகரி முட்கொம்பன் பாதையின் கிழக்குப் பகுதி) இந்தப்பகுதியில் ஆயிரத்தில் நிறைய மருத மரங்கள் காணப்பட்டன. [illegible] மேற்கே மாளாப்பு, கொக்கு உடையான் முழுதும் உவராகிவிட்டன. இதன் பரப்பளவு ஏறத்தாழ 26 சதுர கிலோமீற்றர் ஆகும் மாளாப்பு முகப்பில் தடுப்பணை சுற்றிவர அமைப்பதன் மூலம் பெரிய நன்னீர் தேக்கத்தை உருவாக்க முடியும்.

பூநகரியில் உள்ள ஆறுகளில் ஒனறான குடமுருட்டி ஆறு அக்கராயன் ஆற்றின் ஒரு பகுதியில் இருந்தும் முட்கொம்பன் வன்னேரிப் பகுதியில் இருந்தும் நீரைச் சேர்த்து பூநகரி நல்லூர் கடலில் கலக்கிறது. மாரி காலம் முழுவதும் பெருமளவு நன்னீரை இந்த ஆறு கடலில் கொட்டுகிறது. இது தடுக்கப்படுவதன் மூலம் குடமுருட்டியில் நீர்த் தேக்கம் உருவாகும் நிலையை ஏற்படுத்தலாம் கோடையில் கடல் நீரை உள்வாங்கி இந்நதிப் படுக்கை உவராகக் காணப்படுகின்றது.

பூநகரி பாலைக்குடாக் கடலில் கலக்கும் மண்ணைக் கல்லாறும் உப்புநீரை உள்வாங்கி குஞ்சுக்குளம் வன்னேரிப் பிரதேசங்களை உவராக்கி வருகின்றது. மாங்குளம், தென்னியன் குளம் கோட்டைகட்டிய குளம் ஆகிய பகுதிகளில் உற்பத்தியாகிப் பாய்வதே மண்ணைக் கல்லாறு.

பருவகால ஆறுகளாகிய குடமுருட்டி ஆறு, மண்ணைக் கல்லாறு இரண்டையும் மறித்து அணைகட்டுவதன் மூலம் புதிய பெரிய நீர்த்தேக்கத்தை பூநகரியில் உருவாக்க முடியும். இதனால் பூநகரிப் பிரதேசத்தின் பெரும் பகுதி உவராதலில் இருந்து மீட்கப்படும். பூநகரியில் குடிதண்ணீர்ப் பிரச்சினைக்கும் நிரந்தரத் தீர்வு காண முடியும். இவ்விரு நீர்த்தேக்கங்களாலும் தரைக்கீழ் நீர் மாற்றமடையும். கிணறுகளில் நீர்மட்டம் உயர்ந்து நன்னீர் கிடைக்கும் செம்மண்குண்டு கழி வெளிப் பகுதியிலும் தடுப்பணை அமைப்பதன் மூலம் பெரிய நீர்த்தேக்கம் அமையும்.

பூநகரியின் குடி தண்ணீர் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வுகாண இந்தத் தடுப்பு அணைகள் உதவும் என்பதால் இது விடயத்தில் உரியவர்கள் கவனம் கொள்ள வேண்டும் என்பது மக்களின் உள்ளக்கிடக்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நியாசத்தின் அர்த்தம்

துறவறம் ஏற்ற புதிதில் தமது இருப்பிடத்தில் இருந்து வெளியே போய் திரும்பும் போதும் விவேகானந்தர் ஒரு மைல், இரண்டு மைல் சுற்றி வளைந்துப் போகும் பாதையிலேயே பயணம் செய்வார். தர்மத்தை நோக்கிய நேர்ப்பயணம் தொடங்கிய அவரது நடைப்பயணத்தின் பாதை சுற்றுப்பாதையாகி விட்டது.ஏன் தெரியுமா?வழியில் இருந்த தாசிகளின் வீதி. முன்பு அதன் வழியாக இயல்பாகப் பயணப்பட்ட விவேகானந்தர் சந்நியாசி ஆன பிற்பாடு அந்தத் விலைமாதுகள் வசிப்பிடம் வழியாகப் பயணம் செய்வது தம் சந்நியாச தர்மத்திற்கு ஆகாது என்று அஞ்சினார். சந்நியாசத்தின் சரியான அடையாளம் அது என்று கருதிய விவேகானந்தர் பிற்பாடு அது தவறு என்று அவரே புரிந்து கொண்டார். எப்படி?

ஓர் உண்மையான சந்நியாசிக்கு எல்லோரது வீடும், வீதியும், இருப்பிடமும் ஒன்றுதான். எதுவுமே அவனிடம் ஒட்ட முடியாத போதுவிலைமாதுகளின் வீதி ஏன் விலக்கப்பட வேண்டியது? அந்தப் பயமும் ஒரு வகையில் தாசிகள் மீதான விருப்பமே... ஈர்ப்பே... ஈடுபாடு. ஈடுபாடு என்பது நேர்முகமாக மட்டும் இருப்பதல்ல. எதிர்முகமாகவும் இருக்க வாய்ப்புண்டு.அந்த விருப்பம் ஆழ்மனதில் இருப்பதால்தான் அதை எதிர்த்து ஒரு காரியம் செய்ய வேண்டி இருக்கிறது. விருப்பம் இல்லை என்பது சத்தியம் என்றால் அந்தத் வீதி வழி போவதில் என்ன சங்கடம் விளையப்போகிறது? விவேகானந்தர் இதை உணர அவர் வாழ்வில் இன்னொரு வாய்ப்பு வந்தது.


ஜெய்ப்பூருக்கு அருகில் இருந்த ஒரு சமஸ்தானத்தில் விவேகானந்தர் விருந்தினராகத் தங்கியிருந்தார். அரசர் அவருக்கு ஒரு பெரிய வரவேற்பு விழா நடத்த ஏற்பாடு செய்திருந்தார். அந்தக்கால அரச வழக்கப்படி விலைமகள் ஒருத்தியை ஆடிப்பாடி வரவேற்க அரசர் ஏற்பாடு செய்திருந்தார். செய்தி அறிந்ததும் விவேகானந்தர் விழாவைப் புறக்கணித்தார். தமது அறையில் தங்கிவிட்டார் .

விலைமாதுவுக்கு மிகவும் கவலை. அவள் அழுதுகொண்டே ஒரு கீதம் பாடினாள். அதன் பொருள் அருமையானது. விவேகானந்தரையே வெட்கப்பட வைத்தது. நரசிம்ம மேத்தாவின் பஜனைப் பாடல் அது. அதன் பொருள் என்ன தெரியுமா? ''பாரஸ் என்பது எந்த உலோகத்தையும் தொட்டவுடன் பொன்னாக்கும் ஒருவகை உயர்ந்த கல். அது உலோகங்களிடையே பேதம் பார்ப்பது கிடையாது. காரணம் அது உயர்ந்த கல்.

ஓர் உலோகத்துண்டு கசாப்புக் கடையில் அரிவாளாகக் கிடக்கிறது. மற்றோர் உலோகத் துண்டு பூசையறையில் சிலையாகக் கிடக்கிறது. உலகம் இந்த உலோகங்களில் உயர்வு தாழ்வு பார்க்கிறது. ஆனால் பாரஸ் அப்படி இல்லை. காரணம் அது தொட்டதும் இரண்டு உலோகத் துண்டுமே பொன்னாகிவிடும்.

கோயிலில் உள்ள உலோகத்தை மட்டுமே பொன்னாக்குவேன். கசாப்புக் கடையில் உள்ள உலோகத்தைப் பொன்னாக்க முடியாது என்று சொன்னால் அது உண்மையான பாரஸ் கல் அல்ல. போலிக்கல். 'இறைவா, என் மட்டமான இயல்பைப் பார்க்காதே. என்னையும் பொன்னாக்கு' என்ற பொருளுடைய பாடலை உணர்வுபூர்வமாகப் பாடினாள்.

விவேகானந்தரின் உயிர் நடுங்கியது.தமது இருப்பிடத்தை விட்டு ஓடினார். அவருக்குத் விலைமாது மீது விருப்பும் இல்லை. வெறுப்பும் இல்லை. உண்மையில் காவி அன்று தான் தன் அர்த்தத்தைக் கற்றுக் கொண்டது.



ஆம்....


இராமகிருஷ்ணர் நரேந்திரனுக்கு எப்போதோ காவி கொடுத்து விட்டார். அந்த விலைமாது அன்று தான் அவருக்கு சந்நியாசம் கொடுத்தாள்.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# தென்கயிலாயம் என்று போற்றப்பட்ட திருக்கேதீச்சரம்

லெம்பேட்

*(கடந்தவாரத் தொடர்ச்சி)*



திருக்கேதீச்சரம் என்ற பெயர் புராணங்களில் கூறப்பட்ட கதைகளை அடிப்படையாகக் கொண்டு காரணப்பெயராகி அன்று தொட்டு இன்றுவரை வழங்கி வருகின்றது. ஒவ்வொரு நாட்டிலும் அவரவர் கலாசாரத்தை அடிப்படையாகக் கொண்ட, புராணக்கதைகள் காணப்படுகின்றன. விஞ்ஞான அறிவு மேலோங்கி நிற்கின்ற தற்காலத்தில் நிகழ்ந்து கொண்டிருக்கும் சம்பவங்களையெல்லாம் புராணக்கதைகளில் காணக் கூடியதாயுள்ளது. எனவே இவை வெறும் கட்டுக் கதைகள் என்று ஒதுக்கி விடாது, இவற்றுள் புதைந்து கிடக்கும் அறிவுபூர்வமான சாரங்களை வெளிக்கொணர்ந்து ஆராய்ந்து முடிவெடுப்பது இன்றைய தேவையாகும். "International Society For the Investigation of Ancient Civilzation" என்ற நூலில் இராமாயண, மகாபாரத யுத்தங்கள் நடைபெற்ற நிகழ்ச்சிகள் என்பதை பல்வேறு ஆதாரங்களோடு, மெஞ்ஞான, விஞ்ஞான அறிவில் ஊறிய அறிஞர்கள் ஆராய்ந்து ஆதாரபூர்வமான கருத்துக்களை வெளியிட்டுள்ளார்கள். இக்கருத்துக்கள் ஈழத்திலே காணப்படுகின்ற ஆலய வரலாறுகளின் தொன்மையை ஆராயப் பேருதவியாக அமைந்துள்ளன. மண்மூடிக் காணப்பட்ட திருக்கேதீச்சரம் ஆலயத்தை மீண்டும் வெளிக்கொண்டு வர உதவியவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர். பதிகங்களிலும், புராண வரலாறுகளிலும் காணப்பட்ட செய்திகளை ஆதாரமாகக் கொண்டே ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அதனுள் புதைந்து கிடக்கும் வரலாற்று உண்மைகளை வெளிக்கொணர்ந்தார்.

திருக்கேதீச்சரத்தினுடைய ஆரம்பகால வரலாறும் புராணக் கதைகளைத் தழுவியதாகவே காணப்படுகின்றது. இந்துக்களால் போற்றப்படும் நவக்கிரகங்களுள் ஒருவரான கேது பகவான், தனது வினைகளைப் போக்க ஈழநாட்டின் வடபகுதியிலுள்ள, திருக்கயிலைச்சிகரம் வந்து வீழ்ந்த இடமுமான தென்கையிலாயம் எனப்போற்றப்பட்ட தலத்திற்கு வந்து வணங்கினார். அதனால் மகிழ்ந்த இறைவன் அவருக்குக் காட்சி தந்து, நீ எம்மை வணங்கியதால் எம்மைக் கேதீச்சரநாதர் என்றும், யாம் உறையும் இவ்விடம் கேதீச்சரம் என்றும் பெயர் பெறும்" என அருளியதாகப் புராணங்களில் கூறப்பட்டுள்ளது. இப்பெயரோடு திரு என்பது அடைமொழியாகச் சேர்க்கப்பட்டு, கேது+ஈச்சரம்=கேதீச்சரம் என வழங்கப்பட்டு வருகின்றது. கி.மு.3 ஆம் நூற்றாண்டில் இத்தலம் மகாதீர்த்தம் என அழைக்கப்பட்டுள்ளதைக் கதிர்காமக் கல்வெட்டொன்றின் மூலம் அறிய முடிகின்றது.

இவ்வாலயத்தின் தொன்மையை வேறு சில புராண வரலாறுகளும் விளக்கியுள்ளன. மகாதுவட்டா என்பவர் சூரபன்மனின் மனைவியான புதுமகோமளையின் பாட்டனார். சிறந்த சிற்பவல்லுனரான இவர் கேதீச்சரப்பெருமானை வழிபட்டு, கோயிலுக்குப் பல திருப்பணிகளைச் செய்தார். தேவதச்சனாகப் புராணங்களிலே கூறப்படும் மகாதுவட்டா வழிபட்டதால், திருக்கேதீச்சரம் ஆலயம் 'மகாதுவட்டாபுரம்' என அழைக்கப்பட்டது எனக் கந்தப்புராணத்திலும், தட்சிணகைலாயமான்மியத்திலும் கூறப்பட்டுள்ளது. மகாதுவட்டாபுரம் என்பது மாதோட்டம் எனப்பிற்காலத்தில் மருவியது. மாகாதுவட்டாவின் மகனே விஸ்வகன்மா எனப்புகழப்படும் தேவசிற்பி. இவர்கள் மாந்தைக்கம்மியர் வம்சத்தைச் சேர்ந்த ஓவிய குலத்தவர்.

இவர்களது பெயராலேயே ஓவியம் என்ற பெயர் ஏற்பட்டது. தென்கையலாயமெனப் புகழப்படும் மாந்தைநகர், ஓவியர்தேசயம் என விவிலிய நூலில் காணப்படுவதாக யாழ்ப்பாணச்சரித்திர ஆசிரியர் முதலியார் செ.இராசநாயகம் குறிப்பிட்டுள்ளார். குபேரன் பயன்படுத்தியதான ஆகாயவூர்தி, சீதையைக் கவர்ந்து செல்ல இராவணன் பயன்படுத்திய புஷ்பகவிமானம் ஆகியனவும் மாந்தைக் கம்மியரால் செய்யப்பட்டது என்பன போன்ற பல கருத்துக்களும் இவரால், ஆதாரபூர்வமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக்கூற்றுக்கள் திருக்கேதீச்சர ஆலயம் அமைந்திருந்த நகரின் சிறப்பை எடுத்தியம்பியுள்ளதோடு, ஆலயத்தின் தொன்மையையும் விளக்குகின்றது.

விஸ்வகன்மனால் கட்டப்பட்ட காந்தக்கோட்டையை புறநானூறு, சிலப்பதிகாரம், கலிங்கத்துப் பரணி போன்ற பழந்தமிழ் இலக்கியங்கள், 'தூங்கெயில்' எனக் குறிப்பிட்டுள்ளன. சீனப்பிரயாணியாகிய உறியூன்திசங் (Hiouen Thsang) எழுதிய நூலிலும், அரபிக்கதைகளிலும், மாந்தைப்பள்ளிலும் காந்தக்கோட்டையைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.

மாந்தையிலிருந்த சிற்பிகளும், ஓவியர்களுமான நாகர்கள் செய்த கற்சிலைகளும், குகை ஓவியங்களும் இவர்கள் திறனை எடுத்துக்காட்டுவனவாகக் காணப்படுகின்றன.

> “ வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே மாதோட்டத் துறைமுகம், கடல்வாணிப மையமாக விளங்கியுள்ளமைக்கு இதன் அமைப்பே காரணமாகும். அரபிக் கடல் வழியாகக் கப்பற்போக்கு வரத்து நடைபெற்ற காலத்தில், அவ்வழியாக வரும் கப்பல்கள், தென்மேற்குப் பருவக் காற்றிலிருந்து தப்ப, இந்தத் துறைமுகத்தில் தங்கிச் செல்வது, அக்கால வழக்கமாயிருந்தது

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே மாதோட்டத் துறைமுகம், கடல்வாணிப மையமாக விளங்கியுள்ளமைக்கு இதன் அமைப்பே காரணமாகும். அரபிக்கடல் வழியாகக் கப்பற் போக்கு வரத்து நடைபெற்ற காலத்தில், அவ்வழியாக வரும் கப்பல்கள், தென்மேற்குப்பருவக் காற்றிலிருந்து தப்ப, இந்தத் துறைமுகத்தில் தங்கிச் செல்வது. அக்கால வழக்கமாயிருந்தது. இதனால் இப்பகுதி புகழ்பெற்ற வணிகச்சந்தையாக விளங்கியுள்ளது. தற்காலத்தில் திருக்கேதீச்சரம் என அழைக்கப்படும் பகுதியே மாந்தை என அழைக்கப்பட்டுள்ளது. கடல் வாணிபத்தில் முக்கிய கேந்திரமாக இப்பகுதி விளங்கியுள்ளதால் இதனை, மாச்சந்தை என அழைக்க, அது பின்னர் மாந்தையாக அருகியிருக்க வேண்டும்.

கி.பி. முதல் மூன்று நூற்றாண்டுகளைக் கொண்ட சங்க கால இலக்கியமான அகநானூறில்'..நன்னகர் மாந்தை முற்றத்து ஒன்னார்..' என்றும், முத்தொள்ளாயிரத்தில்'... புன்னாகச் சோலை புனற்றெங்கு சூழ் மாந்தை...' என்றும் மாந்தையின் சிறப்புக் கூறப்பட்டுள்ளது.

இலங்கையின் வரலாற்றைக் கூறும் நூலாகச் சிங்கள இனத்தவர்களால் கருதப்படுவது மகாவம்சம். கி.பி. 6 ஆம் நூற்றாண்டில் பௌத்த பிக்கு ஒருவரால் பாளிமொழியில் மகாவம்சத்தின் முதற்பகுதி எழுதப்பட்டது. பின்னர் 13 ஆம் நூற்றாண்டில் மீண்டுமொரு முறை திருத்தி எழுதப்பட்டது. கி.பி. 1877 இல் மீண்டும் மகாவம்சம் திருத்தங்களுடன் பௌத்தகுருமாரால் தொகுக்கப்பட்டது. இந்தநூலிலும் திருக்கேதீச்சர ஆலயம் இருந்த மாதோட்டநகர் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன.

மாதோட்டநகரை, 'மகாசித்தா' என மகாவம்சம் குறிப்பிட்டுள்ளது. மாந்தை என வழங்கப்பட்ட தமிழ்ப்பெயரின் பாளி மொழிபெயர்ப்பே மகாசித்தா எனலாம். மகா என்றால் பெரிய என்றும், சித்தா என்றால் இறங்குதுறை அல்லது துறைமுகம் என்றும் பொருள்படும். மாந்தைப்பிரதேசம் பெருந்துறை எனவும் வழங்கப்பட்டுள்ளது. திருவாசகம் குயிற்பத்திலுள்ள, 'ஆர்கலிசூழ் தென்னிலங்கை அழகமர் மண்டோதரிக்குப் பேரருள் இன்பமளித்த பெருந்துறை மேயபிரான்' என்பது மாந்தையைக் குறிக்குமென்பர்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம் மக்களை இனிமேல் இறைவனே காப்பாற்ற வேண்டும்

## வரலாற்றுத் துரோகம் இழைத்துவிட்டது மு.காங். செனட்டர் மசூர் மௌலானா கொதிப்பு

மட்டக்களப்பு,ஜூலை16

கிழக்குத் தேர்தலில் அரசுடன் இணைந்து களமிறங்குவதற்கு முஸ்லிம் காங்கிரஸ் எடுத்துள்ள முடிவானது முஸ்லிம் மக்களுக்கு இழைத்த வரலாற்றுத் துரோகமாகும். முஸ்லிம்களை இனிமேல் இறைவன் தான் காப்பாற்ற வேண்டும்.

இவ்வாறு கிழக்குத் தேர்தல் குறித்தான மு.கா.வின் முடிவைக் காரசாரமாக விமர்சித்து, காட்டமாகக் கருத்து வெளியிடுகின்றார் முன்னாள் கல்முனை மாநகரசபை முதல்வர் செனட்டர்மசூர்மௌலானா.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எந்த நோக்கத்துக்காக முஸ்லிம் காங்கிரஸ் ஆரம்பிக்கப்பட்டதோ இன்று அந்த நோக்கம் மண்ணோடு மண்ணாகப் புதைக்கப்பட்டுவிட்டது.

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில்அரசுடன்இணைந்து போட்டியிடுவதற்கு நடைபெற்ற ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அதிஉச்சபீடக் கூட்டத்தில் இறுதி முடிவெடுக்கப்பட்டது. பெரும்பான்மையான உறுப்பினர்களின் கருத்துகளைப் புறந்தள்ளிவிட்டே கட்சித் தலைமை குறித்த முடிவுக்குச் சென்றுள்ளது.

சில கருமங்கள் அறிந்தும் - புரிந்தும்- தெரிந்தும் செய்பவை. ஆனால், மு.காவும் மேற்படி கோட்பாடுகளை மீறி பேச்சளவில் மட்டுமே அதாவது வெற்றுப் பத்திரத்திலேயே அரசுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை செய்து கொண்டுள்ளது. இது தமிழ் பேசும் சமூகத்துக்கு இழைக்கப்படும் மாபெரும் துரோகமாகும். இதை என்றும் வரலாற்றில் மாற்றியமைக்க முடியாது.

முஸ்லிம் சமூகம் இன்று தொடர்ச்சியாக ஏமாற்றப்பட்டு வரும் ஓர் இனமாக இருந்து வருகின்றது. இந்தநிலையில், முஸ்லிம் மக்களின் நம்பிக்கைக்குரிய கட்சியான மு.கா. எடுத்துள்ள மேற்படி முடிவானது வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சும் நடவடிக்கையாகவே அமைந்துள்ளது என எண்ணத்தோன்றுகின்றது.


தமிழ் பேசும் மக்கள் என்ற முறையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்குமிடையில் இதுவரைகாலமும் 'ஒற்றுமை ' என்ற நடைமுறைப்படுத்தப்படாத- அற்புதமான உடன்படிக்கையொன்று இருந்துவந்தது. ஆனால், உணர்வுபூர்வமான விடயத்துடன் சம்பந்தப்பட்ட அந்தக் கண்ணுக்குப் புலனாகாத உடன்படிக்கை இன்று காற்றில் பறந்துசெல்லும் கட்டத்தை எட்டியுள்ளது. மு.காவின் முடிவே இந்தப் புயலை உருவாக்கியுள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை எந்த நோக்கங்களுக்காக மறைந்த தலைவர் அஷ்ரப் அன்று நிறுவினாரோ இன்று அந்த நோக்கங்கள்- எண்ணங்கள்-அபிலாஷைகள் ஆகியவை திசைமாறிச் செல்கின்றன. இது எமது எதிர்கால சந்திக்கு உகந்த தல்ல.

அதேவேளை, இரண்டு கட்சிகளுக்கிடையில் பேச்சு நடந்தால் அந்த இரண்டு கட்சிகளினதும் செயலாளர்கள் அதில் பங்குபற்றவேண்டும். அதுவே அரசியல் கோட்பாடாக இதுவரைகாலமும் இருந்துவந்தது. ஆனால், அரசுடன் மு.கா.நடத்திய பேச்சுகளின்போது எமது கட்சிச் செயலாளரின் பிரசன்னம் இடம்பெற்றிருக்கவில்லை. அவர் புறக்கணிக்கப்பட்டுள்ளார். மேற்படி விடயம் தொடர்பில் கட்சியின் அதி உச்சபீடக் கூட்டத்தில் கேள்வி எழுப்பப்பட்டது. ஆனால், பொருத்தமான பதிலெதுவும் கிடைக்கவில்லை.

முஸ்லிம் மக்களின் நலன்களை- உரிமைகளை கட்டிக்காக்க வேண்டிய கடப்பாட்டைக்கொண்ட கட்சி என்ற அந்தஸ்தைப் பெற்றுள்ள மு.கா. தனது சமூகம் இன்னல்படும்போது காலத்துக்கு முரணானதொரு முடிவை எடுத்துள்ளமையானது மன்னிக்கமுடியாத தவறாகும். அதை என்றும் மாற்றியமைக்க முடியாது என்றே நான் கருதுகின்றேன்.

அதிஉச்சபீட உறுப்பினர்களில் பலர் பலவிதமான கருத்துகளை முன்வைத்திருந்தாலும் அவை உரிய முறையில் பரிசீலிக்கப்படவில்லை. எனவே, கிழக்குத் தேர்தலில் அரசுடன் இணைந்து களமிறங்குவதற்கு எடுக்கப்பட்டுள்ள முடிவானது தமிழ் பேசும் மக்களை படுபாதாளத்தில் தள்ளிவிடும் செயலாகும். இதன் பின்விளைவுகளை இனிவரும் காலங்களில் உணரக் கூடியதாக விருக்கும்.



### உறுதிமிக்கது கூட்டமைப்பு

அரசியலுக்காக சமூகத்தின் முதுகில் சவாரி செய்ய நினைப்பது சமூகத்துக்கு இழைக்கும் மாபெரும் துரோகமாகும். முஸ்லிம் மக்களுக்கு உரிமைகள் கிடைக்கப்பெற வேண்டும் என்ற விடயத்தில் அன்றிலிருந்து இன்றுவரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுதியாகவே இருந்து வருகின்றது. அவர்களை சர்வதேசமும் அங்கீகரித்துள்ளது. எனவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்காலத்தில் முன்னெடுக்கும் எந்தவொரு போராட்டமாக இருந்தாலும் அதில் எனது பங்களிப்பு கட்டாயம் இருக்கும்- என்றார்.

# பள்ளிவாசலை அகற்ற நடவடிக்கை அவசியம்

## சர்ச்சையைக் கிளப்புகின்றது தேரரின் பரபரப்புக் கருத்து

தம்புள்ள,ஜூலை16

தம்புள்ள பள்ளிவாசலை எக்காரணங்கொண்டும் அது இருக்குமிடத்திலிருந்து அகற்றக்கூடாது என்று ஒட்டுமொத்த முஸ்லிம்களும் ஒருமித்த குரலில் வலியுறுத்தி வரும் நிலையில், தம்புள்ள புனித பூமியை அபிவிருத்தி செய்வதற்கு அரசு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று கருத்து வெளியிட்டு மீண்டும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளார் வண. இராமலுவே சுமங்கள தேரர்.

அதாவது, பள்ளிவாசலை புனித பூமி எனக் கூறப்படும் பிரதேசத்திலிருந்து அகற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவில்லை என்பதையே அவர், அபிவிருத்தி நடவடிக்கைகளை அரசு முன்னெடுக்கவில்லை என்ற தொனியில் கூறமுற்படுகின்றார் என முஸ்லிம் புத்திஜீவிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தம்புள்ள விகாரையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பு ஒன்றின் போதே தேரர் மேற்படி கருத்தை வெளியிட்டுள்ளார்.

கடந்த காலங்களில் ஏற்பட்ட பரபரப்பான நிகழ்வுகளுக்குப் பின்னர் அரச நிறுவனங்களுடன் இரண்டு முறை கலந்துரையாடிய போதிலும் இது சம்பந்தமாக அறிக்கை ஒன்றைக் கூட சமர்ப்பிக்கவில்லை என்று அவர் தெரிவித்தார்.

> அரச நிறுவனங்களுடன் இரண்டு முறை கலந்துரையாடிய போதிலும் இது சம்பந்தமாக அறிக்கை ஒன்றைக் கூட சமர்ப்பிக்கவில்லை


உள்நாட்டு, வெளிநாட்டு பௌத்த மக்கள் அடிக்கடி தம்முடன் தொடர்பு கொண்டு இது சம்பந்தமாகக் கேட்கின்றனர் என்றும், அவர்களுக்கு உண்மையைக் கூற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்றும் தேரர் மேலும் குறிப்பிட்டார். (ச)

# அபிவிருத்தி குறித்து கலந்துரையாடல்

கல்முனை, ஜூலை16

கல்முனை பிரதேசத்துக்கு ஒதுக்கப்பட்ட 183 மில்லியன் ரூபா நிதியைக் கொண்டு பிரதேச அபிவிருத்தியை எவ்வாறான வேலைத் திட்டங்களின் ஊடாக மேற்கொள்வது என்பது தொடர்பாக கல்முனை பிரதேச அபிவிருத்தி சபைக் கூட்டத்தில் கலந்தாலோசிக்கப்பட்டது.

கல்முனை பிரதேச செயலகத்துக்குட்பட்ட கல்முனை, கல்முனைக்குடி பிரதேசத்துக்கு 97 மில்லியன் ரூபாவும், மருதமுனை பிரதேசத்துக்கு 60மில்லியன் ரூபாவும், நற்பிட்டிமுனை பிரதேசத்துக்கு 20 மில்லியன் ரூபாவும், கல்முனை முதலாம் பிரிவு இஸ்லாமபாத்துக்கு 6மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளதாக இந்தக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)



சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்வுக்கும் ஜெயந்திரபுர விகாராதிபதி பத்தப்பொல குணநந்த தேரோ தலைமையிலான பௌத்த மதக் குழுவுக்குமிடையிலான சந்திப்பு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை காத்தான்குடியிலுள்ள பிராந்திய அலுவலகத்தில் நடைபெற்றது.

# பிள்ளையான் கட்சி ஆதரவாளர்களுக்கு அச்சுறுத்தல்

மட்டக்களப்பு,ஜூலை16

கிழக்கில் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி ஆதரவாளர் அனைவருக்கும் 'தமிழீழ விடுதலைப்புலிகள்' என்ற பெயரில் வெளியிட்டுள்ள துண்டுப் பிரசுரத்தின் மூலம் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் உறுப்பினரும், கிழக்கு மாகாணசபையின் முன்னாள் உறுப்பினருமான பூ.பிரசாந்தன் தெரிவித்தார்.

இது தொடர்பாக காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (ச)

# கல்லடிப் பாலம்

## நிர்மாணப் பணிகள் பெப்ரவரியில் பூர்த்தி



மட்டக்களப்பு, ஜூலை16

மட்டக்களப்பு, கல்லடிப் பாலத்தின் நிர்மாணப்பணிகள் அடுத்தவருடம் பெப்ரவரி மாதத்துக்குள் பூர்த்தியடையவுள்ளதாக மாவட்ட அபிவிருத்திக்குழுத் தலைவரும் பிரதி அமைச்சருமான எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

1700 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுவரும் குறித்த கல்லடிப் பாலத்தின் நிர்மாணப் பணிகளை இலங்கை அரச தகவல் திணைக்களத்தின் ஏற்பாட்டில் தென்பகுதி மற்றும் மட்டக்களப்பு மாவட்ட ஊடகவியலாளர்கள் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நேரில் சென்று பார்வையிட்டனர்.

இதன்போது, கலைக்கப்பட்ட கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன், தகவல் திணைக்களப் பணிப்பாளர் ஆரிய ரூபசிங்க, பிரதிப் பணிப்பாளர் ஹில்மி முஹம்மட் உட்பட பலர் இணைந்திருந்தனர்.

சிங்கப்பூர் நிர்மாண நிறுவனத்தால் குறித்த பாலத்தின் நிர்மாணப்பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

# பஸ் உரிமையாளர்களிடம் லஞ்சம் பெறும் அதிகாரிகள்

திருகோணமலை, ஜூலை16

திருகோணமலையிலிருந்து வவுனியா நோக்கிச் செல்லும் தனியார் போக்குவரத்துக்குச் சொந்தமான பஸ் உரிமையாளர்களிடம் தொடர்ச்சியாக லஞ்சம் பெறப்பட்டு வருவதாக தெரியவந்துள்ளது.

தேசிய போக்குவரத்துச் சபையினால் அனுமதி வழங்கப்பட்டிருந்தும், மாகாண சபைகளின் போக்குவரத்து பிரிவுகளில் கடமையாற்றும் அதிகாரிகள் இடையிடையே நின்று பணம் வசூலித்து வருவதாகவும், ஹொராவபொத்தானை - மரதன்கடவல பகுதிகளிலேயே இவ்வாறு லஞ்சம் பெறப்படுவதாகவும் அறியமுடிகின்றது.

திருகோணமலை ஊடாக வவுனியா செல்லும் தனியார் போக்குவரத்து பஸ்களை இடையிடையே மறிக்கும் போக்குவரத்து பிரிவுகளில் கடமையாற்றும் அதிகாரிகள் [illegible] அனுமதிப்பத்திரத்தை வாங்கிப் பார்த்து ஐநூறு ரூபாய் தருமாறு வற்புறுத்துகின்றனர் என்று பஸ் உரிமையாளர்கள் ஆவேசத்துடன் தெரிவிக்கின்றனர். பஸ் உரிமையாளர்கள் பணம் கொடுக்கத் தவறும் பட்சத்தில் ஏதாவது [illegible] அவர்கள் [illegible] தாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** துணிச்சல், தன்னம்பிக்கை அதிகரிக்கும். பணவரவுகள் தாமதமானபோதும், காரியங்களை பாதிப்பில்லாமல் செய்து முடிப்பீர்கள். தொழில் மற்றும் வியாபாரத்தில், சந்தைப்படுத்துதலில் நவீன யுத்திகளைக் கையாளுவீர்கள். அதனால் லாபங்கள் அதிகரிக்கும்.

**இடபம்:** செலவுகளைக் கட்டுப்படுத்தி, சேமிப்பை அதிகரிப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் ஆர்வம் மேலிடும். வாகனங்களில் செல்லும்போதும், பயணங்களின்போதும் கவனம் தேவை. அலுவலகப் பணிகளில் கடும் வேலைப்பளு கலங்கடிக்கலாம்.

**மிதுனம்:** புதிய ஒப்பந்தங்களைத் பிற்போட்டு வைப்பது நன்மை தரும். நிலம், பூமி தொடர்பான பிரச்சினைகளில், சுமுகமான நிலையை எட்ட வாய்ப்புகள் உண்டு. உங்களைப் பற்றிய சிலரின் விமர்சனங்கள் அதிகம் யோசிக்க வைக்கும்.

**கடகம்:** எவ்வளவுதான் யோசித்துச் செயற்பட்டபோதும், பெண்களால் பிரச்சினைகளைச் சந்திக்க நேரிடலாம் கவனம். அலுவலகப் பணிகளில் சலுகைகள் கிட்டும். வெளிநாட்டுத் தொடர்புகளில் எதிர்பார்த்த தகவல் கிடைக்கப் பெறுவீர்கள்.

**சிங்கம்:** சோர்வுகள் அகன்று மனதில் தெம்பு, உற்சாகம் அதிகரிக்கும். அதிர்ஷ்ட வாய்ப்புகள் ஏற்படும். தொழில் ரீதியாக, புதிய முயற்சி ஒன்றில் ஈடுபடுவீர்கள். குடும்பத்தில் அமைதி நிலவும். அரசியல் தொடர்புடைய வேலைகளால் பணச் செலவு ஏற்படும்.

**கன்னி:** எடுத்த காரியங்கள் எண்ணம்போல நிறைவேறும் நாள். குடும்பத்துக்காக, சில கஷ்டங்களை அனுபவிக்க முன்வருவீர்கள். நண்பர்களிடம் வார்த்தை தவறுதலால், மனக் கஷ்டம் ஏற்படும்.

**நாளை**

ஆடி 02 செவ்வாய்க்கிழமை 17.07.2012
திதி: திரயோதசி மு.ப. 08.24 வரை
நட்சத்திரம்: மிருகசீரிடம், சித்தம் மு.ப. 08.29 வரை
சுபநேரம்: 10.30- 12.00 வரை
ராகு காலம்: 03.00- 04.30 வரை

**துலாம்:** அவசரப்பட்டு வார்த்தைகளை வெளியிடுவதைத் தவிர்த்துக்கொள்ளுங்கள். உடல் நிலையில் கவனம் செலுத்த வேண்டியது அவசியம். மேலதிகாரிகள் விடயத்தில், பொறுமையைக் கடைபிடிப்பது பெருமை தரும்.

**விருச்சிகம்:** கடந்த இரண்டு தினங்களாக நீடித்த சிக்கல்கள் தீர்ந்து, நிம்மதி காணும் நாள். கடன்கள் தீர்ந்து பெருமை கொள்வீர்கள். தொழில் ரீதியாக அலைச்சல் இருக்கும். திடீர் பயணம் ஏற்படும்.

**தனுசு:** மதிப்பு, மரியாதை அதிகரிக்கும். இயந்திரப் பணிகள் லாபம் தரும். வீட்டு வசதியை அதிகரிக்க முற்படுவீர்கள். பழைய நட்பு ஒன்றைச் சந்திப்பதன் மூலம் மகிழ்ச்சி அடைவீர்கள்.

**மகரம்:** மன மகிழ்ச்சியுடன் ஆரம்பிக்கும். சில பணிகளுக்காக பிறரின் உதவிகளை எதிர் பார்ப்பீர்கள். கிடைக்கவும் செய்யும். தொழிலதிபர்கள் அரசு ரீதியான உபத்திரவங்களுக்கு ஆளாகலாம்.

**கும்பம்:** எதிர்நோக்கி இருக்கும் விவகாரங்கள், உங்களுக்கு அதிகமான கவலையை ஏற்படுத்தியபோதும், மிகவும் எளிதாக தீர்வு காண்பீர்கள். அலுவலகப் பணிகளில், சக ஊழியரின் செயற்பாடு சங்கடத்தை ஏற்படுத்தும்.

**மீனம்:** தேவையற்ற பயம் மற்றும் மனக் குழப்பம் அடிக்கடி ஏற்படும். மன நிலையை ஒரு நிலைப்படுத்தி செயற்படுங்கள். தந்தை நலனில் அக்கறை காட்ட வேண்டும். கடமையைச் செய்வதில் தடுமாற்றங்கள் உண்டாகலாம்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | 2 | | 9 | 5 | |
| | 8 | 6 | | | | | | |
| 5 | 7 | | | 9 | 6 | | 4 | 3 |
| 6 | 3 | | | | | | | |
| 4 | 5 | | 6 | 1 | 8 | | 9 | 2 |
| | | | | | | | 8 | 4 |
| 7 | 2 | | 5 | 6 | | | 3 | 8 |
| | | | | | | 2 | 7 | |
| | 1 | 4 | | 3 | | | | |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 8 | 4 | 5 | 9 | 3 | 7 | 1 | 2 |
| 2 | 5 | 9 | 4 | 7 | 1 | 8 | 6 | 3 |
| 3 | 7 | 1 | 8 | 6 | 2 | 9 | 4 | 5 |
| 1 | 6 | 3 | 9 | 5 | 4 | 2 | 7 | 8 |
| 8 | 4 | 5 | 6 | 2 | 7 | 3 | 9 | 1 |
| 9 | 2 | 7 | 3 | 1 | 8 | 6 | 5 | 4 |
| 5 | 1 | 2 | 7 | 3 | 9 | 4 | 8 | 6 |
| 4 | 9 | 6 | 2 | 8 | 5 | 1 | 3 | 7 |
| 7 | 3 | 8 | 1 | 4 | 6 | 5 | 2 | 9 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# மரண அறிவித்தல்

## லிங்கநாதன் அஜிதா



பிரான்ஸ் Chelles ஐப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட லிங்கநாதன் அஜிதா 01.07.2012 ஞாயிற்றுக்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் மீசாலையைச் சேர்ந்த பிரான்சில் வசிக்கும் லிங்கநாதன் - கோகிலாதேவி தம்பதியரின் அருமைப் புதல்வியும், அபினாஸ், அனுசன், அஸ்வின் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான குஞ்சையா, தெய்வானைப் பிள்ளை, இரத்தினம், இராசரத்தினம் மற்றும் நாம்மா, செல்லம்மா, பொன்னம்பலம், இராசபூபதி, லோகநாதன் இந்திராணி (மீசாலை) ஆகியோரின் பேர்த்தியும் தேவசகாயம் தாரணி (பிரான்ஸ்), குணதேவரத்தினம் (பிரான்ஸ்), வீரச்சந்திரன் ஆனந்தி (ஜேர்மனி), கணேசலிங்கம் குகானந்தி (ஜேர்மனி), கோமதி, சுஜேனி, சுஜிதா (மீசாலை) ஆகியோரின் மருமகளும், குமாரநாதன் பாக்கியம் (மீசாலை), சோதிநாதன் விஜயகுமாரி (ஜேர்மனி) ஆகியோரின் பெறாமகளும், கஸ்தூரி, துளசிகரன், கேமாலினி (மீசாலை), பிரியங்கா (ஜேர்மனி) ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரியும், திலோஜினி, திபிகா, தினேகா, திரிஷிகா (பிரான்ஸ்), துஜிவன், கிருசாந்தன் (மீசாலை), நதீஸ், மதீஸ், யானிஸ், சாருஜன், அனிக்கா (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (16.07.2012) திங்கட்கிழமை பி.ப. 2.30 மணியளவில் Avenue Claye Chelles 77500 என்னுமிடத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மீசாலை வடக்கு,
கொடிகாமம்.


தகவல்:
இ. நாகம்மா (அம்மம்மா)

(20405) (45.6.7)

# மரண அறிவித்தல்

## சிவசம்பு சிவசிங்கராசா (சமாதான நீதிவான்)

(முன்னாள் பிரதம லிகிதர், சீநோர் நிறுவனம்,
முன்னாள் பொது முகாமையாளர் , வட்டு அபிவிருத்தி நிறுவனம்)



தோப்புக்காடு, காரைநகரைப் பிறப்பிடமாகவும், கண்ணகை அம்மன் கோயிலடி, வட்டு மேற்கு, வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட சிவசம்பு சிவசிங்கராசா (13.07.2012) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவசம்பு - அன்னம்மா தம்பதியரின் பாசமிகு மகனும் காலஞ் சென்றவர்களான நாகமுத்து - பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், நாகம்மாவின் அன்புக் கணவரும், சுசீலாதேவி (லண்டன்), கமலாதேவி (வவுனியா), சிவகுமார் (ஜேர்மனி), ஸ்ரீகரன் (நோர்வே, கணினிப் பொறியியலாளர்), ஸ்ரீதரன் (நோத்சீ குருநகர், யாழ்ப்பாணம்), சிவசுந்தரதேவி, சியாமளாதேவி, சிவசொரூபி (லண்டன்) ஆகியோரின் அன்புத்தந்தையும், கனகேந்திரன், நடனசபேசன், நித்தியானந்தன் (இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற இரத்தினேஸ்வரன் மற்றும் பேரழகன், ரஞ்சினி, இவோன், யசோதா ஆகியோரின் பாசமிகு மாமனும், துஷந்தா (லண்டன்), தர்சினி (வைத்திய நிபுணர், நோர்வே), தினேஸ்குமார், சத்யா (ஆசிரியை - வவுனியா), நிமலன் (B.A.S.F Area Manager), நிவேதன்(C.I.C), கமலாசனன், துனீந்திரா (ஜேர்மனி), யுனேஸ் (ஜேர்மனி), ஜென்சி (ஜேர்மனி), திலீப் (ஜேர்மனி), சிந்துஜா (உளவியல் சிகிச்சை நிபுணர், நோர்வே), யுகான் (நோர்வே), சுஜன் (நோர்வே), விஜித் (Marketing Excutive), அஜித் (ஆசிரியர், D.M.I - யாழ்ப்பாணம்), டுசானி, ஜெனார்த்தனி, கஜந்தன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர்), சஜீவன், பிரவீணா, டேஸ்மினா (தொண்டர் ஆசிரியை) , அஸ்வினி, சரண்யா, யதீஸ்வரன், நிதர்சன், சைலஜா, கஸ்தூரி ஆகியோரின் அன்புப்பேரனும், அன்பினி, பாரினி, சுருதி, தனிஸ்கன், சஞ்சேஜன் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (17.07.2012) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வட்டு மேற்கு,
வட்டுக்கோட்டை.

தகவல்:
குடும்பத்தினர்

(20429)(6-7-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்வந்தர்களாக மாறிய பொலிஸ் அதிகாரிகள்

## விசாரணை நடத்த ஏற்பாடு

கொழும்பு, ஜூலை16

நாட்டில் திடீர் செல்வந்தர்களாகமாறிய பொலிஸ் அதிகாரிகள் தொடர்பில் விசாரணை நடத்தப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பொலிஸ் திணைக்களத்தில் அதி உயர் பதவிகளை வகித்து வரும் சில அதிகாரிகள் திடீரென செல்வந்தர்களாக மாறியுள்ளனர். இவ்வாறு குறுகிய காலத்தில் அதிகளவு வருமானத்தை ஈட்டிய அதிகாரிகள் குறித்து விசாரணை நடத்தப்படவுள்ளது.

சில உயர் அதிகாரிகள் சொகுசு குடியிருப்புத் தொகுதிகள், வாகனங்கள், ஹோட்டல்கள், விடுதிகள் போன்றவற்றுக்கு உரிமையாளர்களாக மாறியுள்ளனர். இந்தத் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு விசாரணைகள் நடத்தப்படவுள்ளன என்று குறிப்பிடப்படுகின்றது.

இவ்வாறு செல்வந்தர்களாக மாறியோர் குறித்து லஞ்சஊழல்தவிர்ப்புஆணைக்குழு மற்றும் பொலிஸ் தலைமையக விசேட விசாரணைப் பிரிவு ஆகியவற்றுக்கு முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)



புனரமைக்கப்பட்டுவரும் ஐக்கிய தேசியக் கட்சி தலைமையகமான சிறிகொத்தாவை ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்கவும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்கவும் பார்வையிட்டனர்.

# துமிந்த நாடு திரும்பாவிட்டால் சிங்கப்பூர் அரசிடம் முறைப்பாடு

## ஹிருனிகா பிரேமச்சந்திர தெரிவிப்பு

நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா தொடர்பில் சிங்கப்பூர் அரசிடம் முறைப்பாடு செய்ய நேரிடும் என்று ஹிருனிகா பிரேமச்சந்திர தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

துமிந்த சில்வா விரைவில் நாடு திரும்பாவிட்டால், சிங்கப்பூர் அரசிடம் முறைப்பாடு செய்ய நேரிடும்.

கொலைக் குற்றச் செயலுடன் தொடர்புடைய சந்தேகநபர் ஒருவர் சிங்கப்பூர் நாட்டில் வசித்து வருவதாகத் தெரிவித்து இந்த முறைப்பாடு செய்யப்படவுள்ளது. என்றாவது ஒரு நாள் துமிந்த நாடு திரும்ப வேண்டி ஏற்படும். வாழ்க்கை முழுவ தும் அவரால் சிங்கப்பூரில் தங்கியிருக்க முடியாது.- என்றார்.(ச)

**வாழ்க்கை முழுவதும் அவரால் சிங்கப்பூரில் தங்கியிருக்க முடியாது**



# பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்ட 6 லட்சம் பேர் கைதுசெய்யப்படவில்லை

கொழும்பு,ஜூலை16

பிடிவிறாந்து உத்தரவு பிறப்பிக்கப்பட்ட ஆறு லட்சம் பேர் சுதந்திரமாக சுற்றித் திரிவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

2005 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் 12,38,138 பேருக்கு பிடிவிறாந்து உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.எனினும், இவர்களில் 6,16,915 பேர் மட்டுமே கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஜூலம்பிட்டியே அமரே என்னும் பாதாள உலகக் குழு தலைவர் பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டு கைது செய்யப்படவில்லை என்று குற்றம் சுமத்தப்பட்டதைத் தொடர்ந்து, நாடு முழுவதிலும் பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டு கைது செய்யப் படாதவர்களைக் கைது செய்ய பொலிஸார் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர். (ச)

# சுதந்திரக்கட்சி ஊடாக மட்டுமே மீண்டும் அரசியலுக்கு வருவேன்

## சந்திரிகா கூறுகிறார்

கொழும்பு,ஜூலை16

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஊடாக மட்டுமே மீண்டும் அரசியலுக்கு வரு வேன் என்று முன்னாள் ஜனா திபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க தெரி வித்தார்.



மீண்டும் செயற்பட்டு அரசியலில் களமிறங்கினால் அது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஊடாக மட்டுமேயாகும். ஆனால் மீண்டும் அரசியலில் களமிறங்குவது குறித்து இன்னமும் தீர்மானிக்கவில்லை என்று அவர் கூறினார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் மற்றும் இடதுசாரிக் கட்சி உறுப்பினர்களுடன் இணைந்து சந்திரிகா புதிய அரசியல் கூட்டமைப்பை ஒன்றை உருவாக்க உள்ளதாக அண்மையில் செய்திகள் வெளியிடப்பட்டிருந்தன.

எனினும், அரசியலில் களமிறங்கினால் அது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஊடாக மட்டுமே என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.(ச)

# போத்தலால் தாக்கி ஒருவர் கொலை

கொழும்பு,ஜூலை16

கந்தானை - வெலிகம்பட்டி - ஜாஎலவத்தை பகுதியில் போத்தலால் தாக்கப்பட்டு ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார் என்று பொலி ஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 6.15 மணிக்கு இடம்பெற்றுள்ளது.

தாக்குதலில் காயமடைந்த நபர் ராகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு உயிரிழந்துள்ளார்.

சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபருக்கும் கொலை செய்யப்பட்டவருக்கும் இடையில் காணப்பட்ட தனிப்பட்ட பிரச்சினையால் இந்த விபரீதம் இடம்பெற்றுள்ளது.

கந்தானைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# வீட்டுடன் மோதியது லொறி ஒருவர் சாவு: 2 பேர் படுகாயம்

கொழும்பு,ஜூலை16

கொழும்பு - கதிர்காமம் பிரதான வீதியின் தங்காலை - மஹவெல பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த லொறி நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை வீதியை விட்டு விலகி வீடொன்றின் மீது விழுந்து விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த விபத்தில் லொறியில் பயணித்த சாரதி உள்ளிட்ட இருவரும் வீட்டில் இருந்த பெண்ணும் படுகாயமடைந்து தங்காலை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

லொறியின் சாரதி சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.

காயமடைந்தவர்களில் ஒருவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச)

# பிரதேச சபை உறுப்பினருக்கு மறியல்

கொழும்பு,ஜூலை16

பொலிஸாரால் கைது செய்யப்பட்ட களனி பிரதேச சபையின் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு உறுப்பினர் இன்று திங்கட்கிழமை வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.இவர் மஹர நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்ட பின் விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ளார்.

பொது மக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் நடந்துகொண்டதாக குற்றம் சுமத்தி பேலியகொட பகுதியில் வைத்து களனி பிரதேச சபை உறுப்பினர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டார். இதேவேளை, தங்காலை நகர சபையின் உறுப்பினர் ஒருவரும் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

# தாக்குதலில் பொலிஸ்காரர் படுகாயம்

கொழும்பு,ஜூலை16

பண்டாரகம பிரதேசத்தில் சட்டவிரோதமான கொல்கள நிலையமொன்றை முற்றுகையிடச் சென்ற பொலிஸ் உத்தியோகத்தர்கள் சிலர் மீது கடும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதன்போது படுகாயமடைந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் பாணந்துறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பாணந்துறை வலய குற்றத் தடுப்புப் பிரிவினருக்குக் கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து நேற்றுமுன்தினம்இந்தச் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது சிலர் ஆயுதங் களால் பொலிஸார் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர்.

தாக்குதல் மேற்கொள்ளப் பயன்படுத்தப்பட்ட ஆயுதங்களை பொலிஸார் கைப் பற்றியுள்ளனர்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்களைக் கைது செய்ய பொலிஸார் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். (ச)

# ஆஸ்திரேலியா தப்பிச்செல்ல முயன்ற 22 பேர் சிக்கினர்

## உணவு, மருந்துகள் மீட்பு



கொழும்பு, ஜூலை16

சட்டவிரோதமாக ஆஸ்திரேலியாவுக்குத் தப்பிச் செல்ல முற்பட்ட 22 பேர் சிலாபம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சிலாபம் - முன்னேஸ்வரம் பகுதியில் வைத்து நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்களில் இரண்டு முகவர்களும் ஓட்டோச் சாரதி ஒருவரும் உள்ளடங்குகின்றனர்.

இரு முகவர்களும் ரிதிவெல்ல மற்றும் உடப்பு ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர். ஒரு முகவரிடம் இருந்து 2,94,000 ரூபா பணம் கைப்பற்றப்பட்டுள்ளது. தப்பிச் செல்ல முயற்சித்தவர்களிடம் இருந்து ஆறரை லட்சம் ரூபா பணம், 17 கையடக்கத் தொலைபேசி, உணவுப் பொருள்கள், மருந்து வகைகள் உள்ளிட்டவை பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

ஆஸ்திரேலியா நோக்கிச் செல்லவிருந்தவர்கள் யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்தவர்களாவர். இவர்களிடம் இருந்து தலா 9 லட்சம் ரூபா வீதம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்தச் சந்தேகநபர்கள் முன்னேஸ்வரம் வந்து ஒரு ஹோட்டலில் தங்கியிருந்து பின்னர் மூன்று ஓட்டோக்களில் சென்று கொண்டிருந்த போது பொலிஸாரிடம் மாட்டிக் கொண்டதுடன் இதில் ஒரு ஓட்டோச் சாரதி ஓட்டோவுடன் தப்பிச் சென்றுள்ளார். கைது செய்யப்பட்டவர்கள் சிலாபம் மாவட்ட நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர். (ச)

# பாலாவியில் பஸ் மீது தாக்குதல்

கொழும்பு,ஜூலை16

வவுனியாவில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த பஸ் மீது பாலாவி - மதுரங்குளிக்கு இடைப்பட்ட பகுதியில் வைத்து வானில் வந்த சிலர் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 2.30 மணிக்கு இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த நபர்கள் தாக்குதலின் பின் வானில் தப் பிச் சென்றுள்ளனர். தாக்குதலில் படுகாயமடைந்த பஸ்ஸின் சாரதி புத்தளம் வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டுள்ளார். குறித்த தாக்குதலில் பஸ் ஸுக்குச் சேதம் ஏற்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச)

# பண மோசடியில் ஈடுபட்டவர் கைது

கொழும்பு,ஜூலை16

அரசின் பிரபல நபரொருவரின் அந்தரங்க செயலாளரென தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டு அரசியல் வாதிகளை ஏமாற்றி பண மோசடி செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படும் ஒருவரை கொழும்பு [illegible] புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் ஆண்டு நினைவு

பிறப்பு 21.10.1935

இறப்பு 16.07.2010



## பிரான்சிஸ் கிறிஸ்ரி வேதநாயகம்

வாழ்வில் உங்களுடனான
இனிய பொழுதுகள்
கண்முன்னே எட்டிப்பார்க்க
கண்களில் கண்ணீர் முட்டி மோதுகின்றது

கடைசிக் கணங்களை
எண்ணி மனதில்
கனமான வலிமட்டும்
கணந்தோறும் கூடுதே.... ஈராண்டு
- நினைவில்

07, அச்சக வீதி,
யாழ்ப்பாணம். (20245) (45.6.7) குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

## திருமதி மனோன்மணி அழகரத்தினம்

(மனோன்மணி ரீச்சர்- ஒய்வுபெற்ற ஆசிரியர், சதானந்தா வித்தியாலயம்)



அளவெட்டி வடக்கு, சதானந்தா ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் தற்போது கிருலப்பனையில் வசித்த வருமாகிய திருமதி மனோன்மணி அழகரத்தினம் கடந்த (14.07.2012) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார். அன்னார் காலஞ்சென்ற செல்லையா அழகரத்தினத்தின் அன்பு மனைவியும், மனோகரரத்தினம் (கனடா), பூபாலரத்தினம் (கனடா), திலகரத்தினம் (கொழும்பு), மாலினி (கனடா), மனோரஞ்சன் (யாழ்ப்பாணம்), நளினி (பிரான்ஸ்), பகவதி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயும், நேசலட்சுமி, சந்திரவதி, செல்வலட்சுமி, சிவநாதன், குகவதனி, கைலைநாதன், சக்திவடிவேல் ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (16.07.2012) திங்கட்கிழமை கல்கிஸ்ஸை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பிற்பகல் 3 மணியளவில் கல்கிஸ்ஸை பொது மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அ. மனோரஞ்சன் (மகன்)
பிரதிப்பிரதம செயலாளர் (நிதி)
வடமாகாணம்.

79/2, றக்கா வீதி,
யாழ்ப்பாணம். (20486) (45.6.7)

# நல்லூர் கந்தன் உற்சவத்தை முன்னிட்டு மாற்று வீதிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 16

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு பக்தர்களின் வசதிகருதி வீதித் தடைகள் மற்றும் மாற்று வீதிகள் என்பவற்றை யாழ். மாநகர சபை அறிவித்துள்ளது. இதன் பிரகாரம் இந்தப் பாதைகள் ஊடாக பிரயாணம் செய்து திருவிழா சிறப்புற நடைபெற உதவுமாறு யாழ். மாநகர மேயர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா கேட்டுள்ளார்.

இதன்பிரகாரம் யாழ். நகரில் இருந்து பருத்தித் துறை வீதிக்குச் செல்வோர், ஆஸ்பத்திரி வீதி ஊடாக கச்சேரி நல்லூர் வீதியை அடைந்து அதனூடாக பருத்தித்துறை வீதியைச் சென்றடைய முடியும். மற்றும் பருத்தித்துறை வீதியில் இருந்து யாழ். நகர் நோக்கி வருவோர் நல்லூர் குறுக்கு வீதியூடாக இராசாவின் தோட்ட வீதியை அடைந்து அதனூடாக ஸ்ரான்லி வீதி வழியாக யாழ். நகரை அடையமுடியும். எனவே இப்பாதையை குறிப்பிட்ட திருவிழாத் தினங்களில் பயன்படுத்துமாறு அவர் மேலும் கேட்டுள்ளார்.

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த உற்சவம் எதிர்வரும் 24ஆம் திகதி ஆரம்பமாகி அடுத்த மாதம் 18ஆம் திகதி சனிக்கிழமையுடன் பூங்காவன உற்சவத்துடன் நிறைவடையவுள்ளது.

(16)

## ஸப்தஸ்வரம் இசை ஒலிப்பதிவு கலையகம்
## (Subthaswaram Music Combosing Studio)



* ஈழத்தின் பிரபலபாடகர்கள் தென்னிந்திய பாடகர்களின் குரல் நயத்துடன் பிரபல இசைக் கலைஞர்களின் இசைநயத்துடன் புதிய பக்திப் பாடல்கள் மெல்லிசைப் பாடல்கள் இசையமைத்து துல்லியமாக ஒலியமைத்துக் கொடுக்கப்படும்.



கைதடி விநாயகர், சுயிற்றசிட்டி முருகன், நயினை நாகம்மன், வட்டுவாகல் சப்தகன்னியர், வற்றாப்பளை அம்மன், சந்திரசேகரபிள்ளையார் ஆலயம் போன்ற பல ஆலயங்களிலும் எமது இசையமைப்பில் உருவான பாடல்கள் சிறப்பு சேர்க்கின்றன.

★ உங்களது இசை ஒலிப்பதிவு தேவைகளுக்கு
இசையமைப்பாளர்:
ஸ்ரீகுகன் ஸப்தஸ்வரம் ஒலிப்பதிவு கலையகம்,
கல்வியங்காடு, T.P : 077 6980573 (20391)(6-7-8)



## வரலட்சுமி நோன்பு



யாழ். வண்ணை ஸ்ரீவேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்

வரலட்சுமி நோன்பு உற்சவம் எதிர்வரும் 27.07.2012 வெள்ளிக்கிழமை காலை 7.00 மணிக்கு வெகு சிறப்பாக நடைபெறவிருப்பதால் நோன்பு நூல் பெறும் அன்பர்கள் முன் கூட்டியே பதிவுகளைச் செய்து கடைசி நேர சிரமங்களைத் தவிர்த்துக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

(சி1575)(6-7-8) ஆதீன மகாசபை

# கண்ணீர் அஞ்சலி



## திருமதி அழகரத்தினம் மனோன்மணி

திரு. அ. மனோரஞ்சன் -பிரதி பிரதம செயலாளர் (நிதி), வடமாகாணசபை அவர்களின் பாசமிகு தாய் அமரர் அழகரத்தினம் மனோன்மணியின் பிரிவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

அ. பிரான்ச்ஸ்
முகாமையாளர்,
மக்கள் வங்கி, பிரதான வீத், யாழ்ப்பாணம்.
(20008)(45-6-7)

# வெளிநாடுகளிற்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

11 Kg நிறையுடைய ஒவ்வொரு பொதிகளுக்கும் 01 Kg க்கு UK 645 /= Germany 735/= France 775/=

மேலும் சகல நாடுகளுக்கும் கட்டணங்கள் குறைக்கப்பட்டுள்ளன. Denmark 775 /= Australia 825/= Holland 825 /=

கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் பொதிகளை உங்கள் வீட்டிலிருந்தவாறே அனுப்பிக்கொள்ளலாம்.

சகல நாடுகளிற்குமான விமான பயணச்சீட்டுக்களை பெற்றுக்கொள்ளலாம்.

குறிப்பு : சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை தினங்களிலும் எமது சேவையினை பெற்றுக்கொள்ளலாம்.

இல.1 பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்தி, யாழ் T.P : 021 222 6113

**Arrul Global Express**
International Courier & Cargo Service

(சி/1505)(6-7-8)

ANDRA DIGITAL IMAGE ஆதரவில் மாபெரும் இசைநிகழ்ச்சி



யாழ்குடா நாட்டில் முதன் முறையாக

உலகத் தமிழர்களை தன் செல்லக்குரலால் வியக்கவைத்த

விஜய்TV ஜீனியர் சுப்பர் சிங்கர் புகழ் பாடகி

அல்கா அஜித்துடன்

மற்றும்பல முன்னணிக் கலைஞர்கள் கலந்து கலக்கும்

அல்காவின் ஆனந்த ராகங்கள்

(பழைய, இடைக்கால & புதிய பாடல்கள்)

இம்மாதம் 21ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6.00 மணிக்கு வடமராட்சி நெல்லியடி மத்திய மகாவித்தியாலய கலையரங்கில்

இம்மாதம் 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3.00 மணிக்கு வீரசிங்கம் மண்டபத்தில்

திருமண அழைப்பிதழ்கள்




ANDRA WEDDING CARDS
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (உதயன் பணிமனைக்கு அருகில்)
Tel : 0212228929, 0217200000
Mob : 0776622981, 0777481696.
திருமண அழைப்பிதழ்களின் சாம்ராட்சியம்

(சி/1511)(6-7-8)

நுழைவுச்சீட்டுக்கள் : 200/= 300/= 500/= மற்றும் VIP

Event Manegement : CEYLON ART CREATION

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பெரும்பாலும் மேகக் கூட்டத்துடன்கூடிய காலநிலை நிலவும்.

## ஆடி அமாவாசை

யாழ்ப்பாணம், ஜூலை 16

வில்லூன்றி புனித தீர்த்தத் திருவிழாவும் ஆடி அமாவாசை விழா நிகழ்வும் நாளை மறுதினம் புதன்கிழமை நடைபெறவுள்ளது. அன்றைய தினம் வில்லூன்றி விநாயகர் ஆலயத்தில் அதிகாலை அபிஷேக ஆராதனைகள் இடம்பெற்று காலை 7 மணிக்கு வசந்த மண்டபப் பூசை நடைபெறும்.

காலை 8.30 மணிக்கு விநாயகப்பெருமான் தீர்த்த வாரி கொண்டருளிய பின் பொது மக்கள் அமாவாசை தீர்த்த சங்கற்பம் செய்து தீர்த்தமாடவும், பிதிர்த் தர்ப்பணங்கள் செய்து கொள்ளவும் முடியும் என ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (ச-16)

# முஸ்லிம் காங்கிரஸ் கட்சி நிபந்தனை விதிக்கவில்லை

### அமைச்சர் சுசில் பிரேம் ஜயந்த தெரிவிப்பு

**தேர்தலில் எப்படிச் செயற்படுவது என்பது தொடர்பில் முஸ்லிம் காங்கிரஸுடன் கொள்கையளவில் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்படவுள்ளது.**

கொழும்பு, ஜூலை16

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேர்தல் தொடர்பிலான கோரிக்கைகள் சிலவற்றையே எம்மிடம் முன்வைத்துள்ளது. மற்றும்படி அரசமைப்பின். 13 திருத்தச் சட்டத்தை நடைமுறைப் படுத்தவோ அல்லது இதர விடயங்கள் குறித்தோ அது எந்த நிபந்தனையையுமே முன்வைக்கவில்லை என்று நேற்றுமுன்தினம் சனிக்கிழமை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தலைவரும், அமைச்சருமான சுசில் பிரேம் ஜயந்த தெரிவித்தார்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுடன், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு செய்து கொள்ளவுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தம் குறித்து கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

கிழக்கு மாகாணசபையில் போட்டியிடவுள்ள வேட்பாளர்கள், தேர்தலில் எப்படிச் செயற்படுவது என்பது தொடர்பில் நாம் முஸ்லிம் காங்கிரஸுடன் கொள்கையளவில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றைச் செய்யவுள்ளோம். ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவது மற்றும் எப்போது அதனைச் செய்வது என்பன பற்றி நாம் இப்போது ஆலோசித்து வருகிறோம்.

அதுதவிர காணி-பொலிஸ் அதிகாரங்களைக் கோரியோ, முஸ்லிம் முதலமைச்சர் பதவி தொடர்பிலோ முஸ்லிம் காங்கிரஸ் எந்த நிபந்தனைகளையும் முன்வைக்கவில்லை. அப்படியான எந்தக் கோரிக்கையும் எங்களிடம் விடப்படவில்லை என்றார்.

இதேவேளை 13ஆவது திருத்த நடைமுறை மற்றும் முஸ்லிம் மக்களின் முக்கியமான பிரச்சினைகள் குறித்தே அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொள்ளப்படவுள்ளதாக அக்கட்சியின் உயர்மட்ட உறுப்பினர்கள் கடந்த நாள்களில் கருத்து வெளியிட்டு வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-சி)

## சமய சந்நிதிகளில்

அல்லைப்பிட்டி புனித கார்மேல் அன்னையின் ஆலயப் பெருவிழாத் திருப்பலி பூசை இன்று திங்கட்கிழமை காலை 6.30 மணிக்கு நடைபெறும்.திருப்பலியைத் தொடர்ந்து திருச்சொரூப பவனியும் இறை யாசீரும் நடைபெறவுள்ளது. (ச-16)

* * *

யாழ்ப்பாணம், நாயன்மார்கட்டு இராஜராஜேஸ்வரி அம்மாள் (பேச்சி) ஆலய வருடாந்தப் பெருந் திருவிழா கடந்த வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. இந்த ஆலயத்தின் தேர்த் திருவிழா எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 5.30 மணிக்கும், தீர்த்தத் திருவிழா மறுநாள் திங்கட்கிழமை காலை 8 மணிக் கும் நடைபெறவுள்ளது. (ச-16)

# லண்டனிலிருந்து வந்த யாழ். தமிழர் வெள்ளவத்தையில் தாக்கப்பட்டார்

### சிங்கள ஓட்டோ சாரதி வெறியாட்டம்

கொழும்பு,ஜூலை16

தமிழர்களுக்கு எதிராக நாட்டில் கட்டவிழ்த்துவிடப்படும் உச்சக்கட்ட அராஜகங்களை உறுதிப்படுத்தும் வகையில் தாக்குதல் சம்பவமொன்று வெள்ளவத்தைப் பகுதியில் அண்மையில் இடம்பெற்றுள்ளது.

சிங்கள ஓட்டோ சாரதியொருவரால் 37 வயதுடைய தமிழர் ஒருவர் இரும்புக் கம்பியால் சரமாரியாகத் தாக்கப்பட்டு படுகாயமடைந்துள்ளார். சிங்கள மொழி தெரியாத காரணத்தினால் குறித்த தமிழருக்கு இந்த அவலம் நேர்ந்துள்ளது.

பெரும்பான்மையின ஓட்டோச் சாரதி ஒருவரால் தான் தாக்கப்பட்ட சம்பவத்தை உதயனின் சகோதரப் பத்திரிகையான 'சுடர் ஒளி'யிடம் குறித்த நபர் தெரியப்படுத்தினார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட நான் அண்மைக்காலமாக பிரிட்டனில் வசித்து வருகிறேன். பிரிட்டனிலிருந்து இலங்கை வந்து, கடந்த வியாழக்கிழமை அதிகாலை ஒரு மணியளவில் வெள்ளவத்தைப் பகுதி வீதியொன்றிலிருந்து, 37ஆம் ஒழுங்கைக்குச் செல்வதற்காக மீற்றர் ஓட்டோ (தூர அளவீட்டுக் கருவி கொண்ட ஓட்டோ) ஒன்றில் பயணித்தேன்.

குறித்த இடத்திலிருந்து 200 மீற்றர் தூரத்திலுள்ள தனது தங்குமிடத்தை அடைந்தவுடன், ஓட்டோவிலுள்ள தூர அளவீட்டுக் கருவியில் 99 ரூபா காண்பிக்கப்பட்டுள்ளது.

ஓட்டோ சாரதியிடம் நான் நூறு ரூபா பணத்தைக் கொடுக்க, தனக்கு நூறு ரூபா வேண்டாம் ஆயிரத்து ஐந்நூறு ரூபா வேண்டுமென சிங்களத்தில் கேட்டு மிரட்டினார். நான் ஆயிரத்து ஐந்நூறு ரூபா பணம் தரமுடியாதென கூற, உடனே அருகிலிருந்த இரும்புக் கம்பியொன்றை எடுத்து எனது தலை, கை, இடுப்பு முதலான பகுதிகளில் அவர் கடுமையாகத் தாக்கினார்.

ஓட்டோ சாரதியின் கடுமையான தாக்குதலுக்கு உள்ளான நான் வலிதாங்கமுடியாமல் கத்தினேன். அப்போது அருகிலுள்ள மாடிக் குடியிருப்பில் இரவுநேர பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த நபரொருவர் அவ்விடத்திற்கு ஓடி வந்தார். அவர் ஓடி வரும் சத்தம் கேட்டவுடன் ஓட்டோ சாரதி ஓட்டோவில் ஓடி மறைந்துவிட்டார். அதன் பின்னர், சம்பவ இடத்திற்கு வந்த நபர் தங்குமிட உரிமையாளருக்குத் தெரியப்படுத்தினார். தங்குமிட உரிமையாளரின் உதவியுடன் டெல்மன் வைத்திய சாலையில் சிகிச்சைபெற்று இருப்பிடம் திரும்பினேன்.

பொலிஸில் முறைப்பாடு செய்வது குறித்து சட்டத்தரணி ஒருவருடன் கலந்தாலோசித்து வருகிறேன் - என்றார். (ச-சி)


## வீடு காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், கல்வியங்காட்டுச்சந்திக்கு அண்மையில் சந்திரசேகரப்பிள்ளையார் கோயிலுக்கு அருகில் விநாயகர் வீதியில், 02 பரப்புடன் கூடிய வீடும், அதற்கு அண்மையில் 02 பரப்பு வெற்றுக்காணியும் விற்பனைக்குண்டு.

(20490)(6-7-8) தொடர்பு : 077 2671109

## மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

எடுத்து இரண்டு மாதங்கள் கொண்ட புதிய கிளைமோர் மோட்டார் வண்டி விற்பனைக்குண்டு

தொடர்பு: 075 6365 879, 077 6624 396

## பணிப்பெண் தேவை

யாழ்ப்பாணம் வீட்டில் தங்கியிருந்து வீட்டுவேலை செய்யக்கூடிய 50 வயதுக்குட்பட்ட பணிப்பெண் தேவை. சம்பளம்: ரூபா 10250 /=

தொடர்பு: 077 672 6422

(20221) (45.6.22)

## வீடு வாடகைக்கு

பொற்பதி வீதி, கோண்டாவிலில் (5 அறை, பெரிய Hall, சமையலறை, Attached bathroom, வாகனத்தரிப்பிடங்கள் மற்றும் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. அரச திணைக்களங்கள், தனியார் நிறுவனங்களிற்கு முன்னுரிமை வழங்கப் படும்.

தொடர்பு : 077 9007481

(20483)(6-7-8)

## தேவை

புடைவை நிலையத்துக்கு விற்பனையில் அனுபவமுள்ளவர்கள் (பெண்கள் மட்டும்) உடன் தேவை. சுன்னாகம் அதனை அண்டிய பகுதியில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு: 071 1191121, 071 6199379

## விற்பனைக்குண்டு 270 - XXXX

மேற்குறிப்பிட்ட தொடரிலக்கமுடைய உழவு இயந்திரம் உடன் விற்பனைக்கு உண்டு. தேவைப்படுவோர் கீழ்வரும் தொலைபேசி இலக்கத்துடன் திங்கள் முதல் வெள்ளி வரையான அலுவலக நாள்களில் காலை 8.30 - 4.30 வரை தொடர்பு கொள்ளவும்.

021 2221898, 021 2221900

Trade Finance And Investments Plc

(சி/1503)(6-7-8)

## பணிநிலை வேண்டுகை

கணினி வடிவமைப்பாளர் (ஆண்/பெண்)
Graphic Designer

கணினி தட்டெழுத்தாளர் (ஆண்/பெண்)
Computer Typesetter

முன்னனுபவம் உள்ளவர்கள் மட்டும்

விண்ணப்பதாரிகள் ஜூலை 16, 17 ஆம் திகதிகளில் காலை 10.00 மணி முதல் பி.ப. 2.00 மணிவரை நேரில் வரவும்.

## விவாஹாஸ்

இல. 273,275 மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(ஆஸ்பத்திரி வீதி பின்புறம்)

## காணி விற்பனைக்கு உண்டு

இல. 30/2, கனகரட்ணம் வீதி, அரியாலையில் 03 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு : 077 4046272, 021 3217918

(20404)(6-7-8)

## கடைச்சல் (மரம்) தொழிலாளி தேவை

அருள் மாதா தச்சு தொழிலகம்
இல. 49, உதயநகர் கிழக்கு,
கிளிநொச்சி.
தொடர்பு: 077 5313 904,
077 9399750,
077 1000 012.

## இந்திய சாஸ்திரியார் வருகை

யாழ்ப்பாணப் புண்ணிய பூமிக்கு மீண்டும் வருகை தந்துள்ளார்
ஓம் சக்தி அருள் வாக்கு பெற்ற பரம்பரை ஜோதிடர்
S.N. குமாரசாமி
கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத்தடை, கல்வித்தடையா, குழந்தை பாக்கியம் மற்றும் புதிய தொழில் தொடங்க வேண்டுமா? தொழில் முன்னேற்றம் இல்லையா, குடும்பப் பிரச்சினையா ? வெளிநாடு செல்லத்தடையா ?, மன உளைச்சலா ? எந்தப்பிரச்சினைக்கும் நேரில் சந்திக்கவும்.
(காலை 9 மணி முதல் மாலை 5 மணிவரை)
பீப்பிள்ஸ் இன் (PEOPLE INN)
இல.112/1, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்
(பிள்ளையார் [illegible] முன்பாக)
T.P: 072 6816681, 0726816691


## மரண அறிவித்தல்

### ஜெயபூமணி அரியரட்ணம்



மலேசியா இபோவைப் பிறப்பிடமாகவும், இலக்கம் 56 விதானையார் வீதி சுண்டுக்குளியை, வசிப்பிட மாகவும் கொண்ட ஜெயபூமணி அரியரட்ணம் (12.07.2012) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஜோண் டேவிற் குணரட்னம் - பாக்கியம் சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சாமுவேல் அரியரட்ணத்தின் அன்பு மனைவியும், ஜோர்ஜ் ஜெயக்குமார் (லண்டன்), றெக்ஸ், ஜீவா, சாந்தி (லண்டன்), ராஜ்குமார் (போதகர் A.O.G சாவகச்சேரி), ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜோணபார்க் (லண்டன்), சிசிலியா கனகமலர், செல்லையா மகாலிங்கம் (லண்டன்), கோபி பிரதீபா ஆகியோரின் மாமியும், நிவேதினி, நிர்மல், திலீபன், திசாந்தி பிறின்ஸ், ஜோய், ஜெரோமி, ஜெரி, ஜொனி, ஜெரின் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை இன்று (16.07.2012) திங்கட்கிழமை 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொட்டடி கிறிஸ்தவ சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.56,
விதானையார்வீதி, சுண்டுக்குளி. (20465(14.3)

தகவல்:
ஜீவா
ராஜ்குமார் (மகன்மார்)


## பணிநிலை வேண்டுகை

## VACANCY @

Infotech COMPUTER EDUCATION

பின்வரும் பதவிகளுக்குத் தகைமையுடையோர் வேண்டப்படுகின்றனர்

1) கணினி பயிற்றுவிப்பாளர் ஆண்/பெண்
2) ஆய்வுகூட உதவியாளர் பெண்
3) காரியாலய உதவியாளர் பெண்
4) வெளிக்கள உத்தியோகஸ்தர் ஆண்/பெண்

கற்பிக்கக் கூடிய தகுதியும் முன்னனுபவமுடையோர் தமது சுயவிபரக்கோவையினை தயார்செய்து தபால் உறையின் இடது பக்க மேல்முனையில் நீங்கள் விண்ணப்பிக்கும் பதவியினை குறிப்பிட்டு 24/07/2012 திகதிக்கு முன்னர் கிடைக்குமாறு கீழ்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

Note: கணினித்துறையில் ஆர்வமுடைய அனுபவமற்றவர்களும் விண்ணப்பிக்கலாம், பயிற்சிகள் வழங்கப்படும்.

Infotech Computer Education
03, Ramanathan Road, Kaladdy Junction, Jaffna. T.P No: 021 4922813

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண் - பெண் குணங்கள்

சுயமரியாதையை வளர்த்து இறைவன் ஒருவனுக்கே அடிபணிவேன் என்ற மனப்பக்குவம் வந்தே ஆக வேண்டும். உனது உரிமை எனது உரிமையைப் பாதிக்கக் கூடாது என்பது பொதுவான சித்தாந்தம். வாழ்வோம் வாழ விடுவோம் இதுதான் நம் கொள்கையாக மாற வேண்டும்



தவறு செய்வதற்கு அச்சம் இருப்பதுதானே முறை. நாணப்படுவதற்கு நாணப்படுவதுதானே உயர்வு 'அஞ்சுவது அஞ்சாமை பேதமை. இது ஆணுக்கும் பெண்ணுக்கும் அவசியம் தேவை . வீரம் நிறைந்தவனாக ஆண் மட்டும் இருந்தால் போதுமா? தனக்கு வரும் ஆபத்தை எதிர்கொள்ள ஒரு பெண்ணுக்கும் அஞ்சாமை அவசியம் தேவை . குணங்களில் ஆணுக்கும் பெண்ணுக்கும் சில வேறுபாடுகள் இருந்தாலும் இக்காலத்தில் பலவகையான குணங்களை ஆணும் பெண்ணும் அவசியம் பெற்றுக்கொள்ள தேவைப் படுகின்றன.

அனைத்துக்கும் மேலாக நல்ல காரியங்களுக்காக ஆணும் பெண்ணும் அனுசரித்து போகும் நிலை அவசியம் தேவைப் படுகின்றது. ஆணின் காலில் விழும் பெண்ணின் குணமும் பெண்ணின் காலில் விழும் ஆணின் குணமும் அவசியம் அழிக்கப் படவேண்டும். சுயமரியாதையை வளர்த்து இறைவன் ஒருவனுக்கே அடிபணிவேன் என்ற மனப்பக்குவம் வந்தே ஆக வேண்டும். உனது உரிமை எனது உரிமையைப் பாதிக்கக் கூடாது என்பது பொதுவான சித்தாந்தம். வாழ் வோம் வாழ விடுவோம் இதுதான் நம் கொள்கையாக மாற வேண்டும்.

பெண்கள் ஒருபோதும் தவறுகள் செய்ய மாட்டார்கள் அப்படியே அவர்கள் தவறு செய்ய நேர்ந்தால் அது ஆண்களால் தூண்டப் பட்டவைகளாகவே இருக்க முடியும். பெண்கள் மனது சபலம் வாய்ந்தது மாற்றம் நாடுவது. ஆண்கள் மனது நிலை கொண்டது விரும்பியதை அடைய எந்த வழியும் கையாளும் குணம் கொண்டது.

பெண்கள் புகழப்படுவதை விரும்புவார்கள் புகழ்ச்சிக்கு அடிபணிவார் கள். ஆண்கள் புகழப்படுவதை விரும்பினாலும் அதில் ஒரு சந்தேகக் கண் இருக்கும்.

பெண்களுக்கு மூட நம்பிக்கையின் மீது நம்பிக்கை வந்தால் அதில் முழுமை இருக்கும் அதனால்தான் சாமியார்கள் கை ஓங்கி நிற்கின்றது , ஆண்களின் மூட நம்பிக்கை சந்தேகக் கண்கொண்டது.

பெண்கள் மனம் அலை பாயாது ஒரு காரியத்தில் இறங்கினால் அதில் தங்கள் கவனம் சிறப்பாக இருக்கும் அதன் காரணமாகவே பெண்கள் படிப்பில் அதிக மதிப்பெண்கள் வாங்க முடிகின்றது. ஆண்களுக்கு அறிவு இருந்தாலும் எண்ணங்கள் சிதறிவிடுகின்றன.

பெண்கள் வீட்டில் தலைமைப் பொறுப்பில் இருந்தாலும் வெளியில் அடக்கியே தன்னை காட்டிக் கொள்வார்கள். ஆண்கள் வெளியே தலைமைப் பதவிக்கு ஆசைப்பட்டாலும் வீட்டில் சித்தாளாகவே இருந்து நினைத்ததை முடிக்க விரும்புவார்கள்.



பத்மநாதன்
ஷஜீபனா
கொடிகாமம்.

# பெண்களுக்கு

## சத்துரு அழகு

இன்றைய சமூகத்தில் பெண்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் பல இந்தப் பிரச்சினைகள் பலவற்றை யும் பெண்களே தமக்குத்தாம் தேடிக் கொள்கிறார்கள். பின்னர் தமது நிலையை எண்ணி தமக்குள் தாமே அழுதுகொள்கிறார்கள். அதாவது பெண்கள் என்றால் அவர்களிடம் ஏதோ ஒரு அழகு எப்படியும் காணப்ப டும். ஆனால் தற்போதைய காலகட்டத்தில் பெண்கள் நாவநாகரிகங்களுக்கும், தொலைக்காட்சியில் ஒளிப் பரப்பப்படும் விளம்பரங்களுக்கும் அடிமையா கும் நிலை காணப்படுகின்றது. அழகாயிருக்கும் தம்மைத் தாமே மேலும் அழகுபடுத்தும் போதுதான் அவர்க ளுக்கு பிரச்சினைகள் ஆரம்பமாகின்றன.

சும்மா ஒரு பெண் இருந்தாலே அவளைச் சீண்டுவதற்கென்று ஒரு கூட்டம் இருக்கும். இதிலும் குட்டைப்பாவாடைகள் ,கண்ணுக்கு மை,மின்னும் பொட்டுக்கள் என மேலும் அழகுபடுத்தினால் அவளை யாராவது சீண்டாமல் விடுவார்களா? இதை முறையாகச்சொல்வதானால் பெண்களுக்கு அதிக பிரச்சினை ஏற்படுவதற்கு பெண்களே காரணமாகின்ற னர். பெண்களே நீங்கள் உங்களை அழகுடுத்துவதை விட்டு கல்வி கற்று ஒழுக்கத்துடன் வாழ்வீர்களே யானால் உங்களால் வீடும் , நாடும், உலகமும் பய னுற்று அழகுபெறும்

திலகத்துக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புவோர்
"திலகம்",
உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள் .

# ஒழுக்கத்தை

## இலட்சியமாகக் கொள்ள வேண்டும்



ஆண்கள்தான் சேற்றைக் கண்டால் மிதிப்பார்கள். தண்ணீரைக் கண்டால் கழுவி விடுவார்கள்.. ஆனால், பெண்கள்.... கையெடுத்து வாழ்த்தும்படி இருக்க வேண்டும். கையைப் பிடித்து இழுக்கின்ற அளவுக்கு அவளது உடை, நடை பாவனை இருக்கக் கூடாது. பெண் சார்பாக பல சாதகமான விடயங்கள் இருப்பதால் அவற்றை இவள் தான்தோன்றித்தனமாகப் பயன்படுத்திக் கொள்வதையும் குறைக்கவேண்டும். அத்துடன் செயற்பாடுகள், நடத்தைகள், சமூக விரோத செயல்களை, வன்முறைகளைத் தூண்டுவனவாக அமையக் கூடாது. பெண் என்பவள் குடும்பத்தையும் சுற்றாடலையும் சீரழிக்கக் கூடிய ஒரு நாசகாரச் சக்தியாக இருக்கக் கூடாது. எல்லாவற்றுக்கும் ஒரு சுய கட்டுப்பாட்டை அவளே நிர்ணயித்துக் கொள்ள வேண்டும். ஒழுக்கமான இலட்சியம் வேண்டும். குடும்பத்தின், சமூகத்தின், நாட்டின் கட்டுக்கோப்புக்கு அச்சாணியாக இருப்பவள் பெண்தான். அனைத்து மதங்களும் கட்டுப்பாட்டையும் ஒழுக்கத்தையுமே போதிக்கின்றன. சுதந்திரம், உரிமை, புரட்சி என்று தான்தோன்றித்தனமாக நடப்பதை விட்டு நல் வழிகாட்டல்களைப் பின்பற்றி நடத்தல் மிக அவசியம். உரிமை கேட்கும் விடயம் என்றாலும் அதற்குப் பொறுப்புணர்வு தேவை. நாளைய எமது சந்ததிகள் மதிப்பதாகவும் இருக்க அமைய வேண்டும்.

# தாய்

உயிர்ப்பும் உயர்வும்
உயர்ந்து தந்த
உண்மை உலகு!

இயங்கியல் வாழ்வு
இலங்கிடும் வழியில்
கலங்காமல் காக்கும் கண்மணி!

குருதியைப் பாலாக்கி
நிறைவான உணவாக்கி
உறுதியாய் வளர்த்த உத்தமி!

வண்ணத் தாலாட்டை
வகையிலா மொழிக்கூற்றை
தேனாச் சொரியும்
கானத் தாய்!

சித்தம் குளிர்ந்து
முத்தம் மலர்ந்து
வித்தகம் தரும்
வியத்துலகு!

அழியாத திருவாகி
அன்பின் வழியாகி
விழியாய் விஞ்சிடும்
மொழிகடந்த அகராதி!

மானுடர் அரிதெனும்
மாகவி ஔவையின்
காவியம் மெய்பித்த
சாத்திர கர்த்தா!

மென்மைத் தண்மதியாய்
மேன்மை நுண்மதியாய்
பெண்மை காக்கின்ற
பேரழகு!

கவிகளில் முழுதாய்
நவின்றிட இயலாய்
புவிமேன்மையான
அபிநவம்!

காசினி
போற்றும் நேசகியே,
மாசற்ற மகுடமே,
மங்காத அமலமே,
பாச ஆயிழையே,
பாங்கற்ற
அஞ்ஞையே-உனை
பேச மொழியேது...
பேசாது வழியேது..?



மானியூர் ரட்ணேஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திடீரென வீசிய கடும் காற்றால் வீடுகளின் கூரைகள் பறந்தன

## மருதங்குளத்தில் நேற்று பிற்பகல் பரபரப்பு



*கிளிநொச்சி, ஜூலை 16*
*கிளிநொச்சி கண்டாவளை மருதங்குளப் பகுதியில் நேற்று பிற்பகல் திடீரென வீசிய கடும் காற்றால் சில வீடுகளின் கூரைகள் முற்றாகச் சேதமடைந்தன. அத்தோடு வீடுகளிலிருந்த உடைமைகளும் பாதிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.*

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவின் கீழுள்ள ஊரியான் கிராம அலுவலர் பிரிவின் மருதங்குளம் பகுதியில் நேற்று பிற்பகல் 3 மணியளவில் பலத்த காற்றுடன் கூடிய மழை பெய்துள்ளது. கடுமையாக வீசிய திடீர் காற்றால் சில வீடுகள் பலத்த சேதத்துக்கு உள்ளாகின. அத்துடன் உடைமைகளுக்கும் பாதிப்பு ஏற்பட்டது.

மருதங்குளம் பகுதியில் கடந்த 2006 ஆம் ஆண்டு 'நேப்' திட்டத்தின் கீழ் 3 லட்சத்து 25 ஆயிரம் ரூபா செலவில் வழங்கப்பட்ட வீடு போர் காரணமாக அரைகுறையாக அமைக்கப்பட்டிருந்தது.

பின்னர் 2010 ஆம் ஆண்டு மீண்டும் பல்வேறு சிரமங்களின் மத்தியில் வங்கியிலும், உறவினர்களிடமும் கடன்களைப் பெற்று, இராசு இராஜேஸ்வரி என்ற விதவைப் பெண் இந்த வீட்டு வேலைகளைப் பூர்த்தி செய்திருந்தார். இந்த நிலையில் நேற்று வீசிய கடும் காற்று அவரது வீட்டுக் கூரையை பல மீற்றர் தூரத்துக்கு அப்பால் தூக்கி வீசியது. இதன்போது வீட்டில் இருந்தவர்கள் மயிரிழையில் உயிர் தப்பியுள்ளனர். கூரை பறந்து போனதால் வீட்டில் இருந்த உடைமைகள் யாவும் மழையில் நனைந்து சேதமடைந்துள்ளன.

அருகிலிருந்த அவரது மகளது வீட்டின் கூரையும் சேதமடைந்துள்ளது.

இதேபோன்று மருதங்குளம் பகுதியில் உள்ள அந்தோனிப்பிள்ளை டக்ளஸ் என்பவரின் வீடும் காற்றினால் சேதமடைந்துள்ளது.

இதைவிட பன்னங்கண்டி, சிவபுரம் ஆகிய பகுதிகளிலும் உள்ள தற்காலிக வீடுகள் பலவும் காற்றினால் சேதமடைந்துள்ளதாகத் தெரியவருகிறது. (ங-6)

# சீரான பஸ்சேவை இல்லாததால் 300 குடும்பங்கள் பாதிப்பு

துணுக்காய், ஜூலை 16
மாந்தை கிழக்குப் பிரதேசத்திலுள்ள ஒட்டங்குளம் பகுதிக்குச் சீரான பஸ் சேவை இடம்பெறாததால் 300 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் போக்குவரத்துச் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றன.

சீரில்லாத பஸ் சேவையால் இங்குள்ள விவசாயிகள் தமது உற்பத்திப் பொருள்களை வேறு இடங்களுக்கு எடுத்துச் சென்று விற்பனை செய்ய முடியாத நிலையிலுள்ளனர்.

பாடசாலை மாணவர்கள் தமது உயர்தரக் கல்வியைக் கற்பதற்குச் சுமார் நான்கு கிலோ மீற்றர் தொலைவிலுள்ள மல்லாவி நகருக்குப் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் சென்று வருகின்றனர்.

இங்குள்ள ஒட்டங்குளம், பொன்னகர், பூவரசங்குளம் ஆகிய கிராமங்களுக்குத் தினமும் நான்கு தடவைகளாவது பஸ் சேவை இடம்பெறுமாயின் கிராம மக்கள் அதிக பயனைப் பெறுவர்.

**பாடசாலை மாணவர்கள் தமது சுமார் நான்கு கிலோ மீற்றர் தொலைவிலுள்ள மல்லாவி நகருக்குப் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் சென்று வருகின்றனர்.**

தற்போது ஒட்டங்குளம் பகுதியிலிருந்து காலை 7.30 மணியளவில் புறப்படும் தனியார் பஸ் வவுனியா சென்று மீண்டும் பிற்பகல் 4.30 மணியளவில் ஒட்டங்குளம் வருகின்றது. இதற்கு இடைப்பட்ட நேரத்தில் பஸ்சேவைகள் இடம்பெறுவதில்லை. இதனால் கிராம மக்கள் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். (க-415)

# உள மருத்துவ நூல் வெளியீடு

கிளிநொச்சி, ஜூலை 16
உள மருத்துவ நிபுணர் மருத்துவர் எஸ். சிவதாஸ் எழுதிய நலமுடன் (பாகம்-4) நூல் வெளியீட்டு விழா இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் கிளிநொச்சி மத்திய கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக உலக உள மருத்துவ சங்கத்தின் தென்னாசிய வலயப் பிரதிநிதியும் இந்திய உள மருத்துவர் சங்கத் தலைவருமான பேராசிரியர் மு.திருநாவுக்கரசு கலந்துகொள்வார். சிறப்பு விருந்தினர்களாக ஓய்வுபெற்ற வடக்கு மாகாணப் பிரதிப் பிரதம செயலாளர் தி.இராசநாயகம், கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்வர்.

இந்த நூலை வவுனியா மாவட்ட வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி வெளியிட்டு வைக்க கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் பெற்றுக் கொள்வார்.

போரால் பாதிக்கப்பட்ட வன்னிப் பகுதியில் உள மருத்துவ நூல் வெளியீடு நடைபெறுவது மிகவும் வரவேற்கத்தக்க விடயம் எனச் சமூக ஆர்வலர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். (க-405)

# சரஸ்வதி சிலை திறப்பு

துணுக்காய், ஜூலை 16
யோகபுரம் மகாவித்தியாலயத்தின் பொன்விழாவை முன்னிட்டு சரஸ்வதி சிலை, பிரதான நுழைவாயில், நுண்கலை மண்டபம், பெயர்ப் பலகை என்பனவும் திறந்து வைக்கப்பட்டதாகப் பாடசாலையின் பழைய மாணவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

2002 ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரண தரத்தில் கல்வி கற்ற பழைய மாணவர்களால் சேகரிக்கப்பட்ட நிதியின் உதவியுடன் அமைக்கப்பட்ட சரஸ்வதி சிலையை இந்தப் பாடசாலையின் முன்னாள் அதிபரும், தற்போதைய கொக்குவில் இந்துக் கல்லூரியின் உப அதிபருமான திருமதி க.கிருஷ்ணபிள்ளை திறந்து வைத்தாரெனவும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (க)

# வவுனியா தமிழ் ம.ம.வித்தியாலய அபிவிருத்திக்கு விசேட குழு தெரிவு

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தை அபிவிருத்தி செய்வதற்கெனப் புதிய நிர்வாகம் ஒன்றுதெரிவு செய்யப்பட்டுள்ளது. பாடசாலையின் அபிவிருத்தி, அடிப்படை வசதிகள் என்பவற்றை மேம்படுத்தல் தொடர்பான கலந்துரையாடல் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஐயாத்துரை மண்டபத்தில் இடம்பெற்ற போதே இதற்கென விசேட குழு ஒன்று தெரிவுசெய்யப்பட்டது.

இதன் தலைவராக வித்தியாலய அதிபர் எம்.எஸ் பத்மநாதன் தெரிவு செய்யப்பட்டார். உப தலைவராக ஜெ.கார்த்திகேயனும், செயலாளராக கே. அமலனும், பொருளாளராக செ. அ.பாலரத்னாவும் உப செயலாளராக க.சிவஞானமும் தெரிவு செய்யப்பட்டனர்.

# "ஆளுநர் சொற்படிதான் சந்தையின் கட்டடத்தை அமைக்க வேண்டும்"

## சந்தைக் கட்டட அடிக்கல் நடும் விழாவில் வர்த்தக சங்கத் தலைவர் இடையூறு

கிளிநொச்சி, ஜூலை 16
கிளிநொச்சியின் புதிய சந்தைக் கட்டடத்தொகுதி அடிக்கல் நடும் விழாவில் கரைச்சிப் பிரதேச சபைத் தலைவரை தாக்க முயன்றதுடன் விழாவையும் இடைநிறுத்த முயற்சித்துள்ளார் கிளிநொச்சி வர்த்தக சங்கத் தலைவர். இதனால் இந்த விழாவில் பெரும் சலசலப்பு ஏற்பட்டபோதும் திட்டமிட்டபடி அடிக்கல் நடப்பட்டது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது:

கிளிநொச்சியில் வர்த்தகர்கள் அனைவருடனும் கலந்து ஆலோசித்த பின்னர் புதிய சந்தைக் கட்டடத் தொகுதி ஒன்றை அமைக்க பிரதேச சபை முடிவெடுத்திருந்தது.

கிளிநொச்சி மக்களின் நன்மையைக் கருத்தில் கொண்டு முன்னர் சந்தை அமைந்திருந்த அதே இடத்திலேயே புதிய சந்தையையும் அமைக்க ஏற்பாடாகியிருந்தது. இதற்கான ஏற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டு அடிக்கல் நடும் விழா நேற்று நடைபெற்றது.

இதன்போது கிளிநொச்சி வர்த்தக சங்கத் தலைவர் விழாவுக்கு இடையூறு விளைவிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகத் தெரியவருகின்றது.

"பிரதேச சபையின் திட்டத்தின்படி கட்டடங்கள் எவையும் அமைக்க முடியாது. ஆளுநரின் திட்டத்தின்படியே அமைக்க வேண்டும்'' என்று தெரிவித்தே அவர் இவ்வாறு இடையூறு செய்துள்ளார். ஆனால் "பிரதேச சபையின் திட்டப்படியும், பிரதேச சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர், பொதுச் சுகாதாரப் பரிசோதகர் மற்றும் நகர திட்டமிடலுக்கும் ஏற்பவே கட்டடப்பணி மேற்கொள்ளப்படுகிறது'' என்று கரைச்சிப் பிரதேச சபைத் தலைவர் நா.வை.குகராசா தெரிவித்துள்ளார்.

ஆனால் அதனை ஏற்றுக் கொள்ளாத வர்த்தக சங்கத் தலைவர் தனது முடிவிலேயே பிடிவாதமாக நின்றதுடன் கரைச்சிப் பிரதேச சபைத் தலைவரை தகாத வார்த்தைகளால் ஏசியபடி தாக்கவும் முயற்சித்துள்ளார். எனினும் பின்னர் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

அதன் பின்னர் திட்டமிட்டபடி விழா நடைபெற்றது.

இந்தச் சம்பவம் குறித்து கரைச்சிப் பிரதேச சபைத் தலைவர் கருத்துத் தெரிவிக்கும்போது -

அடிக்கல் நடும் நிகழ்வில் கலந்து கொண்ட வர்த்தகர் சங்கத் தலைவர் அநாகரிகமான வகையில் நடந்து கொண்டுள்ளார். அவர் என்னையும், பிரதேச சபையின் உபதலைவரையும், உறுப்பினர்களையும் அவமானப் படுத்தியுள்ளார்.

ஆனால் நாம் திட்டமிட்டபடி அடிக்கல்லை நட்டுள்ளோம். சந்தையின் கட்டட வேலைகளும் எமது திட்டத்தின்படியே பூர்த்தியாகும்.

கிளிநொச்சி வர்த்தகர்களின் பூரண ஆதரவு பிரதேச சபைக்கு உண்டு. இதனை வர்த்தகர்களில் 90 வீதமானோர் இந்த அடிக்கல் நடும் நிகழ்வில் கலந்து கொண்டமையும், எமது செயற்பாடுகளுக்குத் தமது ஒத்துழைப்பை வர்த்தகர்கள் அனைவரும் நல்கியமை புலப்படுத்துகின்றது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இது தொடர்பாக வர்த்தக சங்கத் தலைவருடன் தொடர்பு கொள்ள முயன்றபோதிலும் அது முடியவில்லை. (ங-க-6-301-426)

# மின்சார மயானம் திறக்கப்படவில்லை

வவுனியா, ஜூலை 16
வவுனியா பூந்தோட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள மின்சாரத்தால் தகனம் செய்யும் மயானம் எதிர்வரும் ஓகஸ்ட் மாதமே திறந்து வைக்கப்படவுள்ளதாக வவுனியா நகரசபை உறுப்பினர் எஸ்.இராசேந்திரன் (ரஞ்சன்) தெரிவித்தார்.

பல லட்சம் ரூபா செலவில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள இந்த மின்சாரத்தில் தகனம் செய்யும் மயானமானது மக்களின் பயன்பாட்டுக்கென நேற்றுத் திறந்து வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. ஆனால் தவிர்க்க முடியாத காரணத்தால் அது திறந்து வைக்கப்படவில்லை. அடுத்த மாத முற்பகுதியில் திறந்து வைக்கப்படவுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை இந்த மயானம் பல லட்சம் ரூபா செலவில் புதிதாக அமைக்கப்பட்டுப் பல மாதங்கள் கடந்த நிலையில் இதன் திறப்பு விழா இழுத்தடிக்கப்பட்டு வருவதால் பொது மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர். (க-400)

# கிளிநொச்சி மாவட்டத்தில் பயிற்சி நெறிகள்

கிளிநொச்சி, ஜூலை 16
தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையால் கிளிநொச்சி மாவட்டத்தில் பின்வரும் பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

கணினி அனுமதிப்பத்திர கற்கைநெறி 3மாதம் (தகைமை - க.பொ.த. சாதாரணதர சித்தி), , தாதிய உதவியாளர் 6 மாதம் (தகைமை - க.பொ.த. சாதாரணதர சித்தி), கணினி வன்பொருள் திருத்துநர் 6 மாதம் (தகைமை - தரம் -9 சித்தி), வீட்டு மின் இணைப்பு, நீர்க்குழாய் பொருத்துதல், குளிரூட்டி திருத்துதல் 6 மாதம் (தகைமை தரம் 8 சித்தி), பயிற்சி நெறிகளின் பின் 6 மாதகால வெளிக்களப் பயிற்சி வழங்கப்படும்.

மேற்படி கற்கை நெறிகளுக்கான புதிய பிரிவுகள் நாளை மறுதினம் 18 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளன. ஆர்வமுள்ளவர்கள் தங்கள் சுயவிவரம் அடங்கிய விண்ணப்பங்களை தேசிய பயிலுநர் கைத்தொழிற்பயிற்சி அதிகார சபை, மாவட்ட அலுவலகம், ஆனந்தபுரம், கிளிநொச்சி எனும் முகவரிக்கு இன்றைய தினம் சமர்ப்பிக்க வேண்டும். (க-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வட மாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான தடகளப் போட்டி அண்மையில் யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெற்றது. இதில் 17 வயது உயரம் பாய்தல் போட்டியில் மாகாண ரீதியில் முதலிடம் பெற்ற யாழ்.இந்துக் கல்லூரி மாணவன் செந்தூரன் அபாரமாக இலக்கைப் பாய்ந்து கடப்பதை படத்தில் காணலாம். (ங-23)

# சித்திவிநாயகரை வீழ்த்தி காலிறுதிக்குள் காந்தி வி.க.



யாழ்ப்பாணம், ஜூலை 16

இருபாலை அம்மன் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்துகின்ற அணிக்கு ஆறுபேர் கொண்டதும், ஐந்து பந்துப் பரிமாற்றங்கள் கொண்டதுமான கிரிக்கெட் போட்டியின் காலிறுதிக்கு தாவடி காந்தி விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றுக் கொண்டது.

முதலாம் சுற்றில் நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து விளையாடிய தாவடி காந்தி விளையாட்டுக் கழக அணி இரண்டாம் சுற்றில் கோண்டாவில் சித்தி விநாயகர் அணியை எதிர்த்து விளையாடியது. இந்தப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய தாவடி காந்தி விளையாட்டுக் கழக அணி நிர்ணயிக்கப்பட்ட ஐந்து பந்துப்பரிமாற்றங்களில் ஒரு இலக்கினை மாத்திரம் இழந்து 60 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. இதில் துவாரகன் 30 ஓட்டங்களையும், சிவகஜன் 20 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர். பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கோண்டாவில் சித்தி விநாயகர் அணி நிர்ணயிக்கப்பட்ட 5 பந்துப் பரிமற்றங்களில் 4 இலக்குகளை இழந்து 30 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. தாவடி காந்தி விளையாட்டுக் கழகத்தின் சார்பில் சுஜீபன் 3 இலக்குகளை வீழ்த்தினார். இந்தப் போட்டியில் வென்றதன் மூலம் தாவடி காந்தி விளையாட்டுக் கழக அணி இறுதி ஆட்டத்திற்குத் தகுதி பெற்றது. (ங-130)

# சென்றல் முக்கோண வெற்றிக்கிண்ண துடுப்பாட்ட சுற்றுப் போட்டி ஆரம்பம்



ஜொலிஸ்ரார் வி.க.



யாழ். பல்கலைக்கழக அணி



கே.ஸி.ஸி. ஸி.வி.க.

யாழ்ப்பாணம்,ஜூலை 16

யாழ்.சென்றல் விளையாட்டுக் கழகம் 2 ஆவது ஆண்டாக நடத்தும் முக்கோண வெற்றிக் கிண்ணத்துக்கான துடுப்பாட்ட சுற்றுப் போட்டி எதிர்வரும் 28 ஆம் திகதி யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

யாழ்.சென்றல் விளையாட்டுக் கழகம் 2011 ஆம் ஆண்டு 2 ஆவது ஆண்டாக நடத்திய யாழ்.நகரில் சிறந்த கழக அணியை தெரிவுசெய்யும் நிகழ்வில் புள்ளிகள் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று இடங்களையும் பெற்ற கழகங்களும் பங்குபற்றுவது குறிப்பிடத்தக்கது.

இதில் 59 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தை பெற்றுக்கொண்ட யாழ். பல்கலைக்கழக அணியும் 51.5 புள்ளிகளைப் பெற்று 2 ஆம் இடத்தைப் பெற்றுக்கொண்ட ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழக அணியும், 47 புள்ளிகளைப் பெற்று மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொண்ட கே.ஸி.ஸி. விளையாட்டுக் கழக அணியும் இந்த முக்கோணச் சுற்றுத் தொடரில் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

28 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறும் 2 ஆவது தகுதிகாண் போட்டியில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கே.ஸி.ஸி.ஸி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

ஓகஸ்ட் மாதம் 4 ஆம் திகதி நடைபெறும் முதலாவது தகுதிகாண் போட்டியில் யாழ்.பல்கலைக்கழக அணியை எதிர்த்து ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

ஓகஸ்ட் மாதம் 11 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறும் மூன்றாவது தகுதிகாண் போட்டியில் கே.ஸி.ஸி.ஸி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து யாழ்.பல்கலைக்கழக அணி மோதவுள்ளது.

மேற்கூறப்பட்ட மூன்று போட்டிகளிலும் இருந்து புள்ளிகள் அடிப்படையில் முதல் இரு இடங்களைப் பெறும் அணி ஓகஸ்ட் மாதம் 18 ஆம் திகதி இடம்பெறும் இறுதியாட்டத்தில் மோதவுள்ளன.

2011 ஆம் ஆண்டுக்கான முக்கோண வெற்றிக் கிண்ணத்தை ஜொலிஸ்ரார் அணி கைப்பற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ங-23)

# இன்றைய ஆட்டங்கள்

கைதடி, ஜூலை 16

கைதடி வளர்மதி சனசமூக நிலையத்தின் 53 ஆம் ஆண்டு நிறைவையும் புதிய கலையரங்கு திறப்பு விழாவையும் முன்னிட்டு கைதடி வளர்மதி விளையாட்டுக் கழகம், தென்மராட்சி விளையாட்டுக் கழகங்களுக்கிடையே மின்னொளியில் நடத்தும் 'செற்அப்' முறையிலான கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று மோதும் கழகம் கைதடி குமரன் வி.க. எதிர் மறவன் புலோ அம்பிகை வி.க. (ங-288)

* * *

மட்டுவில் தெற்கு வளர்மதி சனசமூக நிலையத்தின் 47 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்தும் போட்டியில் இன்று மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு,

ஆவரங்கால் இந்து இளைஞர் வி.க. எதிர் கோப்பாய் ஐக்கிய வி.க. புத்தூர் வளர்மதி வி.க. எதிர் கிளிநொச்சி புதியதாரகை வி.க., கிளிநொச்சி மருதநிலா வி.க. எதிர் நாயன்மார்க்கட்டு பாரதி வி.க. (ங-288)

# விசேட தேவையுடையோர்க்கான போட்டிகளில் வெற்றியீட்டியோர்

வலி.வடக்கு, ஜூலை 16

விசேட தேவையுடைய மாணவர்களுக்கு இடையே நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டியில் பார்வை குறைந்த மாணவர்களுக்கான 13 வயதுப் பிரிவில் வெற்றி பெற்றவர்களின் விவரங்கள் வருமாறு,

**100 மீற்றர் ஓட்டம்**

**ஆண்கள்**

* ஜெ.வசந்தகுமார் - (தெல்லிப்பழை யூனியன் கல்லூரி)

**பெண்கள்**

* ச.மயூரா (மருதனார் மடம் இராமநாதன் கல்லூரி)

* ச.நிஷாந்தினி (பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம்)

**நின்று நீளம் பாய்தல்**

**ஆண்கள்**

* சு.லிங்கஜன்- (தெல்லிப்பழை யூனியன் கல்லூரி)

**பெண்கள்**

* ச.மயூரா (மருதனார் மடம் இராமநாதன் கல்லூரி)

* ச.நிஷாந்தினி (பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம்)

**வளையம் சுற்றுதல்**

* சு.லிங்கஜன்- (தெல்லிப்பழை யூனியன் கல்லூரி)

**வெள்ளைப்பிரம்பு நடை**

**ஆண்கள்**

* சு.லிங்கஜன்- (தெல்லிப்பழை யூனியன் கல்லூரி)

**பெண்கள்**

* ப.தர்சிகா, ச.மயூரா (மருதனார் மடம் இராமநாதன் கல்லூரி)

**முப்பரிமாண வடிவம் காணல்**

* ஜெ.வசந்தகுமார், சு.லிங்கஜன்-(தெல்லிப்பழை யூனியன் கல்லூரி)

**15 வயதுப் பிரிவு**

**ஆண்கள்**

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியைச் சேர்ந்த ந.தனேஸ் 100 மீற்றர் ஓட்டம், நின்று நீளம் பாய்தல், முப்பரிமாண வடிவம் தெரிவு செய்தல் ஆகிய போட்டிகளில் முதலாமிடத்தைப் பெற்றுள்ளார். (ங-86)

# சூடு பிடிக்கும் எச்.பி.எல். கரப்பந்தாட்டம்; ஜப்னா பிரண்ட்ஸ், யுத் ஸ்ரார் வென்றன

பண்டத்தரிப்பு,ஜூலை 16

யாழ்.மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்தின் அனுசரணையுடன் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகம் ஏனைய விளையாட்டுக்கழகங்களுடன் இணைந்து 'உதயனி'ன் ஊடக அனுசரணையுடன் ஏற்பாடு செய்துள்ள யாழ்.மாவட்டத்தின் எச்.பி.எல். கரப்பந்தாட்டப் போட்டிகள் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன. எச்.பி.எல். தொடருக்காக ஆறு அணிகள் புதிதாக அமைக்கப்பட்டு அதில் யாழ்.மாவட்டத்தின் முன்னணி கரப்பந்தாட்ட வீரர்கள் உள்வாங்கப்பட்டுள்ளார்கள். எச்.பி.எல். இன் 8 ஆவது நாள் போட்டிகள் நேற்றுமுன்தினம் அச்சுவேலி தெற்கு ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றன.

**3:0 என வென்றது ஜப்னா பிரண்ட்ஸ்**

நேற்றுமுன்தினம் நடைபெற்ற முதலாவது போட்டியில் ஜப்னா கிங்ஸ் அணியும், ஜப்னா பிரண்ட்ஸ் அணியும் விளையாடின. இந்தப் போட்டியில் 3:0 என்ற நேர் சுற்றுக் கணக்கில் ஜப்னா கிங்ஸ் அணி தோல்வியடைந்திருந்தாலும் மூன்று சுற்றுக்களிலும் எதிரணிக்கு கடும் சவாலை வெளிப்படுத்தியிருந்தது. முதலாவது சுற்றிலும் இரண்டாம் சுற்றிலும் 25:23 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் ஜப்னா பிரண்ட்ஸ் அணி கடும் போராட்டத்தின் மத்தியிலேயே வெற்றிபெற முடிந்தது. மூன்றாம் சுற்றும் இறுக்கமானதாக ஆரம்பித்திருந்தாலும் இறுதி நேரத்தில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய ஜப்னா பிரண்ட்ஸ் அணியினர் அடுத்தடுத்து புள்ளிகளைப் பெற்றுக் கொள்ள மூன்றாம் சுற்றும் 25:20 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் ஜப்னா பிரண்ட்ஸ் அணி வசமானது. இதனடிப்படையில் ஜப்னா பிரண்ட்ஸ் அணி வெற்றி பெற்றுக்கொண்டது.

**இழுபறிக்கு பின்னர் வென்றது யுத் ஸ்ரார்**

நேற்றுமுன்தினம் நடைபெற்ற இரண்டாவது போட்டியில் விறுவிறுப்பிற்கு பஞ்சம் இருக்கவில்லை. றோயல் லீட்ர்ஸ் அணியும், யுத் ஸ்ரார் அணியும் மோதிக் கொண்ட இந்த போட்டி ஐந்து சுற்றுக்களை கொண்டதாக மிக நீண்ட நேரம் நடைபெற்றிருந்தது. இதில் முதல் இரு சுற்றுக்களிலும் யுத் ஸ்ரார் அணி 25:23, 28:26 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் கடும் போராட்டத்திற்கு பின்னர் வெற்றி பெற்றிருந்தது.

எனினும் மூன்றாம் சுற்றிலிருந்து ஆட்டம் சூடு பிடிக்கத் தொடங்கியது. மூன்றாம் சுற்றிலும், நான்காம் சுற்றிலும் இரு அணிகளும் மாறி மாறி புள்ளிகளைப் பெற்ற வண்ணம் இருந்தன. எனினும் இறுதி நேரத்தில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய றோயல் அணியினர் மூன்றாம் சுற்றை 25:22 என்ற புள்ளிகள் வித்தியாசத்திலும், நான்காம் சுற்றை 25:21 என்ற புள்ளிகள் வித்தியாசத்திலும் தமதாக்கிக் கொண்டனர். எனவே தொடர்ந்து ஐந்தாவது சுற்று நடத்த வேண்டிய தேவை ஏற்பட்டது.

தீர்க்கமான ஐந்தாவது சுற்றில் இரு அணிகளும் சமபல ஆட்டத்தை வெளிப்படுத்தியிருந்தன. எனினும் இந்தப் போட்டியில் தமது முழுப் பலத்தையும் பிரயோகித்து விளையாடிய யுத் ஸ்ரார் அணியினர் 15:9 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் மூன்றாம் சுற்றை தமதாக்கிக் கொண்டனர். இதனால் நீண்ட ரேம் நடைபெற்ற இந்தப் போட்டியில் யுத் ஸ்ரார் அணியினர் 3:2 சுற்றுக்கள் என்ற அடிப்படையில் போட்டியில் வெற்றியீட்டினர்.

(ங-130)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தீவுகளுக்கு கிண்ணம்

மேற்கிந்தியத் தீவுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணிக்கும், மேற்கிந்தியத் தீவுகள் அணிக்குமிடையிலான 4ஆவது ஒருநாள் சர்வதேசப் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணி வெற்றிபெற்றுள்ளது.

இதன்படி 5 போட்டிகள் கொண்ட தொடரை ஒரு போட்டி மீதமிருக்கும் நிலையிலேயே மேற்கிந்தியத் தீவுகள் அணி 3:1 என்ற அடிப்படையில் கைப்பற்றியுள்ளது. சென் கிற்ஸ் மைதானத்தில் இடம்பெற்ற இந்தப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற மேறகிந்தியத் தீவுகள் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 49.5 பந்துப்பரிமாற்றங்களில் 264 ஓட்டங்களைப் பெற்றது. அந்த அணி ஒரு கட்டத்தில் 5 இலக்குகளை இழந்து 105 ஓட்டங்களையே பெற்றிருந்த போதிலும், பின்னிலை வீரர்கள் சிறப்பாக ஆடி சிறப்பான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றுக் கொடுத்தனர்.

துடுப்பாட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பாக கிரன் பொலார்ட் 56 ஓட்டங்களையும், மார்லன் சாமுவேல்ஸ் 46 ஓட்டங்களையும், டெவோன் தோமஸ் 37 ஓட்டங்களையும், அன்ட்ரூரசல் 29 ஓட்டங்களையும், டெரன் சமி 26 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் நியூசிலாந்து அணி சார்பாக ரிம் சௌதி, ஜேக்கப் ஓரம் ஆகியோர் தலா 3 இலக்குகளையும், டக் பிரேஸ்வெல், ட்ரென்ட் போல்ட், நதன் மக்கலம், ரொப் நிக்கல் ஆகியோர் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

265 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 49.3 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 250 ஓட்டங்களைப் பெற்று 24 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.



நியூஸிலாந்து சார்பாக போதுமானளவு இணைப்பாட்டங்கள் பகிரப்படாத நிலையில் அணியின் தலைவர் ரோஸ் ரெய்லரின் சதம் வீணாக்கப்பட்டது. துடுப்பாட்டத்தில் நியூசிலாந்து அணி சார்பாக ரோஸ் ரெய்லர் 110 ஓட்டங்களையும், ரொப் நிக்கல் 35 ஓட்டங்களையும், ரொம் லத்தம் 32 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பாக ரீனோ பெஸ்ட் 4 இலக்குகளையும், சுனில் நரைன் 10 பந்துபரிமாற்றங்களில் 20 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், அன்ட்ரு ரசல், டெரன் சமி, மார்லன் சாமுவேல்ஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு இலக்கினையும் கைப்பற்றினர். போட்டியின் நாயகனாக மேற்கிந்தியத் தீவுகளின் சுனில் நரைன் தெரிவானார். (ங)

# வெற்றியே இலக்கு

''இங்கிலாந்துக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணியின் ஒரே இலக்காக போட்டிகளை வெல்வது மாத்திரமே உள்ளது''. இவ்வாறு தென்னாபிரிக்க அணியின் வேகப்பந்து வீச்சாளர் டேல் ஸ்ரெய்ன் தெரிவித்துள்ளார்.

வெற்றி எந்த விதத்தில் பெறப்படுகின்றது என்பது முக்கியமானதல்ல எவ்வாறாயினும் வெற்றியைப் பெற்றுக் கொண்டாலே போதுமானது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

உலகின் முதற்தர டெஸ்ட் அணியைத் தீர்மானிக்க இடம்பெறவுள்ள டெஸ்ட் தொடரில் உலகின் தற்போதைய முதற்தர அணியான இங்கிலாந்து அணியும், இரண்டாம் நிலை அணியான தென்னாபிரிக்க அணியும் மோதவுள்ளன.

இந்தத்தொடரில் வெற்றிபெறும் அணிக்கு முதலாவது இடம் கிடைக்கப் பெறவுள்ளது.

இங்கிலாந்தில் வேகப்பந்து வீச்சாளர்களுக்கு அதிக உதவிகள் கிடைக்கப்பெறும் மைதானங்களில் போட்டிகள் இடம்பெறவுள்ளது என்பதோடு இரு அணிகளிலும் வேகப்பந்து வீச்சாளர்கள் உயர்தரமானவர்களாகக் கருதப்படுவதால் இத்தொடரில் வேகப்பந்து வீச்சாளர்கள் பற்றிய கவனம் அதிகமாகச் செலுத்தப்படுகிறது.

டேல் ஸ்ரெய்ன், ஜேம்ஸ் அன்டர்சன், வேர்ணன் பிலாந்தர், ஸ்ருவேர்ட் ,ரிம் பிரெஸ்னன் மோர்னி மோர்கல், லொன்வபோ சொற்சொபி, ஸ்டீவன் ஃபின் போன்ற வீரர்கள் மிகவும் திறமையுள்ளவர்களாகக் கணிக்கப்படுகின்றனர்.

உலகின் முதல்நிலை வேகப்பந்து வீச்சாளராக டேல் ஸ்ரெய்ன் காணப்படுகின்ற போதிலும் தங்களது பந்துவீச்சுக் குழுவிற்குத் தான் தலைவன் அல்ல எனத் தெரிவித்த டேல் ஸ்ரெய்ன், தங்களது அணியில் தலைவர் என்ற ஒருவர் கிடையாது எனவும், அனைத்துப் பந்து வீச்சாளர்களுக்கும் இணையான பொறுப்புக் காணப்படுகிறது எனவும், அனைவரும் தங்கள் தங்கள் பணியைச் சரிவர ஆற்ற எதிர்பார்க்கப்படுகிறார்கள் எனவும் தெரிவித்தார்.

அண்மையில் ஓய்வுபெற்ற மார்க் பௌச்சருக்கு தனது மரியாதையை வெளிப்படுத்தி டேல் ஸ்ரெய்ன், சக வீரர் ஒருவர் காயமடைந்து அவரது வாழ்க்கை முறை முழுவதுமாக மாறும் போது அது கிரிக்கெட்டைத் தாண்டிய வாழ்க்கையைப் பற்றி வெளிப்படுத்துவதாகத் தெரிவித்தார்.

எனினும் கிரிக்கெட் போட்டிகளில் பங்குபற்றவே இங்கிலாந்திற்கு வந்திருப்பதாகவும், அதைச் சரிவரச் செய்ய வேண்டும் எனவும், அதற்கான முழுமையான முயற்சிகளை மேற்கொள்வதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# ஆஸியின் அடுத்த சுப்பர் ஸ்டார்

ஆஸ்திரேலிய அணியின் அடுத்த 'சுப்பர் ஸ்டாராக' இளம் வேகப்பந்து வீச்சாளர் பாட்ரிக் கம்மின்ஸ் இருப்பார்,'' என, பிரட் லீ தெரிவித்தார்.

ஆஸ்திரேலிய வேகப்பந்து வீச்சாளர் பிரட் லீ. அனைத்து வித கிரிக்கெட்டில் இருந்தும் ஓய்வு பெற்றுள்ளார். இதனால் ஆஸி. அணிக்கு ஏற்பட்டுள்ள இழப்பு குறித்து பிரட் லீ கூறியது:

கடந்த ஒக்ரோபர் மாதம் தென்னாபிரிக்காவுக்கு எதிரான ஒருநாள் தொடரில் ஆஸ்திரேலிய அணியில் அறிமுகம் ஆனவர் பாட்ரிக் கம்மின்ஸ் (வயது-19). தவிர, தென்னாபிரிக்காவுக்கு எதிரான முதல் டெஸ்டில், 7 இலக்குகளை வீழ்த்தி அசத்தினார். இவர் எதிர்காலத்தில் ஆஸ்திரேலிய அணியின் ''சூப்பர் ஸ்டாராக' வலம் வருவார்.

19 வயது மட்டுமேயான இவர், அனைத்துப் பந்திலும் இலக்குகளை வீழ்த்த வேண்டும் என்று முயற்சிக்கிறார். போராடும் குணம் இவரிடம் உள்ளது. அதிகமாக கேள்விகள் கேட்கும் இவருக்கு, கற்றுக் கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் உள்ளது. கிரிக்கெட் தொடர் பாக எப்போது வேண்டுமானாலும், தொடர்பு கொள்ளலாம் என அவரிடம் தெரிவித்துள்ளேன்.

ஆனால், கம்மின்ஸ் எப்போதும் காயத்தால் அவதிப் படுகிறார் என, எல்லோரும் சொல்கின்றனர். தற்போது, விலா எலும்பு பகுதியில் ஏற்பட்ட காயத்தால் போட்டிகளில் பங்கேற்காமல் உள்ளார்.

இதிலிருந்து மீள்வதற்கு கிரிக்கெட் ஆஸ்திரேலியா (சி.ஏ.,) தான் உதவ வேண்டும். ஆஸ்திரேலிய கிரிக்கெட்டில் மிகப் பெரிய கண்டுபி[illegible] இவ[illegible] லீ கூறினார்.



# பதக்கம் பற்றி பதற்றமில்லை

இந்தியா சார்பாக லண்டன் ஒலிம்பிக் போட்டிகளில் பங்குபற்றும் ரென்னிஸ் வீர, வீராங்கனைகள் எத்தனை பதக்கங்களைக் கைப்பற்றுவார்கள் என்பது தொடர்பாக உறுதி வழங்க முடியாது. எனினும் பதக்கங்களை வெல்வது தொடர்பாக எங்களுக்கு பதற்றம் எதுவுமில்லை என்று இந்திய ரென்னிஸ் வீராங்கனை சானியா மிர்சா தெரிவித்துள்ளார். எனினும் அனைவரும் தங்களால் இயன்றளவு சிறப்பாக ஆடுவார்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

பதக்கங்களின் எண்ணிக்கை குறித்து முன்னரே எதிர்பார்ப்புக்களை வெளியிட முடியாது எனத் தெரிவித்த அவர், லண்டன் ஒலிம்பிக் போட்டிகளுக்குச் செல்லும் போது அனைவரும் அழுத்தத்திற்குள்ளாகியிருப்பதை ஏற்றுக்கொண்டார்.

ஆகவே தாங்கள் பதக்கங்களைப் பெற்றுவருவோம் என உறுதி வழங்க முடியாது எனவும், எனினும் தங்களால் முடிந்தளவு சிறப்பாக ஆடுவோம் எனவும் அவர் தெரிவித்தார்.

தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் கலந்து கொண்ட சானியா மிர்சாவோடு சக ரென்னிஸ் வீரர் மகேஸ் பூபதி, விளையாட்டுத் துறை அமைச்சர் அஜய் மேகன், கிரிக்கெட் வீரர் வீரேந்தர் சேவாக் ஆகியோரும் கலந்து கொண்டனர்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**Jaffna College Undergraduate Dept.**
464, Hospital Road, Jaffna.
**புதிய பிரிவுகள் ஆரம்பம் - 21.07.2012**
**AAT (SriLanka)**
Foundation, intermediate & Final
Medium - English & தமிழ்
★ க.பொ.த (சா.த) பரீட்சையில் 6 சித்திகளுடன் உங்கள் பதிவினை மேற்கொள்ளலாம். (c/1442) (6.3)

# இன்னும் சாதிப்பேன்



நடக்க உள்ள இலங்கைத் தொடர், '20/20' உலகக் கிண்ணத் தொடருக்கு நல்ல பயிற்சியாக அமையும் என்பதால், சிறப்பாக செயற்பட முயற்சிப்பேன்," என, இந்திய வீரர் ரோகித் சர்மா தெரிவித்தார்.

மேற்கிந்தியத் தீவுகளுக்கு சென்றுள்ள இந்திய "ஏ' அணி, 3 நான்கு நாள்கள் கொண்ட போட்டி, ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் எதிர்பார்த்த வெற்றியைப் பெறவில்லை. நான்கு நாள் போட்டியில் எதிர்பார்க்கப்பட்ட ரோகித் சர்மா, ஒரு இன்னிங்ஸில் மட்டும் அதிகபட்சமாக 94 ஓட்டங்களை எடுத்தார். அடுத்த 5 இன்னிங்ஸ்களில் 51 ஓட்டங்கள் மட்டுமே எடுத்து, அதிக ஓட்டங்கள் எடுத்த இந்திய வீரர்கள் வரிசையில் 6ஆவது இடம் பெற்றார்.

பந்து வீச்சில் 76 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி, 9 இலக்குகளை வீழ்த்தி, இந்தத்தொடரில் அதிக இலக்குகளை வீழ்த்திய இந்திய வீரர்கள் வரிசையில் இரண்டாவது இடத்தைப் பெற்றார் ரோகித் சர்மா.

இதுகுறித்து அவர் கூறியதாவது-

"மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான தொடரில் இன்னும் சிறப்பாக செயற்பட்டிருக்க வேண்டும். இருப்பினும், இது எனக்கு மோசமான தொடர் அல்ல. அதேநேரம், அணியின் தோல்விக்கு, அங்குள்ள ஆடுகளங்கள், போட்டி அட்டவணை போன்றவற்றை குற்றம் சொல்ல விரும்பவில்லை. ஒட்டுமொத்த அளவில், அணியாக இணைந்து, சிறப்பாகச் செயற்படத் தவறியதே தோல்விக்கு காரணம்.

நாங்கள் இளம் வீரர்கள் தான். மேற்கிந்தியத் தீவுகள் ஆடுகளங்களுக்கு ஏற்ப துடுப்பாட்டம் மற்றும் பந்து வீச்சு என்பவற்றில் இன்னும் பயிற்சி எடுத்திருக்க வேண்டும். இதற்கான வாய்ப்பு நமக்கு கிடைக்கவில்லை. நாங்கள் அங்கு சரியாக விளையாடவில்லை என்பது தான் உண்மை.

என்னைப் பொறுத்தவரை பந்து வீச்சில் முக்கியமான இலக்குகளை வீழ்த்தியமை மகிழ்ச்சி. எதிர்வரும் இலங்கைத் தொடரின் போது அணியில் வாய்ப்புக் கிடைக்கும் பட்சத்தில், இதைத் தொடர்வேன் என்ற நம்பிக்கை உள்ளது. இத்தொடர் 20/20 உலகக் கிண்ணத் தொடருக்குப் பயிற்சியாக அமையும் என்பதால், இன்னும் சிறப்பாக செயற்பட முயற்சிப்பேன்"

இவ்வாறு ரோகித் சர்மா கூறினார்.

**Jenny Cabs**




Dropping Charge 1km - 45/=
Up & Down Charge 1km - 35/=
**CALL TAXI**
077 4949555
No.15, Sirampiyadi lane,(above cosy Hotel ) Jaffna.
Hotline: 077 4949555 Land Phone: 021 222 8250
(சி/1462)(6-7-8)

**Ananda Homes and Constructions**
**பருத்தித்துறை வீதி, சாவகச்சேரி**
★ உங்கள் வீட்டிற்கு அழகாகவும் நேர்த்தியாகவும் மாபிள் (Tile) பதிப்பதற்கும். (1 ச.அடி-49/=)
★ நவீன குளியலறை Mordern Bathrooms அமைப்பதற்கும்.
★ நவீன குசினி அமைப்பு - Mordern kitchen (Pantry System) அமைப்பதற்கும் தொடர்பு கொள்ளுங்கள்
NOTE - சகல வேலைகளும் கைதேர்ந்த (Skilled) வேலை ஆள்களால் மேற்கொள்ளப்படும்.
**அழையுங்கள்- தேவா**
(20482) (6.7.3) **0774163146, 0786155929**

**பணியாளர் தேவை**
யாழ். நகரில் இயங்கும் பிரபல இலத்திரனியல் விற்பனை நிலையம் ஒன்றிற்கு Power Tools, Generators, Aircompresers, Welding Transformers, Grinders and Drills விற்பனையில் அனுபவம் உள்ள பணியாளர்கள் தேவை. சுயவிவரக் கோவையுடன் நேரில் வரவும். கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.
தொடர்பு -
**Malabar**
**81, Stanley Road, Jaffna.** (c/1502) (6.7.3)

**French Language Center**
யாழ்ப்பாணத்தில் சர்வதேச தரம் வாய்ந்த FRENCH மொழி கற்பித்தலை மேற் கொள்ளும் ஒரே ஒரு நிறுவனம்
பூரண தமிழ்,French விளக்கத்துடன் வகுப்புக்கள் மேற்கொள்ளப்படும்
ஆசிரியர்- V.ஜெகன்
(Paris இல் ஆசிரியப் பயிற்சி பெற்றவரும், பல வருடகால அனுபவம் வாய்ந்தவரும்)
பதிவுகளை உடன் மேற்கொள்ளவும்
வெகு விரைவில் பிரெஞ்சு Spoken class ஆரம்பமாக உள்ளன. (முதல் 10 மாணவர்களுக்கு மட்டுமே அனுமதி) ஆர்வமுள்ளோர் பதிவுகளை மேற்கொள்ளவும்
விபரங்களுக்கு :- **UNI - ICT Campus**
No : 83, Palaly Road, Kantharmadam Jaffna
Jaffna Road, Manipay (பிரதேச சபை முன்பாக)
T.P : 077 9789456

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



பாஷையூரைச் சேர்ந்த
**தியோனிஸ் வின்சன் கிளேரோ**
M.Sc (Civil Engineering)
(யா/புனித பத்திரிசியார் கல்லூரி மாணவன்)
கடந்த 12.07.2012 அன்று சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தில் விஞ்ஞான முதுமாணி (Master of Science) பட்டம் பெற்றதையிட்டு மகிழ்வுடன் அவரை மேன் மேலும் பல பட்டங்கள் பெற்று நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்
பாஷையூர், யாழ்ப்பாணம் குடும்பத்தினர்
(20485)(6-7-8)

**தேவை**
யாழ்ப்பாணத்தில் பிரதான வீதிக்கருகில் வீடு வாடகைக்குத் தேவை
தொடர்பு - 077 1807672
(சி/1517) (3)

# மணல் விற்பனைக்குண்டு

கட்டட வேலைக்கும், பூச்சுவேலைக்கும் சிறந்த மணல் மண் இப்போது உங்கள் இடத்திற்கே கொண்டு வந்து தரப்படும்.
**4 டிரக்டர் - 21, 000/=**
தொடர்புகளுக்கு: ரமேஸ்
**072 2694462**
(20488) (6-7-8)

**கருத்தரங்கு**
(A/L 2012)
கணக்கீடு
ஆசிரியர் B. முகுந்தன்
(BBA (Hons) MBA (Fm.Spl)
இடம்- பொருளியற் கல்லூரி
நாவலர் றோட், யாழ்ப்பாணம்.
காலம்- 17.07.2012 செவ்வாய் / 19.07.2012 வியாழன் } 1-5 மணி
வெளிமாணவர்களும் பங்குபற்றலாம்
(சி/1516) (6.7.3)

**செங்கல் விற்பனைக்கு**
மொத்தமாகவும், சில்லறையாகவும் செங்கற்கள் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.
பிரணவன் என்ரபிறைசஸ் முத்திரைச்சந்தி, பருத்தித்துறை வீதி, நல்லூர் யாழ்ப்பாணம்.
T.P :077 381 8799
(20126)(6-7-8)

# இன்று தொடக்கம் 16.07.2012
**த. குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ் ஸ்தாபனத்தின்**
சிறப்பு ஆடித்தள்ளுபடி





அனைத்து புடைவை வகைகளுக்கும்
5% தொடக்கம் 10% விலைக்கழிவு
த. குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்
44, 42 பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம்
(சி/1513) (6-7-8)

**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**
BCHS
**அனைத்துப் பிரிவுகளுக்குமான புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன**

| Batch I: 21-07-2012 | Batch II: 22.07.2012 | Batch III :23.07.2012 |
|---|---|---|
| 09.00 - 12.00 | 03.00 - 5.00 | 09.00 - 12.00 |

**BI Exam - Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது**
City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் IELTS - 4.5 இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.
2 Months

**IELTS (Students Visa மூலமாக வெளிநாடு செல்பவர்களுக்கானது)**
(International English Language Testing System)
We guarantee minimum band 5.0 Upwards
2½ Months

**A1 Exam - Sponsor /Settlement Visa மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை**
◈ U.K. அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது
◈ எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கு தோற்ற முடியும்
◈ சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
◈ நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
◈ ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது
2 Months

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

| Head Office | Jaffna Branch | Vavuniya Branch |
|---|---|---|
| Head Office: 30 -1/14, w.A.De Silva Mw. Colombo - 6 Tel: 2500207 | Jaffna Branch: No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550 | Vavuniya Branch: No. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavarpulliyamkulam, Vavuniya. Tel: 024 324 5287 |

Hot Lines: 0777585913 / 0777 222 422 / 071 4299935 / 0777730074
(சி/1499)(6-7-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16.07.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.